வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு.

27°c 26°c


சுடர்: 28 | கதிர்: 301 | வள்ளுவர் ஆண்டு: 2044 | புரட்டாதி 7, திங்கள் 23.09.2013

# வடக்கில் 2/3 பெரும்பான்மையுடன் கூட்டமைப்பு சரித்திர வெற்றி

## மூன்றரை லட்சம் வாக்குகளை தம் வசமாக்கியது

யாழ்ப்பாணம், செப்.23
வடக்கு மாகாணத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக பெரு வெற்றியைப் பெற்றுள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மொத்தமுள்ள 38 ஆசனங்களில் 30 ஆசனங்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் 7 ஆசனங்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியும், ஓர் ஆசனத்தை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் கைப்பற்றியுள்ளன.

30 ஆசனங்களைப் பெற்றதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு தமிழர்களின் தனிப் பெரும் கட்சியாக ஆட்சி அமைக்க உள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. வடக்கின் எல்லாத் தொகுதிகளிலும் அமோக வெற்றியீட்டி சரித்திரச் சாதனை படைத்த கூட்டமைப்புக்கு தமிழ் மக்களின் 3,49,992 வாக்குகள் கிடைத்துள்ளன.

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும், தமிழக அரசியல் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாழ்த்துக்களை கூறி வருகின்றனர்.

வடக்கின் 5 மாவட்டங்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல்லாயிரக் கணக்கான வாக்கு வித்தியாசத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை வென்றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 27, 620 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி 195 வாக்குகளையும், மக்கள் விடுதலை முன்னணி 30 வாக்குகளையும் பெற்றுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழரசுக்கட்சி 36, 323 வாக்குளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 7.737 வாக்குகளையும், ஈழவர் விடுதலை முன்னணி 300 வாக்குகளையும்ஜனநாயகஐக்கியகூட்டமைப்பு 60 வாக்குகளையும் பெற்றன.

வவுனியா மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 40,324 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 16, 310 வாக்குகளையும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 1967 வாக்குகளையும் பெற்றன.

மன்னாரில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 31, 818 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 14,696 வாக்குளையும், ஐக்கிய தேசியக் கட்சி 180 வாக்குகளையும் பெற்றன.

யாழ்.மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 213, 907 வாக்குகளையும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 35, 995 வாக்குளையும், ஐக்கிய தேசியக் கட்சி 855 வாக்குகளையும் பெற்றன. (ங)

## வடமாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பில் வென்றோர்

### யாழ்.மாவட்டம்


விக்னேஸ்வரன் 132, 255 | அனந்தி 87870 | சித்தர் 39715 | ஆனால்ட் 26888 | சி.வீ.கே. 26747 | சஜதீபன் 23669 | சிவாஜிலிங்கம் 23660


ஐங்கரன் 22268 | சுகிர்தன் 20541 | சயந்தன் 20179 | சார்வேஸ் 16761 | விந்தன் 16463 | சிவயோகன் 13479 | பரஞ்சோதி 16359

### கிளிநொச்சி மாவட்டம் / முல்லைத்தீவு மாவட்டம்


அரியரத்தினம் 27,264 | குருகுலராஜா 26,467 | பசுபதிப்பிள்ளை 26,232 | அன்ரனி ஜெகநாதன் 9, 309 | சிவமோகன் 9,296 | ரவிகரன் 8,868 | கனகசுந்தரசுவாமி 8,702

### மன்னார் மாவட்டம் / வவுனியா மாவட்டம்


டெனீஸ்வரன் | குணசீலன் | சிராய்வா | சத்தியலிங்கம் 19,656 | லிங்கநாதன் 11,901 | இந்திரராசா 11,535 | தியாகராஜா 11681

## முன்னர் எப்போதுமே காணா சரித்திர வெற்றி

### கூட்டமைப்பு நேற்று அறிவிப்பு. தமிழ் மக்களுக்கு நன்றியும் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், செப்.23
வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுக் கொண்ட வெற்றி நாட்டின் அரசியல் சரித்திரத்தில் முன்னெப்போதும் ஒருவரும் அடையாத அமோக வெற்றி என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் நேற்று தெரிவித்தார்.

நேற்று பிற்பகல் 2 மணிக்கு, யாழ். ரில்கோ விடுதியில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தில் ஏறத்தாழ 80 வீதமான ஆசனங்களை கூட்டமைப்பு கைப்பற்றியுள்ளது என்று அவர் தெரிவித்தார். குறிப்பாக, யாழ்.மாவட்டத்தில் 90 வீதமான ஆசனங்களை கூட்டமைப்பு தனதாக்கி உள்ளது என்றும் அவர் அறிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் இந்த வெற்றியானது 1977 ஆம் ஆண்டு வட்டுக் 21

## மத்திய, வடமேல் மாகாணங்கள் கைப்பற்றியது ஆளும் கட்சி

கொழும்பு,செப் 23
மத்திய, வடமேல் மாகாண சபைக்களுக்கான தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தலைமையிலான, ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு வெற்றி பெற்றது.

மத்திய மாகாணத் தேர்தலில் நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை ஆகிய அனைத்து மாவட்டங்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றி பெற்றுள்ளது.

அந்தக் கட்சிக்கு அங்கு மொத்தமாக 36 இடங்களும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு 16 இடங்களும், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சிக்கு 2 இடங்களும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பி பிரிவுக்கு 2 இடங்களும், மலையக மக்கள் முன்னணிக்கு ஓர் இடமும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு ஓர் இடமும் கிடைத்தன.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இங்கு ஆளும் கட்சியில் போட்டியிட்டமை குறிப்பிடத்தக்கது.

கண்டி மாவட்டத்தில் ஆளும் கட்சி 16 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 9 இடங்களையும், சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி 2 இடங்களையும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஓர் இடத்தையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஓர் இடத்தையும் பெற்றுள்ளன.

மாத்தளையில் ஆளும் கட்சி 7 இடங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி 3 இடங்களையும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பி பிரிவு ஓர் இடத்தை யும் பெற்றுள்ளன.

நுவரெலியா மாவட்டத்தின் அனைத்துத் தொகுதிகளிலும் முன்னணி வெற்றி பெற்றது.

## ஈழத் தமிழர் பிரச்சினையில் மீண்டும் இந்தியா அக்கறையோடு பங்களிப்பு

யாழ்ப்பாணம், செப். 23
இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் இடையில் சிறிது காலம் ஒதுங்கியிருந்த இந்திய அரசு மீண்டும் தனது பங்களிப்பை வழங்கத் தொடங்கியிருக்கின்றது. அந்தப் பங்களிப்பு ஆக்கபூர்வமான முறையில் அமைந்திருக்கிறது என்று தெரிவித்தார் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

யாழ்.ரில்கோ ஹோட்டலில் நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

இந்தியா ஆரம்பத்தில் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அதிகளவு பங்களிப்பை வழங்கி வந்தது. எங்களுக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண் 21

## சமஷ்டி பற்றி சிங்கள மக்கள் அரசுக்கு பாடமெடுக்க வேண்டும்

### இதுவே தான் அவர்களுக்கு சொல்லும் செய்தி என்கிறார் வடக்கு முதல்வர்

யாழ்ப்பாணம், செப். 23
சிங்கள மக்கள் தங்கள் அரசுக்கும், அரசியல் வாதிகளுக்கும் சமஷ்டி பற்றி பாடம் எடுக்க வேண்டும். அதன் பின்னர் தான் இரு இனங்களும் இணைந்து வாழும் நிலை தோன்றும் இவ்வாறு தெரிவித்தார்வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன்.

யாழ். ரில்கோ கோட்டலில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிங்கள மக்கள் ஒரு போதும் கூட்டமைப்பு 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் ஆணையை மஹிந்த மதிக்க வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 23

வடமாகாண ஆட்சிப் பொறுப்பை கையேற்று இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசிடம் புதிதாக எதையும் கேட்கவில்லை. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியா உட்பட உலக நாடுகளுக்கும் எமக்கும் வழங்கிய வாக் குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

13 ஆவது அரசியல் திருத்தத்தில் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கும் அப்பால் சென்று தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை வழங்குவேன் என்று அவர் சொல்லியிருந்தார்.

அதன் சாராம்சத்தை உள்ளடக்கியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டது. எமது மக்கள் அதனை அங்கீகரித்து எமக்கு ஆணை வழங்கியுள்ளனர். இறைமையுள்ள ஓர் அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதி மக்கள் ஆணைக்கு மதிப்புளிக்க வேண்டும் - என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன்.

நேற்று மாலை யாழ். ரில்கோ ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்சி. நாங்கள் எங்களுடைய கொள்கை விளக்கங்களைக் கூறுவோம். மாகாண சபை நிர்வாகத்தில் தலையிட மாட்டோம். சுதந்திரமாக அது இயங்க வேண்டும்.

அதிகாரங்கள் குறைவாகக் காணப்பட்டாலும் மாகாண ஆட்சி முறைமை வந்த பின் அரசும் மக்களின் ஆணையை மதிக்க வேண்டும். அரசால் நியமிக்கப்பட்ட நல்லிணக்க ஆணைக்குழு மற்றும் 2012, 2013 ஆம் ஆண்டுகளில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பனவற்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் படியும் சர்வதேச அழுத்தங்களினாலும் வட மாகாண சபை உருவாக்கப்பட்டுள்ளது.

எனவே ஆரம்ப கட்டமாக எமது மாகாண சபைக்கு உள்ள அதிகாரங்களின் படி வழங் கப்பட வேண்டிய விடயங்களை எமது மத்திய அரசுடன் பேசி அதைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அதை வழங்க வேண்டியது அரசின் கடமை.

நாம் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் கலந்து கொள்ள ஒரு போது மறுக்கவில்லை. தெரிவுக் குழுவுக்கு செல்லும்முன் எமது பிரச்சினைக்கு எந்த வகையிலான தீர்வைக் காணப் போகிறார்கள்? ஏற்கனவே எங்களுடைய தீர்வுத் திட்டம் தொடர்பான ஆலோசனைகளை அரசுக்கு எழுத்து மூலம் சமர்ப்பித்துள்ளோம். எமது ஆலோசனைகள் தொடர்பாக அரசின் நிலைப்பாடு என்ன? அரசு முன் வைக்கும் தீர்வுத் திட்டம் என்ன? என்பதை அறிவிக்க வேண்டும். அதன் அடிப்படையில் நாடாளுமன்ற தெரிவுக் குழுவில் பேச முடியும் வெறுங் கையுடன் போய் எதைப் பேசுவது அரசு அதன் தீர்வுத் திட்டத்தை முன் வைத்தால் அதனை பரிசீலனை செய்து நாடாளுமன் தெரிவுக்குழுவில் கலந்து கொள்ள தயார்.



வடமாகாணத் தேர்தலை எப்படியாவது தடுத்து நிறுத்தி விடுவதற்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. பல இராணுவ அத்துமீறல்கள், அடாவடித் தனங்கள் தாக்குதல்கள் எனப் பல இடையூறுகள் ஏற்படுத்தப்பட்டன. அத்தனை அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தான் மக்கள் வாக்களித்தனர். அச்சுறுத்தல்கள் இல்லை என்றால் நாம் நூறுவீதமான வெற்றியைப் பெற்றிருப்போம்.

முன்பு போர் நிலவிய போது இங்கு இராணுவம் தேவைப் பட்டது. இப்போது போர் முடிந்து விட்டது. இராணுவம் அவசியமில்லை. தேவைக்கு அதிகமாகவுள்ள இராணுவம் அகற்றப் படவேண்டும் பின்னர் படிப்படியாக ஏனைய இராணுவத்தை அகற்ற அழுத்தம் கொடுப் போம். இதைத்தானே நல்லிணக்க ஆணைக்குழுவும் பரிந்துரை செய்துள்ளது.

தமிழ் நாட்டில் ஈழத் தமிழர் விடயம் தொடர்பாக காட்டப் பட்ட ஆதரவும், அக்கறையும் எங்களுக்கும் பெரிதும் உதவியுள்ளன .ஆனால் தமிழ் நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் ஒன்று பட்டு ஒரே குரலில் ஒரே தீர்மானமாக அவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும். அதுவே எங்களுக்கு நன்மை பயக்கும் - என்றார்.

## மாகாண சபைத் தேர்தல்

### வட மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் % | ஆசனம் |
|---|---|---|---|
| த.தே.கூ. | 353,595 | 78.48 | 28+2 |
| ஐ.ம.சு.மு. | 82,838 | 18.38 | 7 |
| மு.கா. | 6,761 | 1.50 | 1 |
| ஐ.தே.க. | 3,062 | 0.68 | - |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 450,574 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 35,239 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 485,813 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 719,477 |

### வட மேல் மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் % | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு. | 705,188 | 66.43 | 34 |
| ஐ.தே.க. | 257,011 | 24.21 | 12 |
| ஜனநாயக கட்சி | 46,114 | 4.34 | 3 |
| மு.கா. | 27,860 | 2.62 | 2 |
| ஜே.வி.பி. | 19,674 | 1.85 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 1,061,487 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 53,215 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 1,114,702 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 1,754,218 |

### மத்திய மாகாணம்

| கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் % | ஆசனம் |
|---|---|---|---|
| ஐ.ம.சு.மு. | 716,247 | 60.16 | 36 |
| ஐ.தே.க. | 330,815 | 27,79 | 16 |
| ஜனநாயக கட்சி | 45,239 | 3.80 | 2 |
| இ.தொ.கா. | 29,285 | 2.46 | 2 |
| ம.ம.மு. | 24,913 | 2.09 | 1 |
| மு.கா. | 17,788 | 1,49 | 1 |

| | |
|---|---|
| செல்லுபடியான வாக்குகள் | 1,190,508 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 82,161 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 1,272,669 |
| பதிவுசெய்யப்பட்ட வாக்குகள் | 1,889,557 |



உதயன் அலுவலகத்தில் கூடிய வாசகர்கள்

உதயன் பத்திரிகையின் விசேட பதிப்பு நேற்று மாலை புதிய தகவல்களுடன் வெளியாகி இருந்தது. உதயன் வாசகர்கள் தங்களின் அபிமானப் பத்திரிகையைப் பெற்றுக் கொள்வதற்காக நூற்றுக்கணக்கில் அலுவலகத்தை முற்றுகையிட்டிருந்தனர். அவர்களைச் சமாளிப்பது பெரும்பாடாக இருந்தது. அவர்கள் திரண்ட வேளையில்.........(ஓ-21)

இன்றைய உதயனில் சில செய்திகள் நேற்றைய விசேட பதிப்பில் வெளியாகி இருந்தன என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்

## வருந்துகின்றான் உதயன்

நேற்றைய உதயனில் அறிவித்தவாறு விசேட பதிப்பை சரியான நேரத்தில் வெளியிட முடியாமல் போய் விட்டது. செய்திகள், தகவல்கள், விருப்பு வாக்குகள் விவரங்கள் போன்றவற்றை பெற்றுக்கொள்வதில் ஏற்பட்ட தாமதமே அதற்குக் காரணம். நேரம் பிந்திவிட்டதால் தூர இடங்களுக்கு பத்திரிகைப் பிரதிகளை அனுப்ப முடியாமல் போய் விட்டது. உதயனுக்காக ஆவலுடன் காத்திருந்த முகவர்கள் மற்றும் எமது அபிமான வாசகர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்கள், அசௌகரியங்களுக்கு உதயன் வருந்துகின்றான்.

# இணைந்து போகத் தயார்

"வடமாகாண சபை ஆட்சியை மூன்றில் இரண்டு பெரும்பான்மை யுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றியுள்ள நிலையில், அமையவுள்ள வடமாகாண சபையையும் இணைத்துக் கொண்டு செயற்பட அரசு தயார்" என்று தெரிவித்தார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பஸில் ராஜபக்ஷ.

வடக்கு மக்கள் தமக்கு வழங்கிய அதிகாரத்துக்கமைய அவர்களைக் கைவிடாமல் பாதுகாக்க வேண்டியது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொறுப்பாகும். அதிகாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அரசின் தோள்களில் சுமத்திவிட முடியாது என் றும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல்களின் முடிவுகள் குறித்து விளக்கமளிக்கும் விசேட ஊடகவியலாளர் சந்திப்பு கொழும்பிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை இடம்பெற்றது. இந்தச் சந்திப்பு நிறைவடையும் தருணத்தில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் [illegible] தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அமையவுள்ள வடமாகாண சபையையும் எம்முடன் (அரசுடன்) இணைத்துக்கொண்டு செயற்படத் தயாராக உள்ளோம். வடக்குத் தமிழர்கள் தமக்கு வழங்கிய அதிகாரத்துக்கமைய அந்த மக்களுக்கு அபிவிருத்தி, மகிழ்ச்சி ஆகியவற்றைப் பெற்றுக்கொடுத்து ஐக்கிய இலங்கைக்குள் வாழ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வடமாகாண சபைத் தேர்தலை நீதியானதாகவும் - சுதந்திரமானதாகவும் நடத்த ஜனாதிபதியும், இராணுவத்தினருமே நடவடிக்கை மேற் கொண்டனர். வடமாகாணத் தேர்தலை நடத்துவதற்கு அங்குள்ள அரச அதிகாரிகள் எந்த உதவியையும் செய்யவில்லை. அனைத்து நடவடிக்கைகளையும் இராணுவத்தினரே மேற் கொண்டனர். இராணுவத்தினருக்கு எதிராக பலதரப்பட்ட தரப்பினரும் பலவாறான விமர்சனங்களை முன் வைத்தபோதும், அவர்கள் பொறுமையுடன் சிந்தித்துச் செயற்பட்டனர்.

**அடுத்த தேர்தலில் அதிக வாக்கு பெற முயற்சிப்போம்**

வடமாகாணத்தில் அளுந்தரப்பு சார்பில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்துகொண்டு அடுத்து வரும் தேர்தல்களில் அதிகப்படியான வாக்குகளைப் பெற நடவடிக்கை எடுப்போம்.

**பொறுப்பை எமது தோளில் சுமத்துவது தவறு**

வடமாகாண மக்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அதிகாரம் வழங்கியுள்ளனர். இதற்கேற்ப அது செயற்பட வேண்டும். அதிகாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு, மக்களைப் பாதுகாக்கும் பொறுப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எமது தோள்களில் சுமத்திவிட முடியாது. அப்படிச் செய்வது தவறு.

**காணி, பொலிஸ் அதிகாரங்கள் எது சரியென பேசிப் பார்ப்போம்**

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது குறித்து இரு தரப்பினரும் பேச வேண்டும். இந்த அதிகாரங்கள் குறித்து அவர்கள் ஒன்றைக் கூறுகின்றனர். நாம் ஒன்றைக் கூறுகின்றோம். எனவே, யார் கூறுவது சரி எனப் பார்க்க வேண்டும். காணி, பொலிஸ் அதிகாரங்களில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதே அரசின் நிலைப்பாடாகும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரணியில் சரியான முகவரிக்கு தபாலட்டைகள் அனுப்பப்படவில்லை

### பிரதேச மக்கள் விசனம்

வரணி, செப். 23

வடமாகாணத்தின் மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் யாழ்.மாவட்ட தேர்தல் திணைக் களத்தால் வரணி மாசேரி கிராம அலுவலர் பிரிவில் வசிக் கும் வாக்காளருக்கு அனுப் பப்பட்ட உத்தியோகபூர்வ வாக் காளர் அட்டைகள் வரணி வடக்கு, வரணி என்று விலாச மிடப்பட்டு அனுப்பப்பட்டுள் ளன.

25 வருடங்களுக்கு முன்பு வரணி வடக்கு கிராம அலு வலர் பிரிவில் இருந்து மாசேரி கிராம அலுவலர் பிரிவு பிரிக் கப்பட்டது. அதன் பின்பு மாசேரி வரணி என்றே முகவரியிடப் பட்டு அழைக்கப்பட்டு வரும் நிலையில் தேர்தல் திணைக் களம் உரிய இடாப்பில் இது வரை உரிய விலாச மாற் றத்தை மேற்கொள்ளவில்லை.

இதன்காரணமாகவே தேர் தல் இடம்பெறும் சமயங்களில் குறித்த பிரதேச மக்களின் வாக்காளர் அட்டைகள் வரணி வடக்கு என்றே முகவரியி டப் பட்டு அனுப்பப்படும் நிகழ்வு தொடர் கதையாக உள்ளது.

இந்த முகவரி மாற்றம் தொடர்பில் குறித்த வாக்காளர் அட்டைகள் விநியோகத்தின் போது தபால் திணைக்கள ஊழியர்களும் சிரமப்படு கின்றமை குறிப்பிடத்தக்கது.

எனவே யாழ்.மாவட்ட தேர் தல் திணைக்களம் உரிய பிரதேச மக்களின் வாக்காளர் இடாப்பில் குறித்த விலாச மாற் றத்தை மேற்கொள்ள வேண் டும் என புத்திஜீவிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது. (வ-122)

## கூட்டமைப்பின் அமோக வெற்றியை அடுத்து

# ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி கொண்டாட்டம்

அச்சுவேலி, செப். 23

தமிழ்த் தேசிய கூட்டமைப் பின் அமோக வெற்றியை நள்ளிரவு வேளையிலேயே பட்டாசு வெடி கொளுத்தி ஆர வாரத்தோடு குதூகாலமாகக் கொண்டாடினர்.

> தேர்தலின் வெற்றி நிலவரங் கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலை யில் வெளிவரத் தொடங்கியது. வானொலிகள் மூலமும் இணையத்தளங்கள் மூல மும் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதும் இளைஞர் மத்தியில் இனம்புரியாத ஆர் வமும் குதுகாலமும் மேலிட் டது.

சனிக்கிழமை நள்ளிரவுக்குப் பின்னர் வடக்கு மாகாணத் தேர்தலின் வெற்றி நிலவரங் கள் உறுதிப்படுத்தப்பட்ட நிலை யில் வெளிவரத் தொடங்கி யது. வானொலிகள் மூலமும் இணையத்தளங்கள் மூல மும் முடிவுகள் வெளிவரத் தொடங்கியதும் இளைஞர் மத்தியில் இனம்புரியாத ஆர் வமும் குதுகாலமும் மேலிட் டது.

இந்த நிலையில் நள்ளிரவு வேளையிலேயே பட்டாசு வெடிகளை கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத் தினர்.

கிராமப்புறங்களில் பரவலாக நள்ளிரவு வேளை பட்டாசு வெடிச் சத்தம் கேட்பதை அவ தானிக்கக் கூடியதாக இருந் தது பாதுகாப்பு தரப்பினரின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வாக்களிப்பு நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மூன்றில் இரண்டுக்கு மேல் ஆசனங்களைப் பெற்று வெற்றி யீட்டியிருப்பது வயது வேறுபா டின்றி பலரையும் உணர்வு பூர்வமாக சிந்திக்கத் தூண்டி யுள் ளது. கூட்டமைப்பின் வெற்றி தொடர்பாக பலரும் பேசிக்கொள்கின்றனர். (வ-11)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்து மகாசபை வாழ்த்து

யாழ்ப்பாணம், செப். 23

வடமாகாணத்தில் வரலாற் றில் மகத்தான வெற்றியைப் பெற்றுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு இந்து மகா சபை வாழ்த்துக்களைத் தெரி வித்துள்ளது.

வடமாகாண சபைத் தேர்த லில் வெற்றிபெற்று முதல மைச்சராகத் தெரிவு செய்யப் பட்டுள்ள விக்னேஸ்வரன் மற்றும் அவரது குழுவின ரும் தமக்கு கிடைத்துள்ள வெற்றியைப் பயன்படுத்தி தமிழ் மக்களது துன்ப, துய ரங்களை மாற்றியமைக்க வேண்டும்.

ஆன்மிக, சமூக, கலாசார, பரிணாமத்தில் தமது பணி களை செவ்வென நிறை வேற்ற வேண்டும் எனவும் ஆசி வழங்கியுள்ளது. (வ-14)

## நாகர்கோவில் மாணவர் படுகொலை

# 18 ஆவது வருட நினைவு நேற்று

நாகர்கோயில் பாடசாலை சிறார்களின் படுகொலை என்பது 1995 செப்ரெம்பர் 22 ஆம் திகதி நாகர் கோயில் மத்திய பாடசாலையில் இலங்கை விமானப் படையி னரின் குண்டுவீச்சில் 39 மாணவர்கள் உயிரிழந்த 18 ஆவது ஆண்டு நினைவு தினம் நேற்றாகும்.

அன்றைய தினம் பிற்பகல் 12:30 மணியளவில் மதிய நேர இடைவேளைக்கு மணி யடித்த போது பிள்ளைகள் வெளியில் வந்து விளையாடிக் கொண்டி ருந்தனர். பிற்பகல் 12.50 மணிக்கு இலங்கை விமானப் படைகளின் 'புக்காரா' விமானங்கள் குண்டுகளை கண்மூடித்தனமாக வீசின.

எதுவும் அறியாத மாண வர்கள் மரமொன்றின் கீழே பதுங்கிக் கொண்டனர். இந்தத் தாக்குதல்களால் மரத்தின் கீழே நின்ற 25 சிறார்கள் உடல்சிதறி அநியாயமாகக் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலின்போது மொத்தம் 39 பேர் அந்த இடத் திலேயே கொல்லப்பட்டனர். 200 பேர் வரையில் படுகாயம டைந்தனர். இதில் கொல்லப் பட்டவர்களில் 6 வயதுக் குழந்தை முதல் 16 வயது சிறுவன் வரை அடங்குகின்றனர்.

# மின்கம்பத்துடன் மோதியது கார் கரவெட்டியில் 3 பேர் படுகாயம்



கிளிநொச்சி, செப். 23

கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு அருகிலுள்ள மினகம்பத் துடன் கார் மோதியதில் 3 பேர் படுகாயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் நடைபெற்றது.

இதில் பெருந்தெரு புலோலி தெற்கு புலோலியைச் சேர்ந்த ஆ.ஆத வன் (வயது-63) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலை யிலும் ஆ.சீவரத்தினம் (வயது-62), மா.மணிமேகன் (வயது-38) ஆகி யோர் மந்திகை ஆதார வைத்தியசாலையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:

ஒரு மாதம் நிரம்பாத குழந்தைக்குச் சுகவீனம் ஏற்பட்டதைத் தொடர்ந்து வாடகைக் காரில் வைத்தியரிடம் சென்றுவிட்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்த போது வேகக் கட்டுப்பாட்டை இழந்த வாடகைக்கார் கரவெட்டி பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள மின்கம்பத்துடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள் ளது. இதில் தெய்வாதீனமாக ஒரு மாதம் நிரம்பாத சிசுவும் தாயும் பாதுகாப்பாக வீடு திரும்பினர். (து-422)

## தோல்வியால் ஏற்பட்ட விரக்தியில் வவுனியாவில் பொதுமக்கள் மீது தாக்குதல்

வவுனியாவில் தேர்தலில் தோல்வியுற்ற ஆளும்கட்சி வேட் பாளர் ஒருவரின் சகாக்கள் வீதியால் சென்ற பொதுமக்களைத் தடிகளால் தாக்கியுள்ளார்கள்.

நேற்றுப் பிற்பகல் வேளையில் வவுனியா கூமாங்குளப் பகுதியிலும் நெளுக்குளம் சுடலைப் பகுதியிலும் வைத்து அந்த வீதியால் சென்ற பொதுமக்கள் மீது கற்களால் எறிந்த துடன் தடிகளாலும் தாக்கியுள்ளனர்.

அதனையடுத்து அந்தப் பகுதியில் பெரும் பதட்ட நிலை நிலவியது.

இது தொடர்பாக மற்றும் பொலிஸார் மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் ஆகியோ ருக்கு பொதுமக்கள் கொண்டுவந்துள்ளனர்.

இங்கு நேற்றுக் காலை தேர்தல் முடிவுகள் வெளியாகின. இதில் விருப்பு வாக்குகளால் தோல்வியுற்ற ஆளும்கட்சி வேட்பாளர் ஒருவரின் சகாக்கள் தோல்வியின் விரக்தியால் ஈடுபட்டதால் இந்த அடிதடி மற்றும் கல்வீச்சில் ஈடுபட்டதாக என பொதுமக்கள் தெரிவித்தனர். (க-402)

## வவுனியாவிலுள்ள பிரபல பாடசாலையில் திருட்டு

வவுனியா ஏ-9 வீதியில் அமைந்துள்ள பிர பல பாடசாலையில் திருட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வவுனியா பிரமண்டு மகாவித்தியாலயத்திலேயே இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பெறுமதிமிக்க சோலர்கள் திருட்டுப் போயுள்ளது. ஏற்கெனவே இந்தப் பாடசாலை யில் உலர் உண வுப் பொருள்கள், கணினிகள் எனப் பல திருட் டுக்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை பாடசாலை நிர்வாகம் மேற்கொண்டிருந்தது. எனினும், இந்தப் பாடசாலையில் நிரந்தர காவலாளி எவரும் அரச அதிகாரிகளால் நியமிக்கப்படவில்லை. தொடர்ச்சியாக இந் தப் பாடசாலையில் இடம்பெற்றபோது இது வரை நிரந்தர காவலாளியை நியமித்து தராமை குறித்து பாடசாலை சார் நலன் விரும்பிகள் கவலை தெரிவித்துள்ளனர். (வ-402)

# தேர்தல் முடிவுகளை செவிசாய்த்த வர்த்தகர் மாரடைப்பால் சாவு

## கச்சாய் தெற்கில் நேற்று அதிகாலை சம்பவம்

தென்மராட்சி, செப். 23

தேர்தல் முடிவுகள் வானொலியில் கேட்டுக் கொண்டிருந்த வர்த்தகர் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கச்சாய் தெற்கில் இடம்பெற்றது.

வடமாகாண சபைத் தேர்தலில் ஆர்வத்துடன் ஈடுபட்ட வர்த்தகர் இரவு முழுவதும் வர்த்தக நிலையத்தினுள் இருந்து தேர்தல் முடிவுகளைக் கேட்டுக் கொண்டிருந்ததாகவும் அதிகாலையில் சாவகச்சேரி தொகுதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும் சந்தோச மிகுதியில் மாரடைப்பு ஏற்பட்டு உயிரிழந்தார்.

காலையில் தேநீர் கொண்டு சென்றபோது நெஞ்சில் வானொலியை வைத்தபடியே சடலமாகக் காணப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு நீதிவான் முன்னிலையில் அறிக்கை தாக்கல் செய்தனர்.

நீதிவானின் பணிப்பின் பேரில் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி விசாரணைகளை நடத்தி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி மூலம் உடற்கூற்றுப் பரிசோதனை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறும் உடற்கூற்றுப் பரிசோதனையில் பின்னர் சடலத்தை உறவினரிடம் கையளிக்குமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். கச்சாய் தெற்கைச் சேர்ந்த இரத்தினம் கந்தசாமி (வயது-54) மரணமானவராவார். (வ-9)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கழிவு ஒயில் கலாசாரம் வரணியில் அரங்கேற்றம்

வரணி, செப். 23

வரணிப் பிரதேசத்தில் கழிவு ஒயில் கலாசாரம் கடந்த வாரம் அரங் கேற்றப்பட்டுள்ளது. வரணி குடத் தனை வீதியில் வரையப்பட்டிருந்த தமிழரசுக் கட்சியின் சின்னமான வீடு குறிப்பிட்ட வீதியில் பல இடங் களில் வரையப்பட்டிருந்தன. அத்த கைய சின்னங்களே கடந்த வாரம் நள்ளிரவு வேளையில் கழிவு ஓயில் கொண்டு உருமாற்றம் செய்யப்பட் டுள்ளன.

கடந்த காலங்களிலும் மாவட்டத்தில் கழிவு ஓயில் கலாசாரம் முன்னெ டுக்கப்பட்டிருந்த நிலையில் இத்த கைய செயலை யார் மேற்கொண் டனர் என்பதை மக்கள் இனங் கண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-122)

### கைதானவர்கள் விடுவிக்கப்படாவிடில்

# இலங்கைக் கடற்படையினரிடம் சரணடைவர் தமிழக மீனவர்கள்

சென்னை, செப். 23
இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கா விட்டால் நாளை மறுதினம் 25 ஆம் திகதி விசைப்படகுகளில் வெள்ளைக் கொடியுடன் இலங்கைக் கடற்படையின ரிடம் தஞ்சமடைய தமிழக மீனவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 131 மீனவர்கள் இதுவரை விடுவிக்கப்படாத நிலையில் தமிழக மீனவர் கள் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும், மீனவர்களை விடுவிக்க இந்திய மத்திய அரசு நடவடிக்கை எடுக்காத நிலையில் நேற்று 6 மாவட்டங் களைச் சேர்ந்த மீனவர்கள் ஒன்றுகூடிய 21 தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி மீனவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் 27 ஆம் திகதி கடலில் வெள்ளைக்கொடியுடன் இலங் கைக் கடற்படையினரிடம் தஞ்சமடை வது, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர் தலை புறக்கணிப்பது உள்ளிட்ட தீர் மானங் களை நிறைவேற்றியுள்ளனர். (ஒ-14)

# மூன்றாவது சக்தியாக பொன்சேகாவின் கட்சி



கொழும்பு,செப் 23
முன்னாளர் இராணுவத் தள பதி சரத்பொன்சேகா தலை மையிலான ஜனநாயகக் கட்சி நடந்து முடிந்த மத்திய மற் றும் வடமேல் மாகாண சபை களுக்கான தேர்தலில் மூன் றாவது சக்தியாக உருவாகியு ள்ளது.

கடந்த காலங்களில் நடை பெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக்கட்சி ஆகியவற்றுக்கு அடுத்தபடி யாகக் கூடுதலான வாக்கு களைப் பெற்று மூன்றாவது அணியாக உருவெடுத்த மக் கள் விடுதலை முன்னணியை நான்காம் அல்லது ஐந்தாம் இடத்துக்குத் தள்ளியே மூன் றாவது சக்தியாக ஜனநாயகக் கட்சி உருவாகியுள்ளது.

இவ்விரு மாகாணங்களிலும் மக்கள் விடுதலை முன்ன ணிக்குக் கூடுதலாக ஜனநா யகக் கட்சி வாக்குகளைப் பெற் றுள்ளதுடன் ஆசனங்கள் சில வற்றையும் பெற்று கொண் டுள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். (த)

# விருப்பு வாக்குகளில் தயாசிறி முன்னிலை



கொழும்பு,செப் 22
வடமேல் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார் பில் அதிகளவான விருப்பு வாக் குகளை முன்னாள் நாடா ளுமன்ற உறுப்பினர் தயா சிறி ஜயசேகர பெற்றிருப்ப தாக அறிய முடிகிறது.

நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தலில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் களத்தைப் போன்று அதி களவில் பேச ப்பட்ட மற்று மொரு மாகாணம் வடமேல் மாகாணமா கும்.

இந்த மாகாண சபைக்கு போட்டியிட்ட ஆளும் கட்சி யைச் சேர் ந்த தயாசிறி ஜயசேகர வுக்.கும் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண் டோவின் மகன் ஜோஹான் பெர்னான் டோவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவியதே இதற் கான காரணம்.

இந்த நிலையில் விருப்பு வாக்கு களின் அடிப்படையில் தயாசிறி ஜயசேகர முன்ன ணியில் இருப்பதாகக் கூறப் படுகிறது.

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடா ளுமன்ற உறுப்பினராக இருந்த தயாசிறி ஜயசேகர, முதல மைச்சர் பதவியை பெறும் நோக் கில் ஆளும் கட்சியில் இணைந்து தேர் தலில் போட்டியிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)


## நன்றி நவில்கின்றேன்



அன்பான தமிழ் பேசும் மக்களே!
தமிழினத்தின் தன்மானத்தை உயர்த்த நடந்து முடிந்த வட மாகாண சபைத் தேர்தல்- 2013 இல் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் தமிழ்தேசியக் கூட்டமைப்பில் என்னை வெற்றிபெறச் செய்த அனைத்து வவுனியா மாவட்ட வாக்காளப் பெருமக்களுக்கும் மற்றும் அதற்காக உழைத்த அனை வருக்கும் எனது மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மயில்வாகனம் தியாகராசா
(சமாதான நீதிவானும் சமூகசேவையாளரும், முன்னாள்கிராமசேவை உத்தியோகத்தரும்)

## மனமார்ந்த நன்றிகள்



நடந்து முடிந்த வடமாகாண சபைத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் போட்டியிட்ட
**சந்திரலிங்கம் சுகிர்தன்**
ஆகிய எனக்கு 20541 விருப்பு வாக்கு களை அள்ளி வழங்கி பெருமையுடன் தேர்ந்தெடுத்த ஒவ்வொரு வாக்காளருக் கும் எனது மனமார்ந்த நன்றிகள் என்றும் உரித் தாகட்டும்

நன்றியுடன் ச. சுகிர்தன்
தமிழ்தேசியக் கூட்டமைப்பு. யாழ். மாவட்டம்.


## வலி.மேற்கு தவிசாளர் வீட்டுக்கு ஒயில் வீச்சு

யாழ்ப்பாணம், செப்.23
வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ஐங்கரன்- நாகரஞ்சினியின் வீடு மீது நேற்றிரவு இனந் தெரியாத நபர்களால் கழிவு ஒயில் வீசி தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது;
நேற்றிரவு ஓட்டோ ஒன்றில் வந்த சிலர் கழிவு ஒயில் அடைக்கப்பட்ட பியர் போத் தல்களை பிரதேச சபைத் தவிசாளர் வீடு மீது வீசி எறி ந்து விட்டு தப்பிச் சென்றுள் ளனர். இது தொடர்பாக வட்டுக் கோட்டை பொலிஸ் நிலை யத்தில் செய்யப்பட்ட முறைப் பாட்டையடுத்து சம்பவ இடத்துக்கு வந்து விசார ணைகளை மேற்கொண்ட னர்.

வடக்கு மாகாணத் தேர்தல் முடிவுகள் வெளிவந்த பின்னர் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதல் பல்வேறு சந்தேகங்களையும் தோற்றுவித்துள்ளதாக வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் நேற்றிரவு உதய னுக்குத் தெரிவித்தார். (ங)

## ஈ.பி.டி.பியின் தீவகக் கோட்டையும் தகர்ந்தது

யாழ்ப்பாணம், செப். 23
பல ஆண்டுகளாக ஈ.பி.டி. பியின் ஆதரவுக் கோட்டை யான ஊர்காவற்றுறை யிலும் இந்த முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றி பெற்றுள்ளது. ஊர் காவற் றுறை தொகுதியில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 4,700 வாக்குகள் வித்தியாச யத்தில் வென்று சாதனை படைத்தது.

முன்னைய தேர்தல்களில் ஊர்காவற்றுறைத் தொகுதி யில் அதிகளவான வாக்கு களை ஈ.பி.டி.பியே பெற்று வந்தது.

ஆயினும் இம்முறை ஈ.பி. டி. பியின் கோட்டையாக இருந்த ஊர்காவற்றுறையிலும் அதிக எண்ணிக்கை யான வாக்கு வித்தியாசத்தில் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பு வெற்றி யீட்டியிருக்கிறது. அத்துடன் தீவகப்பகு தியில் இம்முறை வாக்களிப்பு விகிதமும் வெகு வாக அதிகரித்துள்ளது. (த)

## யாழ்ப்பாணத் தொகுதி - (தபால் மூலம்)



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 8949 |
| தெரிவானவை | 8835 |
| நிராகரிக்கப்பட்டவை | 114 |
| வாக்காளர்கள் | 9301 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 7625 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 1099 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 21 |




## கிளிநொச்சி தொகுதி - (தபால் மூலம்)



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 929 |
| தெரிவானவை | 919 |
| நிராகரிக்கப்பட்டவை | 10 |
| வாக்காளர்கள் | 970 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 756 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 160 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 01 |




## மன்னார் தொகுதி - (தபால் மூலம்)



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 1869 |
| தெரிவானவை | 1852 |
| நிராகரிக்கப்பட்வை | 17 |
| வாக்காளர்கள் | 1917 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 1300 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 408 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 135 |




## முல்லைத்தீவு தொகுதி - (தபால் மூலம்)



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 800 |
| தெரிவானவை | 795 |
| நிராகரிக்கப்பட்வை | 05 |
| வாக்காளர்கள் | 831 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 646 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 146 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 02 |




## வவுனியாத் தொகுதி - (தபால் மூலம்)



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 1371 |
| தெரிவானவை | 1346 |
| நிராகரிக்கப்பட்டவை | 25 |
| வாக்காளர்கள் | 1402 |
| இலங்கை தமிழரசுக் கட்சி | 901 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 323 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 65 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குத் தேர்தல் தொகுதி ரீதியான முடிவுகள்



**வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் தொகுதி ரீதியாக கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைகள் இவை..**

## யாழ்ப்பாணத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 20 303 |
| தெரிவானவை | 19 063 |
| நிராகரிக்கப்பட்டவை | 1240 |
| வாக்காளர்கள் | 28 610 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 16 421 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2 416 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 60 |




## ஊர்காவற்றுறைத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 14 604 |
| தெரிவானவை | 13 227 |
| நிராகரிக்கப்பட்டவை | 1377 |
| வாக்காளர்கள் | 21 548 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 8 917 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4 164 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 29 |




## கோப்பாய் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 34 606 |
| தெரிவானவை | 31 411 |
| நிராகரிக்கப்பட்டவை | 3 195 |
| வாக்காளர்கள் | 53 616 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 26 467 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4 386 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 127 |




## காங்கேசன்துறைத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 26 021 |
| தெரிவானவை | 29 947 |
| நிராகரிக்கப்பட்டவை | 2 074 |
| வாக்காளர்கள் | 61 196 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 19 596 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4 048 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 62 |




## பருத்தித்துறைத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 22 482 |
| தெரிவானவை | 21 038 |
| நிராகரிக்கப்பட்டவை | 1444 |
| வாக்காளர்கள் | 35 054 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 17 719 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2 953 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 162 |




## சாவகச்சேரித் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 29 793 |
| தெரிவானவை | 27 415 |
| நிராகரிக்கப்பட்டவை | 2378 |
| வாக்காளர்கள் | 49 479 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 22 922 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 4 193 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 89 |




## நல்லூர்த் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 28 424 |
| தெரிவானவை | 26 774 |
| நிராகரிக்கப்பட்டவை | 1650 |
| வாக்காளர்கள் | 42 466 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 23 733 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2 651 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 148 |




## வட்டுக்கோட்டைத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 30 257 |
| தெரிவானவை | 27 736 |
| நிராகரிக்கப்பட்டவை | 2521 |
| வாக்காளர்கள் | 45 195 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 23 442 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 3 763 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 173 |




## மானிப்பாய்த் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 35 116 |
| தெரிவானவை | 32 585 |
| நிராகரிக்கப்பட்டவை | 2531 |
| வாக்காளர்கள் | 51 722 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 28 210 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 3 898 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 109 |




## உடுப்பிட்டித் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 23 266 |
| தெரிவானவை | 21 511 |
| நிராகரிக்கப்பட்டவை | 1 755 |
| வாக்காளர்கள் | 37 926 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 18 855 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 2 424 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 57 |




## முல்லைத்தீவு தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 38 002 |
| தெரிவானவை | 35 187 |
| நிராகரிக்கப்பட்டவை | 2 815 |
| வாக்காளர்கள் | 53 683 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 27 620 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 7 063 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 195 |




## வவுனியாத் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 65 410 |
| தெரிவானவை | 61 019 |
| நிராகரிக்கப்பட்டவை | 4391 |
| வாக்காளர்கள் | 94 644 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 40 324 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 16 310 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 1704 |




## மன்னார் தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 54 346 |
| தெரிவானவை | 51 374 |
| நிராகரிக்கப்பட்டவை | 2 972 |
| வாக்காளர்கள் | 75 737 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 31 818 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 14 696 |
| சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 4436 |



## கிளிநொச்சி தொகுதி



| | |
|---|---|
| மொத்தவாக்குகள் | 49 265 |
| தெரிவானவை | 44 540 |
| நிராகரிக்கப்பட்டவை | 4725 |
| வாக்காளர்கள் | 68 600 |

| | |
|---|---|
| இலங்கை தமிழரசுக் கட்சி | 36 323 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | 7 737 |
| ஐக்கிய தேசியக் கட்சி | 53 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியலில் குதிக்கின்றார் மம்முட்டி?

புதுடில்லி, செப்.23
மலையாள நடிகர் மம்முட்டி எதிர்வரும் இந்திய நாடாளு மன்ற தேர்தலில் போட்டியிட போகிறார் என்ற செய்திகள் கேரள அரசியலில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
மலையாள சினிமாவின் முன்னணி நடிகர் மம்முட்டி அரசியலில் குதிக்கப்போவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
இந்த செய்தி மலையாள சினிமா வட்டாரத்தில் மட்டுமல்லாமல் கேரள அரசியல் பிரமுகர்களிடையேயும் ஒரு சலசலப்பை ஏற்படுத்தி உள்ளதாம்.
இதுகுறித்து மம்முட்டி கருத்துத் தெரிவிக்கும்போது,
"தற்போது வந்திருக்கும் செய்திக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. எனக்கு அரசியலுக்கு வரும் எண்ணமே இல்லை. இது போன்ற தவறான செய்திகளை யாரும் நம்ப வேண்டாம்" என்று கூறியுள்ளார். (ற)

## மோடி ஒரு நவீன இராவணன்

சென்னை, செப்.23
பா.ஜவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நரேந்திர மோடிக்கு ராவணனை விட தலைகள் அதிகம் என மார்க்சிஸ்ட் மூத்த தலைவர் பிருந்தா கரத் விமர்சித்துள்ளார்.
கர்நாடக மாநிலம் மாண்டியாவில் ஜனநாயக மாதர் சங்கத்தின் 8ஆவது மாநில மாநாடு நடைபெற்றது.
இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் பிருந்தா கரத் பேசுகையில், "தற்போது நாடாளுமன்ற தேர்தலை குறி வைத்து வகுப்புவாத சக்திகள் தீவிரமாக பிரசாரம் செய்து வருகின்றன.
பா.ஜவின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள நரேந்திர மோடி ஒரு நவீன ராவணன். நவீன ராவணனான நரேந்திர மோடிக்கு தலைகள் அதிகம்" என்று தெரிவித்தார்.(ற)

### தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சம்பவங்கள்

# பேச்சுகளை ஆரம்பிக்க அனுமதி வழங்குங்கள்

## பிரதமர் மன்மோகன் சிங்குக்கு தமிழக முதலமைச்சர் கடிதம்

சென்னை, செப்.23
தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இலங்கை மீனவர்களுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு வசதியாக இலங்கை மீனவர்கள் சென்னைக்கு வருவதற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் கோரியுள்ளார் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா.
இந்தவிடயம் குறித்து இந்தியப் பிரதமருக்கு தமிழக முதலமைச்சர் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,
"தமிழக மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இலங்கை மீனவர்களுடன் பேச்சுக்களை



நடத்துவதற்குவசதியாகஇலங்கை மீனவர்கள் சென்னைக்கு வருவதற்கு விரைந்து அனுமதி வழங்க வேண்டும்.
இலங்கைச் சிறையில் தமிழக மீனவர்கள் 97 பேர் அடைக்கப்பட்டுள்ளனர். அதனால் இராமநாதபுரம், நாகை உட்பட கடலோர மாவட்டங்களில் பதற்றம் ஏற்பட்டுள்ளது.
பிரச்சினைக்கு தீர்வு காண பேச்சுக்களை ஏற்பாடு செய்து தருமாறு மீனவர் சங்கங்கள் தமிழக அரசை அணுகியுள்ளன. அதனை ஏற்று சென்னையில் இந்திய - இலங்கை மீனவர்களுக்கு இடையே எதிர்வரும் டிசெம்பர் மாதம் பேச்சு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
சென்னைக்கு வருகை தர இலங்கை மீனவர்களுக்கு வழங்க வேண்டிய துறை ரீதியிலான அனுமதியை விரைந்து வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## விமானத்தில் பயணிப்போரின் எண்ணிக்கை அதிகரிக்கும்

சென்னை, செப்.23
எதிர்வரும் 2020ஆம் ஆண்டுக்குள் இந்தியாவில் விமானத்தில் பயணம் செய்வோர் எண்ணிக்கையை 30 கோடியாக உயர்த்த முயற்சிக்கப்படும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,
"இந்தியாவில் உள்ள சிறிய நகரங்களுக்கும் விமானப் போக்குவரத்து வசதியை ஏற்படுத்துவதற்காக, நாடு முழுவதும் 100 சிறிய விமான நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.
பெரிய நகரங்களில் விமானப் போக்குவரத்தை அதிகரிப்பதற்காக ஆரம்பத்தில் கவனம் செலுத்தப்பட்டது. இப்போது, சிறிய நகரங்களிலும் விமான வசதியை ஏற்படுத்தும் வகையில், இந்த பகுதிகளில் புதிதாக 100 விமான நிலையங்கள் அமைக்கப் படும்.
கடந்தாண்டில் விமானங்கள் மூலம் 16 கோடி பேர் பயணம் செய்துள்ளனர். இதை 2020 ஆம் ஆண்டுக்குள் 30 கோடியாக உயர்த்த திட்டமிடப்பட்டுள்ளது" என்று தெரிவித்தார்.(ற)



சென்னையில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவை முதலமைச்சர் ஜெயலலிதா நேற்றுத் தொடக்கி வைத்தார். அதற்காக நேரு விளையாட்டரங்கை சுற்றிலும் உள்ள வீதிகளில் அலங்கார வளைவுகளும் கட்டப்பட்டன.

## நடிகை நாடாள்வது தமிழகத்தில் மட்டுமே

### புகழ்கின்றார் நடிகர் விஜய்

சென்னை, செப்.23
பல்வேறு எதிர்ப்புகளைத் தாண்டி ஒரு நடிகை நாடாள்கிறார் என்றால் அது தமிழகத்தில் மட்டும் தான் என்று நடிகர் விஜய் முதல்வர் ஜெயலலிதா பற்றி பெருமையாகக் கூறியுள்ளார்.
இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழாவை முதல்வர் ஜெயலலிதா நேற்று ஆரம்பித்து வைத்தார்.
அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நடிகர் விஜய் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் அங்கு மேலும் கூறும் போது,
"சினிமா 100 ஆண்டுகள் ஆனாலும் வளர்ந்து கொண்டே தான் இருக்கும். சண்டை கலைஞர்களோ ரத்தம் சிந்த உழைப்பவர்கள். எதிர்பாராமல் நடப்பது விபத்து. ஆனால் விபத்தை எதிர்பார்த்து வேலை செய்ப



வர்கள் சண்டை கலைஞர்கள். நூற்றாண்டு விழா நடப்பது நமக்கெல்லாம் கௌரவம். ஒரு நடிகையாக வாழ்க்கையை ஆரம்பித்து எதிர்ப்புகள், சவால்களை எல்லாம் முறியடித்து ஒரு நடிகை நாடாள்கிறார் என்றால் அது தமிழகத்தில் மட்டுமே. இது ஒட்டுமொத்த சினிமா கலைஞர்களுக்கு கௌரவமான விடயம்" என்று தெரிவித்தார் விஜய். (ற)

## கட்சிப் பொறுப்பாளர்களை கண்காணிக்க புதிய திட்டம்

### ராகுல் காந்தியின் தேர்தல் வியூகம்

புதுடில்லி, செப்.23
கட்சிப் பொறுப்பாளர்களின் செயல்பாடுகளை முறைப்படுத்துவதற்காக மாதாந்த கண்காணிப்பு முறையை காங்கிரஸ் துணை தலைவர் ராகுல் அறிமுகப்படுத்தி உள்ளார்.
இந்த ஆண்டு இறுதியில் மத்திய பிரதேசம், புதுடில்லி, ராஜஸ்தான் உட்பட, ஐந்து மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ளது. அத்துடன் அடுத்த ஏழு மாதங்களில் லோக்சபா தேர்தல் நடைபெறவுள்ளது. அதனால், கட்சிப் பொறுப்பாளர்களின் செயற்பாடுகளை முடுக்கி விடும் பணியில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் ஈடுபட்டுள்ளார்.
அகில இந்திய காங்கிரஸ் குழுத் செயலர்களுக்காக மாதாந்த கண்காணிப்பு முறையை அறிமுகப்படுத்தியுள்ளார், இந்த புதிய முறையின்படி ஒவ்வொரு செயலரும், தங்களுக்கென ஒதுக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்ட பணிகள் தொடர்பாக, ஒவ்வொரு மாதமும் ராகுலிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.
அந்த மாவட்ட மற்றும் வட்டார காங்கிரஸ்குழுவில்ஒவ்வொரு மாதமும் நடைபெறும் கட்சி மற்றும் கட்சி பொறுப்பாளர்களின் கூட்டங்கள் மற்றும் அதில் செயலர்கள் கலந்து கொண்ட விவரங்கள் போன்றவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் ராகுல் கட்சி நிர்வாகிகளுக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டுள்ளார். (ற)

## சுஷ்மாவின் கருத்தால் மோடி அதிருப்தி



புதுடில்லி, செப்.23
காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி வெளிநாட்டு வம்சாவளி பெண் என்பதால் அவர் பிரதமர் ஆகக்கூடாது என்பதில் இன்னும் உறுதியாக இருப்பதாக பா.ஜனதா கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான சுஷ்மா சுவராஜ் அண்மையில் தெரிவித்த கருத்துக்கு அதிருப்தி வெளியிட்டுள்ளார் பா.ஜனதா பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி.
டெல்லியில் கட்சியின் தேசிய தலைவர் ராஜ்நாத்சிங்கை மோடி சந்தித்து பேசியபோது, சுஷ்மாவின் கருத்துக்கு தனது அதிருப்தியை வெளியிட்டதாக தெரிய வந்துள்ளது.
சோனியா வெளிநாட்டுப் பெண் என்ற விவகாரத்துக்கு தற்போது முக்கியத்துவம் இல்லை என்று குறிப்பிட்ட நரேந்திர மோடி, ஊழல் போன்ற பிரச்சினைகளில் பா.ஜனதா கவனம் செலுத்த வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார் என்று கட்சி வட்டாரங்களில் பேசப்படுகின்றது.(ற)

## தமிழகம் வருகிறார் பிரணாப் முகர்ஜி

புதுடெல்லி, செப்.23
இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நாளை சென்னையில் நடக்கும் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக தமிழகம் வருகிறார்.
ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி மூன்று நாள் பயணமாக கர்நாடகம், தமிழகம், புதுச்சேரி ஆகிய மூன்று தென் மாநிலங்களில் வரும் செப்ரெம்பர் 23 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பார்.
சென்னை வரும் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி, தமிழக அரசும், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபையும் இணைந்து நடத்தும் இந்திய சினிமா நூற்றாண்டு விழாவின் நிறைவு நாள் நிகழ்வுகளிலும் தலைமை விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.
அதன்பின்னர் செப்ரெம்பர் 25



ஆம் திகதி புதுச்சேரியில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழக 23 ஆவது பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வார். அதன்பின்னர் 26 ஆம் தேதி காலையில் சிறப்பு விமானம் மூலம் அவர் டில்லி திரும்புவார் என்று ஜனாதிபதி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## ஒரே மேடையில் அமரப் போகின்றனர் ஜெயலலிதா மற்றும் கருணாநிதி?

சென்னை,செப்.23
அரசியலில் பரம எதிரிகளான தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி ஆகியோர் ஒரே மேடையில் அமரும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.
சென்னையில் இன்று தொடங்க இருக்கும் இந்திய திரைப்பட நூற்றாண்டு விழா கொண்டாட்டத்திற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு அழைப்பிதழ் கொடுக்கப்பட்டுள்ளது.
அந்த விழாவுக்குத் தலைமை தாங்குகின்றார் தமிழக முதலமைச்சர் ஜெயலிதா.
இந்திய திரைப்பட நூற்றாண்டு விழா இன்று சென்னையில் தொடங்கவுள்ளது. இந்நிலையில், தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை துணைத் தலைவர் தேவராஜ், எடிட்டர் மோகன் ஆகியோர் நேரில் சென்று கருணாநிதிக்கு அழைப்பிதழை கொடுத்தனர்.
விழாவில் கருணாநிதி கலந்து கொள்ளும் பட்சத்தில் பரம எதிரிகளான இருவரும் ஒரே மேடையில் அமரும் சந்தரப்பம் கிட்டும் என்று கூறப்படுகின்றது.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கென்யாவில் வெறியாட்டம்

## துப்பாக்கிதாரிகள் சூட்டதில் 39 பேர் துடிதுடித்துச் சாவு



நைரோபி, செப்.23
கென்யாவின் தலைநகர் நைரோபியில் உள்ள வணிக வளாகமொன்றில் நடத்தப்பட்ட வெறித்தனமான துப்பாக்கிச்சூட்டில் குழந்தைகள் உட்பட 39 பேர் உயிரிழந்துள்ளனர்.

நைரோபியில் உள்ள 'வெஸ்ட்கெட்' வணிக வளாகம் பிரபல்யமானது. அங்கு எப்போதும் சனத் திரள் நிறைந்திருக்கும். வழக்கம்போல் நேற்றுமுன்தினம் அங்கு பெரும் எண்ணிக்கையானோர் பொருள்களை வாங்க வந்திருந்தனர். அப்போதுதான் யாரும் எதிர்பார்க்காத அந்த சம்பவம் இடம்பெற்றது.

வணிக வளாகத்துக்குள் ஒரு கும்பல் நுழைந்தது. திடீரென வணிக வளாகத்தில் இருந்த பொதுமக்களை நோக்கி கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூட்டை நடத்தத் தொடங்கியது. என்ன நடக்கின்றது என்ற அறிய முன்னரே ஆங்காங்கே சுருண்டு விழத் தொடங்கினர் மக்கள். நடக்கும் ஆபத்தை உணர்ந்து தப்பியோடுவதற்கு முன்னரே 39 உயிர்கள் பறிக்கப்பட்டன. அதில் சிறு குழந்தைகளும் அடக்கம்.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியபடி அந்த வெறிக்கும்பல் வணிக வளாகத்தின் அனைத்துத் தளங்களிலும் மறைந்து கொண்டனர். உடனடியாக வணிக வளாகம் இருந்த பகுதி பொலிஸாரால் சுற்றி வளைக்கப்பட்டது. அங்கு செல்லும் அனைத்து வீதிகளும் மறிக்கப்பட்டன. வணிகவளாகத்துக்குள்நுழைய முயன்ற பொலிஸார் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. துப்பாக்கிச் சூட்டை அடுத்து பொதுமக்கள் பலர் காயமடைந்திருந்தனர். பெரும் எண்ணிக்கையான மக்களும் வணிக வளாகத்துக்கு இருந்தமையால் பொலிஸாரால் அதிரடி நடவடிக்கைகள் எதனையும் மேற்கொள்ள முடியவில்லை.

வணிக வளாகத்துக்குள் இருந்தவர்களைப் பாதுகாப்பாக அகற்றிய படி அங்குலம் அங்குலமாக உள்ளே நுழைந்தனர் பொலிஸார். காயமடைந்து வீழ்ந்து கிடந்தவர்களும் வெளியேற்றப்பட்டனர்.

"உள்ளே பொதுமக்களும் இருந்தனர். எனவே எம்மால் பதிலுக்குத் தாக்குதல் நடத்த முடியவில்லை. யார் தாக்குதலாளி என்பதை மக்களிடம் இருந்து பிரித்துப் பார்ப்பது எமக்குப் பெரும் சிரமமாக இருந்தது. நாங்கள் அந்தக் கட்டத்துக்குள் நுழைந்து ஒவ்வொரு பிரிவாக சோதனையிட்டு அங்கிருந்த மக்களையும், காயமடைந்தவர்களையும் வெளியேற்றினோம். காயமடைந்தவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது" என்று தெரிவித்துள்ளார் மீட்பு நடவடிக்கையில் இணைந்திருந்த பொலிஸ் அதிகாரி.

தாக்குதலில் ஈடுபட்டவர்கள் 10 பேர் கொண்ட குழு என்று கூறப்படுகின்றது. அவர்கள் வணிக வளாகத்தின் ஒரு பகுதியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் கூறுகின்றன. ஆனால் அது குறித்து நைரோபி பொலிஸார் உத்தியோகபூர்வ தகவல்கள் எதனையும்வெளியிடவில்லை.(ற)




நைரோபியில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தில் 1998இல் அல்-குவைதா நடத்திய தாக்குதலில் 200க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். அதன் பின்னர் அங்கு நடந்துள்ள பெரிய தாக்குதல் இதுவாகும். சோமாலியாவில் உள்ள தீவிரவாதிகளை கட்டுப்படுத்த கென்ய அரசு தனது துருப்புகளை அனுப்பி உள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து சோமாலிய தீவிரவாதிகள் வணிக வளாகத்தில் தாக்குதல் நடத்தி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா, இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

## மெக்ஸிகோ அனர்த்தம்

### உயிரிழப்புகள் 101 ஆக அதிகரிப்பு

சான்பிரான்ஸிஸ்கோ, செப்.23
மெக்ஸிகோவில் தொடர்ந்து ஒரு வார காலமாகப் பெய்து வரும் கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 101 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 68 பேர் காணாமற் போயுள்ளனர்.

காலநிலை இன்னும் சீரற்றுக் காணப்படுவதால் மீட்புப் பணிகள் மந்தகதியில் நடை பெற்று வருகின்றன.

"100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். வானிலை மோசமாக உள்ளதால் மீட்புப்பணிகள் தாமதித்துள்ளன. அது கவலை தரும் விடயமாகும்" என்று தெரிவித்தார் மெக்ஸிக்கோ உள்துறை அமைச்சர் ஏஞ்சல் அசாரியோ.



## ஊழல்

### சீன அரசியல் தலைவருக்கு ஆயுள் தண்டனை

பீஜிங், செப்.23
ஊழல் குற்றம்சுமத்தப்பட்ட சீனாவின் முன்னாள் கம்யூனிஸ கட்சித்தலைவர் போ ஷிலாய்க்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ள நீதிமன்றம் ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக ஆயுள் தண்டனையும், பணம் கையாடல்களுக்கு 15 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டமைக்காக 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது.

அத்துடன் அவருக்குள்ள அனைத்து அரசியல் உரிமைகள் மற்றும் சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. சீனாவில் அரசியல் தலைவர் ஒருவர் மீது எடுக்கப்பட்டுள்ள முதல் கடுமையான நடவடிக்கை இதுவாகும்.

போ ஷிலாய் சுமார் 35 லட்சம் அமெரிக்க டொலர் வரை லஞ்சமாக பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டுகளை மறுத்து வரும் போ, இந்த தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீடு செய்யக்கூடும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

## மணிக்கு 240 கி.மீ தைவானை உலுப்புகின்றது 'உசாகி' சூறாவளி



மணிலா, செப்.23
பிலிப்பைன்ஸ் மற்றும் தைவானைக் கடுமையாகத் தாக்கி வருகின்றது 'உசாகி' சூறாவளி. பலத்த மழை மற்றும் அதிவேக சுழல் காற்று என்பவற்றால் அங்கு இயல்பு நிலை முற்றாக பாதிப்படைந்துள்ளது.

மணிக்கு சுமார் 240 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் காற்றால் போக்குவரத்துக்கள், தொலைத்தொடர்பு என்பன துண்டிக்கப்பட்டுள்ளன. அத்துடன் விடாது பெய்துவரும் மழையால் வீதிகள் எங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகின்றது. அதனால் இயல்பு நிலை முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

"மழை வீழ்ச்சி தற்போது 1.2 மீற்றர் அளவில் பதிவாகியுள்ளது. கடும்வேகத்துடன்வீசிவரும்உசாகிஇன்னும்வேகமடையக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளனர் ஹொங்கொங் பேரிடர் முகாமைத்துவப் பிரிவினர். (ற)

## கழுதைக்கு தளபதியின் பெயர்

### கைதானார் எகிப்து விவசாயி



கெய்ரோ, செப்.23
இராணுவத் தளபதியின் பெயரை தனது கழுதைக்கு வைத்தமைக்காக விவசாயி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் எகிப்தில் இடம்பெற்றுள்ளது.

எகிப்து ஜனாதிபதி முகமது முர்சி கடந்த ஜூலை மாதம் இராணுவப் புரட்சி மூலம் பதவி நீக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து முர்சியின் ஆதரவாளர்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே மோதல்கள் நடைபெற்று வருகின்றன.

இந்தநிலையில்எகிப்தின் குயினா மாகாணத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது கழுதைக்கு எகிப்து இராணுவத் தளபதியின் பெயரை வைத்துள்ளார்.

பெயரை வைத்தது மட்டுமல்லாது, ஒரு இராணுவத் தொப்பியும் அணிவித்து வீதிகளில் அழைத்துச் சென்றுள்ளார். அதையடுத்து இராணுவத் தளபதியை அவமதிப்புச் செய்தார் என்று கூறி அவரைக் கைது செய்துள்ளனர் பொலிஸார். (ற)

## 850 பாம்புகளை மறைத்து வைத்திருந்தவர் கைது



ஷிர்லே, செப்.23
அமெரிக்காவில் 850 பாம்புகளை வீட்டில் பதுக்கி வைத்திருந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நியூயோர்க்கில் உள்ள ஷிர்லே பகுதியில் வசிப்பவர் ரிச்சர்ட் பேரிநெல்லோ. விலங்குகள் கட்டுப்பாட்டுத் துறை அதிகாரியாக பணியாற்றுகின்றார்.

அவர் மியான்மர் நாட்டின் மலைப்பாம்பு உட்பட 850 பாம்புகளை தன் வீட்டில் பதுக்கி வைத்திருந்தார். இது மட்டுமல்லாது ஆமை உள் ளிட்ட விலங்குகளையும் தன் வீட்டில் வைத்து விற்பனை செய்துள்ளார். நியூயோர்க்கில் மலைப்பாம்பு வளர்ப்பதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உரிய அனுமதி இன்றி வீட்டில் பாம்புகளை வைத்திருந்தமைக் காக கைது செய்யப்பட்டுள்ள ரிச்சர்ட் மீது தற்போது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. (ற)

## சட்டவிரோத குடியேற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

### வலியுறுத்துகின்றது ஐ.நா.

நியூயோர்க், செப். 23
ஐரோப்பியா நாடுகளுக்கு ஆசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் இருந்து மத்தியதரைக் கடலில் உள்ள இத்தாலி வழியாக மக்கள் சட்டவிரோத மாக குடியேற்றப்படுவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது ஐக்கிய நாடுகள் சபை.

ஆபிரிக்கா மற்றும் ஆசிய நாடுகளில் வறுமை, வேலை வாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்டவர்கள் ஐரோப்பிய நாடுகளில் திருட்டுத்தனமாக குடியேறுகின்றனர். இந்தநிலையிலேயே ஐ.நா. இவ்வாறு கூறியுள்ளது.

சட்டவிரோதக் குடியேற்றங்கள் தொடர்பாகக் கண்காணித்து வரும் ஐ.நா. அதிகாரி ஜோய் எசெய்லோ இது குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில், "ஐரோப்பியாவிற்குள் சட்டவிரோதமாக இத்தாலி கடற்கரை வழியாக கடத்திவரப்படுபவர்கள் ஐரோப்பிய நாடுகளில் சட்டவிரோத தொழில்களிலும், கட்டாய பணியாளர்களாகவும் ஆக்கப்படும் மோசமான நிலை உருவாகியுள்ளது. இந்த மோசமான நிலையை பயன்படுத்தி கடத்தல்காரர்கள் மக்களை அடிமைகளாக மாற்றுகின்றனர். அது மிகவும் கவலையளிக்கின்றது. ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்படும் இந்தப் பிரச்சினை குறித்து இத்தாலி அரசு உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண மட்ட

## மனனப்போட்டியில் முதலாமிடம்

வடக்கு மாகாண மட்ட திருக்குறள் மனனப் போட்டியில் சுன்னாகம் யா/ திருஞானசம்பந்தர் வித்தியாசாலை மாணவி சிறிஸ்கந்தராசா கஜானி முதலாமிடத்தைப் பெற்றுள்ளார். இவர் தரம் ஒன்றில் கல்வி பயிலும் மாணவி ஆவார்.

# மதுபான விற்பனை நிலையங்களுக்கு அனுமதி வழங்குவதில் பாரபட்சம்

அச்சுவேலி, செப்.23

உள்ளூர் கள்ளுத் தவறணையில் சாராயம் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளை விற்பனை செய்யும் நிலையங்களுக்கும் அனுமதி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சாராயம் மற்றும் வெளிநாட்டு மதுபான வகைகளை விற்பனை செய்யும் நிலையங்கள், ஆலயம், பாடசாலை மற்றும் வைத்தியசாலைக்கு அண்மையில் இருக்கக்கூடாது என்பது அடிப்படை விதிமுறை. எனினும் இதனை மீறி பாடசாலை, ஆலயம் மற்றும் வைத்தியசாலைகளுக்கு மிக அருகில் செயற்படுகின்றன. அத்துடன் மொத்த வியாபாரத்துக்கு என அனுமதி பெற்றுக்கொண்டு சில்லறை வியாபாரமும் நடைபெறுகின்றது.

இந்த நிலையிலும் குறிப்பிட்ட கால இடைவெளியில் அனுமதிகள் புதுப்பித்து வழங்கப்படுகின்றன. ஆனால் உள்ளூர் கள்ளு விற்பனை செய்யும் தவறணை விடயத்தில் அனுமதி வழங்குவதிலும் வழங்கிய அனுமதிகளை கால நீடிப்புச் செய்வதிலும் அளவுக்கு அதிகமான கெடுபிடி நடைமுறை பின்பற்றப்படுவதாகவும் தவறணைகளை மூடுவதற்கு சாதகமாகவே அதிகாரிகள் நடந்து கொள்வதாகவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.



கள்ளுத்தவறணை விடயத்தில் பொதுமக்களின் ஆட்சேபனைகள் இருக்கக்கூடாது. அதனை உறுதிப்படுத்தி பிரிவு கிராம அலுவலர் விவரமான அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். கள்ளுத் தவறணையில் மேற்கொள்ளப்படும் கருமாங்கள் வெளியே தெரியாமல் இருக்க வேலி அல்லது சுற்றுமதில் நிறுவப்பட வேண்டும். கள்ளுத் தவறணை செயற்படுவது தொடர்பாக யாரும் ஆட்சேபனை தெரிவிக்கக்கூடாது. அவ்வாறு நிலைமை சீரில்லாதவிடத்து அனுமதி மறுக்கப்படுவதோடு குறுகிய கால அவகாசத்தில் இழுத்து மூடப்பட வேண்டும். இதனால் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் பெரும் நெருக்கடியை சந்தித்து நிற்பதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது. (ந-11)

நீங்கள் பீனிசம், பீனிச வாய்வு இளநரை, தலையிடி,தலைப்பாரம், மூக்கினால் இரத்தம் வடிதல், காதடைப்பு, கண்மங்கல் என்பவற்றால் அவதிப்படுகிறீர்களா?

இதோ பாவியுங்கள்

கண்ணுக்குக் குளிர்ச்சியும் முகத்திற்கு அழகும் உண்டாக்கி கூந்தலை நீளமாகவும் கறுப்பாகவும் அழகாகவும் வளரச் செய்யும் சித்த ஆயுள்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட

**சித்தாரா பொன்னாங்காணித் தைலம்**

போலிகள் நடமாடுவதால், பொன்னாங்காணித் தைலம் வாங்கும்போது வர்ணமூடியில் 'சித்தாரா டிஸ்பென்சரி' 'வைத்திய முத்திரைக் குறியீடு' என்பன பொறிக்கப்பட்டுள்ளதா எனவும் பெட்டியில் 'ஒறிஜினல்' என பொறிக்கப்பட்ட பளபளப்பான ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டுள்ளதா எனவும் பார்த்து வாங்குங்கள்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228 (c/11040)(7.6.3)

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

**சிட்டை எழுதுநர் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு சிட்டை எழுதுநர்(Bill Clerk) ஆண்ஒருவர் தேவை.வயது-40 இற்கும் -50இற்கும் இடையில் (31940) (4.6.3)
தொடர்பு: 021 222 3857

**வேலையாள்கள் தேவை**

மானிப்பாயில் இயங்கும் நிறுவனத்துக்கு A தர சாரதி, விற்பனைப் பிரதிநிதி, உதவியாளர், கணக்காளர், உற்பத்தி உதவியாளர் ஆண்கள் மட்டும் தேவை. (31966) (7.6.3)
தொடர்பு: 077 486 2189 077 942 2725

**பரிசுத்த ஆவிக்கு செபம்**

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக. உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய ஜெபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறு கின்றேன்.

அடியாள்.

(31934) (7.6.3)

**தொழில் வாய்ப்பு**

தமிழ், ஆங்கில டைப்பிங் தெரிந்தவர்கள்
போட்டோக் கொப்பி இயக்குனர்
அச்சக வேலையில் அனுபவமுடையோர்
புத்தகம் கட்டுநர்
உதவியாளர்கள்
021 221 7030

**நிச்சயமாக தொழிலை இலக்காகக் கொண்ட பாடநெறிகள்.**

After A/L

**Medical Laboratory Technology Assistant**
ஆய்வுகூட உதவியாளர் பாடநெறி

நாடு முழுவதிலும் அமைந்துள்ள ஆய்வுகூட உதவியாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக க.பொ.த. உ/த விஞ்ஞான பாடத்திற்குத் தோற்றிய நீங்களும் இப்போது ஆய்வுகூட உதவியாளராக ஆகலாம்.



6 மாத நிறுவனத்தின் மூலமான பயிற்சியின் பின் சேவை இடங்களுக்கு சேர்க்கப்படுவார்கள்.

O/L பின் **School of Nursing IVA**

ஒரு வருட தாதியர் பயிற்சி பாடநெறி

உள்ளூர் , வெளியூர் தாதியர் தொழில் வாய்ப்புக்கள் பெருமளவிலே பெற்றுக் கொடுத்திருக்கின்ற ஒரே தாதியர் பாடசாலையில் பாடநெறிகளுக்கு தற்போது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பாடநெறியினை சிறந்த முறையில் பூர்த்தி செய்கின்ற அனைத்து மாணவர்களுக்கும் நிறுவனத்தினால் தொழில் வாய்ப்புக்கள் பெற்றுத்தரப்படும்.



நுழைவுக்குத் தேவையான அடிப்படைத் தகைமைகள்
க.பொ.த சா/த 6 பாடங்கள் சித்தி
வயது: 16 - 30 இடைப்பட்டிருத்தல்
உயரம் 4 அடி 10 அங்குலம்

இலவசமாக சீருடையும், தாதியர் பாடநெறிக்கு ஏற்ற ஆங்கில பாடநெறியும் , தூரப் பிரதேச மாணவர்களுக்காக பாதுகாப்பான தங்குமிட வசதிகளும் உண்டு.

**மருந்தாளர் டிப்ளோமா பாடநெறி**

அரச வைத்திய வித்தியாலயத்தினால் நடத்தப்படும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்க வகுப்புக்கள் நடைபெறும்.

தற்போது தனியார் துறைகளில் வைத்திய சேவையிலே மருந்து தொடர்பான சேவையில் ஈடுபட்டுள்ள தகுந்த கல்வித் தகைமை இல்லாதவர்களுக்க தொழிலுக்க ஏற்ற செயன்முறைப் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும்.

நடத்துபவர் : வைத்தியர் ராஜவேலாயுதம் — ஞாயிறு தினங்களில் காலை 9.00 முதல் 4.00வரை

| மட்டக்களப்பு | யாழ்ப்பாணம் | வவுனியா | அநுராதபுரம் | பதுளை |
|---|---|---|---|---|
| இல. 61:1, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பே.0718-722 352 0718-722 353 | இல 323, கஸ்தூரியா வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.071-8722350, 0718-722 353 | இல. 109, மன்னார் வீதி, சாந்தி க்ளினிக், வவுனியா. தொ.பே. 0718-722 351 0718-722 353 | இல 396/3, கவசேவன வைத்தியசாலை, நீதிமன்ற பகுதி, கடதொளாஹ அநுராதபுரம். தொ.பே. 0718-722 355 | இல 20/1/1, ஹுணுகொடுவ வீதி, பதுளை. தொ.பே.0718-722 354 |
| **கண்டி** | **கம்பஹா** | **பாணந்துறை** | **தங்காலை** | **இரத்தினபுரி** |
| சிங்கர் நிறுவனம், டி.எஸ். சேனாநாயக்க வீதி, கண்டி. தொ.பே. 0711-980 980 0710-336 329 | 77/1/4 யக்கல வீதி கம்பஹா. தொ.பே. 0718-657 775 | இல 36, கவிமதுர வைத்தியசாலை, சுசந்த மாவத்தை, பாணந்துறை தொ.பே. 0710-336 332 | ஆரோக்யா வைத்தியசாலை, முஹூது மாவத்தை, சம்பத் வங்கி அருகில், தங்காலை தொ.பே. 0710-336 334 | இல 85, உள் சுற்று வீதி, இரத்தினபுரி. தொ.பே. 0715-980 980 |

இத்தாலி, பிரான்ஸ், கனடா, இங்கிலாந்து உட்பட மேற்கத்திய நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள், இந்தியாவிலும் வைத்தியத் துறையிலே வைத்தியசாலைகளில் பயிற்சி பெற்ற தாதியர்களுக்கு வேலைவாய்புகளும், வைத்தியத்துறையுடன் தொடர்புடைய இன்னும் பல துறைகளில் பெருமளவிலான வெற்றிடங்கள் நிலவுகின்றன.

Registered Education Institute in the republic of Sri Lanka

பிரதான காரியாலயம்
**அய்வா**
சர்வதேச தாதியர் பாடசாலை
இல 85, உள் சுற்று வீதி, விபர்டி கட்டடம், இரத்தினபுரி.

NTS
P.V. 91973

ரூ 40/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் தெரிவு செய்த கிளையை குறிப்பிட்டு விண்ணப்பப்படிவத்தினை அருகிலுள்ள எமது கிளைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

தொ.பே : 0454 980 980
0715 980 980 Fax : 045 2233000
E-mail : manojhewaduwa@yahoo.com

விண்ணப்பப்படிவ பிரதிகளை எமது இணையத்தளத்தினூடாகப் பெற்றுக் கொள்ளலாம். Web : schoolofnursingiva.laknet.lk

(C/11674)(6.3)

மகளிரின் எதிர்கால வாழ்க்கைக்கான ஒரு வழிகாட்டியாக
1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....



யாழ். **கலாலயா**
பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)



**மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**



- கேக் ஐசிங், உணவு தயாரித்தல்,
- Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சிராக்குதலும்)
- முக அழகுக் கலை (Facials)
- Pedicure,Manicure (கைகள், கால்கள், விரல்கள்,நகங்கள் அழகு படுத்துதல்)
- Nail art
- மெஹெந்தி போடுதல்
- இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,



மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

- (B)பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள்.

சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 29-09-2013
ஞாயிறு காலை 9.00 மணி
கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 02-10-2013
புதன் காலை 9.00 மணி
மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.

-இயக்குநர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறண்டிப்பிட்டி பகுதி சிமிழ் கண்ணகைபுரம் ஆகியது

வரணி, செப். 23

வரணி வடக்கு பிராம அலுவலர் பிரிவில் உள்ள குறண்டிப்பிட்டிஎன்றுஇதுவரைகாலமும் அழைக்கப்பட்டு வந்த பகுதி கடந்த 10.09.2013 தொடக்கம் சிமிழ் கண்ணகைபுரம் என்று பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பெயர் மாற்றத்தை சாவகச்சேரிப் பிரதேசசபையினர் அங்கீகரித்து கடிதம் ஒன்றை வழங்கியுள்ளதாக பிரதேச ஸ்ரீ கணேசா சனசமூக நிலையத் தலைவர் க.விஜயகுமார் தெரிவித்தார்.

குறித்த பிரதேச மக்களின் வாழ்வாதாரத் திட்டத்தை மேம்படுத்தும் நோக்கில் யு.என்.டீ.பி. நிறுவனம் கடந்த போர் கால கட்டத்தில் 25 குடும்பங்களுக்கு வீடுகள் அமைக்க நிதியுதவி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ-122)



நவாலிப் பாலத்தின் இரு பக்கத்திலும் வீதியின் மேல் வீதித் தடை அமைக்கப்பட்டுள்ளது. இவ் வீதித் தடைகள் வீதியின் நிறம் போல கறுப்பு நிறமாக காணப்பட்டதால் வாகனத்தில் பயணிப் போர் இந்த உயர்வான வீதித் தடைப் பகுதிகளை இனம் காணமுடியாமல் இருந்தது. இதேவேளை வாகனத்தில் பயணிப்போர் இவ்வீதித்தடைகளை இனங்காண வசதியாக இவ் வீதித் தடைகளின் மேல் வெள்ளை வர்ணத்தாலான வரிக் கோடுகள் பூசப்பட்டன. (வ-51)

வெற்றியைக் கொண்டாடிய

## பல்கலை மாணவர் மீது தாக்குதல்கள்

வலி. வடக்கு, செப். 23

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அதிகாலை பல் கலைக்கழக விடுதிக்குள் புகுந்த படையினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

வட மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்களிப்பு விவரங்கள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெற்ற அமோக வெற்றியைக் கொண்டாடும் வகையில் வெடி கொளுத்தினர்.

அதனைத் தொடர்ந்து பல்கலைக்கழக விடுதிக்குள் புகுந்த படையினர் மாணவர்களை தாக்கி விட்டு சென்றுள்ளனர்.

நேற்று சனிக் கிழமை கூட தேர்தல் வாக்களிப்பு நிலையங்களுக்கு முன் பாக 4-6 வரையிலான இராணுவப் புலனாய்வாளர்கள் பொது மக்களை அச்சுறுத்தும் வகையில் சிவில் உடை யில் நின்றதையும் அதனை பொலிஸார் உட்பட ஏனைய தேர்தல் கணிகாணிப்பு முக வர்கள் அவதானித்த போதிலும் யாரும் அவர்களை கைது செய்யவோ அன்றி அந்த இடங்களில் இருந்து அகற்றவோ நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பது தற்போது பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்பட்ட பின்னர் பொது மக்களின் கடுமையான விமர்சனத்துக்கு எழுந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (வ-86)



## வீதிகளில் பழங்கள் விற்பனை சந்தை வியாபாரிகள் பாதிப்பு



பருத்தித்துறை, செப். 23

நெல்லியடிச் சந்தையில் ஒதுக்கப்பட்ட இடத்தில் இல்லாமல் வழிப் பாதைகளில் பழங்கள் விற்பதால் சந்தையில் பழங்கள் விற்கும் வியாபாரிகள் தமது வியாபாரம் பாதிப்படைவதாக விசனம் தெரிவித்துள்ளனர்.

நெல்லியடிச் சந்தையில் பழங்கள் விற்பதற்கும், மரக்கறிகள் விற்பதற்கும், மீன், இறைச்சி என்பவை விற்பதற்கும் தனித் தனியான கட்டடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. ஆனால் மாம் பழங்களையும் வேறு சில பழங்களையும் சந்தையின் வழியிலும் முன்னர் கீரையை மட்டும் வெளியில் வைத்து விற்றவர்கள் தற்போது அதனுடன் சேர்ந்து மரக்கறியையும் விற்பனை செய்ய ஆரம்பித்துள்ளனர்.

இதனால், சந்தைக்கு வரும் மக்கள் தமது தேவைகளைச் சந்தை வழியிலேயே பெற்றுக் கொண்டு திரும்புவதால் தாம் போதியளவு வருமானத்தை ஈட்ட முடியாதுள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவிக் கின்ற னர்.

நிரந்தர வியாபாரிகளாகிய எம்மிடம் வரிப் பணத்தை அறவிட்டுக் கொண்டு வழி வியாபாரிகளை அனுமதிப்பதையிட்டு அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே, வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையினர் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-422)

# யாழ். குடாநாட்டு சந்தைகளில் மாறுபட்ட வீதத்தில் வரி அறவீடு

### குத்தகையாளர்கள் கவலை

அச்சுவேலி, செப்.23

யாழ்.மாவட்டத்தில் உள்ள பொதுச் சந்தைகளில் வரி அறவீடு நடைமுறைகள் இடத்துக்கு இடம் மாறுபட்ட விதத்தில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சந்தைகளை குத்தகைக்குப் பெற்றவர்கள் வரி அறவிடும் முறையால் விவசாயி களும் பொதுமக்களும் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தங்கியிருந்து வியா பாரம் செய்வோர் இடவாடகை யாக எவ்வளவைச் செலுத்த வேண்டும் என்பது வரை யறை இல்லை. சந்தைக்கு சந்தை இடத்துக்கு இடம் மாறு பட்ட விதத்தில் அறவீடு செய் யப்படுகின்றது.

பொதுச் சந்தைகளில் வரி அறவீட்டு வீதம் மற்றும் அறவீடுகள் தொடர்பான விவரங்கள் பொது விளம்பரமாக மக்கள் பார்வைக்குமுன்வைக்கப்படவேண்டும். விளம்பரப் பலகைகளை வைக்கும் விடயத்தில் உள்ளூராட்சிச் சபைகளோ மற்றும் மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகமோ மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகமோ ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை எனக் கூறப்படுகின்றது.

பொதுச்சந்தைகளில் இடத்துக்கு இடம் மாவட்ட வீதத்தில் வரி அறவீடு செய்வதோடு மொத்தமாக விளைபொருள்களை விற்பனை செய்ய கொண்டு செல்லும் விவசாயிகளிடம் நூறு ரூபாவுக்கு குறித்த தொகை என வரி அறவிடப்படுவதோடு விற்பனை செய்யும் 10 கிலோவுக்கு ஒரு கிலோ கழிவும் தரகர்கள் விரும்பிய விதத்தில் விளை பொருள்களை எடுத்துக் கொள்வதும் சாதாரண நடை முறையாக உள்ளது.

அத்துடன் தங்கியிருந்து வியாபாரம் செய்வோர் இடவாடகையாக எவ்வளவைச் செலுத்த வேண்டும் என்பது வரையறை இல்லை. சந்தைக்கு சந்தை இடத்துக்கு இடம் மாறுபட்ட விதத்தில் அறவீடு செய்யப்படுகின்றது.

சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்கான பாதுகாப்பு வரியும் வரையறை செய்யப்பட்ட அளவு வீதத்தில் இல்லை 10 ரூபாவுக்கு குறைய அளவு அறவீடு செய்யப்படுகின்றது.

பொதுச் சந்தைகளில் அறவீடு செய்ய வேண்டிய வரி வீதங்கள் மற்றும் இட வாடகை விவரம் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிளுக்கான பாதுகாப்பு கட்டணம் என்பனவற்றை உள்ளடக்கி பொது அறிவித்தல் பலகை பரிரங்கமாக வைக்கப்படும் இடத்து சந்தையை குத்தகைக்குப் பெற்றுக் கொண்டவர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப அறவீடு செய்வது மற்றும் விவசாயிகள் பொது மக்கள் விவரங்களை அறிந்த நிலையில் கொடுப்பனவுகளை செலுத்துவது வசதியாக இருக்கும். இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளோ அதிகாரிகளோ ஏற்புடைய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனப் பொது மக்கள் கோருகின்றனர். (வ-11)

## மாகாண சபை கூட்டங்கள் நடத்த இதுவரை இடங்கள் தெரிவாகவில்லை

வலி. வடக்கு, செப். 23

வடமாகாண சபைத் தேர்தல் முடிவடைந்துள்ள நிலையில் மாகாண சபைக்கான கூட்டங்கள் நடத்துவதற்கான இடங்கள் எவையும் இதுவரை தெரிவு செய்யப்படாத நிலைமையே காணப்படுவதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

வடக்கு கிழக்கு மாகாண சபை 1990 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலை மாவட்டத்தில் ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கு , கிழக்கு மாகாண சபை தனி மனித முடிவுகளின் அடிப்படையில் இயங்கி வந்தது.

வடக்கு கிழக்கு மாகாண சபை 1990 ஆம் ஆண்டு கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோண மலை மாவட்டத்தில் ஆளுநரின் கட்டுப்பாட்டின் கீழ் வடக்கு , கிழக்கு மாகாண சபை தனி மனித முடிவுகளின் அடிப்படையில் இயங்கி வந்தது.

2007ஆம் ஆண்டு உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் வடக்கு, கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்ட போதிலும் கூட வட மாகாண சபை யாழ். மாவட்டத்துக்கு மாற்றப்பட்டு திணைக்களங்கள் யாவும் தனியார் இல்லங்களில் இயங்கி வருகின்றன.

எனினும் வட மாகாண சபை மக்களுடைய பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் சந்தர்ப்பத்தில் எங்கு இயங்குவது என்பது பற்றி வட மாகாண ஆளுநரும் கவனம் எடுக்கவில்லை. மாகாண சபையின் அரச உயர் அதிகாரிகளும் கூட கவனம் எடுக்கவில்லை.

வட மாகாண சபை கட்டடங்கள் வசதி வாய்ப்புக்களை எதிர் [illegible] இடத்திலேனும் [illegible] பொது மக்களுடைய விருப்பம் ஆகும். (வ-86)

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில்

## இந்து ஆலயத்துக்கு அடிக்கல் நட்டு 2 வருடங்கள் கடந்தும் பணிகள் இல்லை

யழ்ப்பாணம், செப். 23

சாவகச்சேரி நீதிமன்ற வளாகத்தில் இந்து ஆலயம் அமைப்பதற்கான அடிக்கல் நடப்பட்டு இரண்டு வருடமாகியும் இது வரை எந்தவொரு வேலைத் திட்டமும் ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

சாவகச்சேரியில் உள்ள புராதன சிவன் ஆலயம் அமைந்திருந்த காணியில் நீதிமன்றம் இருந்து வருகிறது. இதனை உறுதிப்படுத்தும் வகையில் முன்னைய காலங்களில் கருங் கல்லிலான விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டு சிவன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நீதிமன்ற கட்டடத் தொகுதி அமைப்பதற்கு அத்திபாரம் வெட்டிய போது தொன்மை விக்கிரகங்கள் கண்டெடுக்கப்பட்டு யாழ்.பல்கலைக்கழக தொல்லியல் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலை யில் நீதிமன்ற வளாகத்தில் இந்து ஆலயம் ஆரம்பிப்பதற் காக சிரேஷ்ட சட்டத்தரணி சாந்தா அபிமன்ன சிங்கத்தால் அடிக்கல் நட்டப்பட்டது.

நீதிமன் றக் கட்டடத் தொகுதி நிர்மா ணிக்கப்பட்டு திறப்பதற்கு ஆயத்த நிலையில் உள்ள போதிலும் இந்து ஆலய கட்டடப் பணிகள் இது வரை ஆரம்பிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-9)

## 4 வயது பிள்ளை மீது வன்புணர்வு சிறிய தந்தை கைது

வலி. வடக்கு, செப். 23

நான்கு வயதுப் பிள்ளையை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பாக சிறிய தந்தை முறையானவரொ ருவர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

ஏழாலை மேற்கு பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் இரண்டு தினங்களுக்கு முன்னர் கைது செய்யப்பட்டவர் அரச பாடசாலையொன்றில் இரவுக் காவலாளியாக கடமையாற்றுபவராவார்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (வ-86)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கைதான இருவருக்கு 24 வரை விளக்கமறியல்

மட்டக்களப்பு.செப்.23
மட்டக்களப்பு.களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் சுகாதார அமைச்சரின் வாகனம் மோதி ஒருவர் உயிரிழந்தமை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இருவரும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கல்முனை- மட்டக்களப்பு வீதியில் கிழக்கு மாகாண சுகாதார



அமைச்சரின் வாகனம் மோதியதில் சைக்கிளில் வீதியை கடக்க முற்பட்ட முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
இந்த நிலையில் சாரதியை கைது செய்யமுற்பட்டபோது ஏற்பட்ட ஆள்மாறாட்டம் காரணமாக குறித்த வாகனத்தில் பயணம் செய்த இருவர் கைது செய்யப்பட்டனர்.
இவர்கள் இருவரும் களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது அவர்களை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டது.
இந்த விபத்துத் தொடர்பில் அமைச்சரின் வாகனமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை களுவாஞ்சிகுடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)



ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாஅத் ஏற்பாடு செய்த குருதிக் கொடை நிகழ்வு சனிக்கிழமை கல்முனையில் நடைபெற்றபோது மக்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# கூட்டமைப்பின் வெற்றியால் கிழக்கு மக்களும் மகிழ்ச்சியில்

## தகுந்த நேரத்தில் சரியான ஆணை என்கிறார் செல்வா எம்.பி

மட்டக்களப்பு.செப்.23
வடமாகாணசபைத் தேர்தல் பிரசாரத்தின் போது தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையினை வழங்குமாறு மக்களிடம் கேட்டு இருந்தோம். ஆனால் அதையும் தாண்டி அதற்கு மேலால் மக்கள் ஆணையைத் தந்துள்ளனர். அதையிட்டு நாம் மகிழ்ச்சி அடைவதுடன், இந்த மகிழ்ச்சியில் கிழக்கு மாகாண தமிழ் மக்களும் இணைந்து கொள்கின்றனர்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன். செல்வராசா தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:



நடைபெற்று முடிந்த வடமாகாணசபை தேர்தல் முடிவானது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சிறுபான்மை மக்களுக்கான உரிமையை அரசு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி நிற்கின்றது.
வடமாகாண மக்கள் சரியான நேரத்தில் சரியான ஆணையை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு வழங்கியுள்ளனர்.
தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறை படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பும் இதற்காகப் பெற்றுக்கொள்ளப்படும்.
இந்த மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து வடக்கையும் கிழக்கையும் இணைப்பதன் மூலம் தமிழ் பேசும் சமூகங்கள் சுதந்திரமாக வாழ வழி வகுப்பதுடன், இந்த வெற்றியில் கிழக்கு மாகாண மக்களும் இணைந்து கொள்கின்றனர்.- என்றார். (ச-10)

> தமிழ், முஸ்லிம் சமூகங்கள் ஒன்றிணைந்து வடக்கையும் கிழக்கையும் இணைப்பதன் மூலம் தமிழ் பேசும் சமூகங்கள் சுதந்திரமாக வாழ வழி வகுக்கும்

## சைக்கிள் திருடியவரை மடக்கிப் பிடித்த மக்கள்

மட்டக்களப்பு.செப்.23
காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காத்தான்குடி பிரதான வீதியில் சைக்கிள் ஒன்றைத் திருடியவரை பொது மக்கள் மடக்கிப்பிடித்து காத்தான்குடி பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.
காத்தான்குடி பிரதான வீதியிலுள்ள சம்பத் வங்கிக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளைத் திருடிக் கொண்டு செல்ல முற்பட்ட நிலையில் குறித்த திருடன் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.
இந்த நபரைக் கைது செய்த பொலிஸார் திருடிய சைக்கிளையும் கைப்பற்றியுள்ளனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் காத்தான்குடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பொலிஸ் ஆலோசனை குழுக்களின் கூட்டம்

மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் ஆலோசனைக் குழுக்களின் மீளாய்வுக் கூட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை மட்டக்களப்பு மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.
இந்த மீளாய்வுக் கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பொலிஸ் நிலையங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட 84 ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் அறிமுகம் செய்யப்பட்டதுடன் அவர்களுக்கான சான்றிதழ்கள் மற்றும் அடையாள அட்டைகள் என்பன வழங்கப்பட்டன. (ச-10)

## தொலைத்தொடர்பு கம்பத்துடன் மோதிய கார்



கல்முனை,செப்.23
கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நற்பிட்டிமுனை முஸ்லிம் கிராமத்தில் கார் விபத்து சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.
இந்த விபத்து கிராமத்தின் மையப் பகுதியான சன நடமாட்டம் நிறைந்த பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. எனினும் இந்த விபத்தில் தெய்வாதீனமாக விபரீதங்கள் எதுவும் நடைபெறவில்லை.
தொலை தொடர்பு கம்பத்துடன் மோதிய காரையும் பொது மக்கள் பார்வையிடுகின்றனர். (ச)

# கல்முனை மாநகர பிரதேசங்களில் முறையற்ற வகையில் வரி அறவீடு

> கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள வாகன தரிப்பிடத்தை கல்முனை மாநகர சபை தனிநபர் ஒருவருக்கு குத்த கைக்கு வழங்கியுள்ளது . எனினும் அந்த தனி நபரினால் முறையற்ற கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

அம்பாறை.செப்.23
கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் முறையற்ற வகையில் வரிகள் அறவீடு செய்யப்படுகின்றன. அதற்கு மாநகர ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.
கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை முன்பாக உள்ள வாகன தரிப்பிடத்தை கல்முனை மாநகர சபை தனிநபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளது . எனினும் அந்த தனி நபரினால் முறையற்ற கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. அத்தோடு அறவிடப்படும் பண தொகைக்கு பற்று சீட்டும் வழங்கப்படுவதில்லை. பற்று சீட்டு கேட்டால் மட்டும் மாநகரசபை உறுதிப்படுத்தப்படாத போலி பற்று சீட்டு வழங்கப்படுகிறது என்று மக்கள் தெரிவித்தனர். ஓட்டோ ஒன்றுக்கு 30ரூபாவும், மோட்டார் சைகள் ஒன்றுக்கு 20ரூபாவும் அறவிடப்படுகின்றன.
இந்த கட்டணம் கல்முனை மாநகர சபையால் நிர்ணயம் செய்யப்படாத கட்டணம் என்று மாநகர சபை வருமான அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அவ்வாறு குறித்த கட்டணம் அறவிடப்பட்டாலும் மாநகர சபை ஆணையாளர் அல்லது கணக்காளர் அல்லது அதிகாரம் பெற்ற அதிகாரி ஒருவருடைய இலட்சினை பொறிக்கப்பட்ட பற்றுசீட்டாக இருக்க வேண்டும் என்று மக்கள் கூறினர்.
எனினும் மாநகர சபையின் அனுமதி இன்றி பற்றுச் சீட்டு வழங்குவதால் மாநகர சபை அதிகாரிகளுக்கும், குத்தகை காரருக்கும் தொடர்புகள் இருக்கலாமா என்ற சந்தேகத்தை கல்முனை ஆதார வைத்தியசாலை வாகன தரிப்பிட குத்தகைகாரர் விடயத்தில் ஊகிக்க வேண்டியுள்ளது என்று மக்கள் சுட்டிக்காட்டினர்.
இதேவேளை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை முன் பாக உள்ள வாகன தரிப்பிடத்தில் முறையாக கட்டணங்கள் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வீட்டுத் திட்ட வீடுகள் மக்களிடம் கையளிப்பு



திருகோணமலை,செப்.23
மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கத்துக்கமைய வெருகல் பிரதேச செயலர் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட வீரர்கள் கிராம வீட்டுத் திட்டம் வெள்ளிக்கிழமை பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டது.
இந்த நிகழ்வு நிர்மாணத் துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் ஈச்சிலம்பற்று வீரர்கள் கிராமம் மக்களிடம் கையளிக்கப்பட்டதோடு நிதியுதவிக்கான காசோலையும் வழங்கப்பட்டது.
இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண சபை தவிசாளர் ஆரியவதி கலப்பதி, திருகோணமலை மாவட்ட செயலர் மேஜர் ஜெனரல் டி.ஆர்.டி. சில்வா, பிரதேச செயலர் பி. தனேஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)



இந்தச் சம்பவம் மின்சார ஒழுக்கால் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

# தீயால் வீடு எரிந்து நாசம்

மட்டக்களப்பு.செப்.23
அம்பாறை.அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அட்டாளைச்சேனை பிரதேசத்தில் சனிக்கிழமை வீடொன்றில் ஏற்பட்ட தீயினால் வீடும், வீட்டிலிருந்த பொருள்களும் தீயால் எரிந்து பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் அட்டாளைச்சேனை, 03 ஆம் பிரிவில் சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது வீட்டில் எவரும் இருக்கவில்லை. வீட்டிலிருந்து புகை மண்டலம் எழுந்ததைக் கண்ட அயல் வீட்டார் கூச்சலிட்டு மக்களை அழைத்துள்ளனர். சம்பவ இடத்துக்கு பொது மக்களுக்கும், பொலிஸாரும் விரைந்து சென்று தீ அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.
இந்தச் சம்பவம் மின்சார ஒழுக்கால் ஏற்பட்டிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. இதேவேளை தீயால் ஏற்பட்ட சேத விவரம் குறித்து விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைபர் தாக்குதல் ஏற்படும் அபாயம்

கொழும்பு.செப்.23
இலங்கை மீது சைபர் தாக்குதல்கள் நடத்தக்கூடிய அபாயம் காணப்படுகிறது என்று கொழும்பு ஆங்கில ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.
இணையத்தின் ஊடாக தகவல்களைக் கண்காணித்தல், உளவுபார்த்தல் போன்ற நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.
அரச நிறுவனங்கள் முக்கிய ஸ்தாபனங்களின் இணையத் தளங்கள் மீது தாக்குதல் நடத்தக்கூடிய அபாயம் காணப்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. அரசின் இரகசிய ஆவணங்களை இலகுவில் பார்வையிடக் கூடிய வகையிலான சூழ்நிலையே தற்போது காணப்படுகின்றது.
சட்டம் ஒழுங்கு, நிதித்துறை, வெளிவிவகாரம் உள்ளிட்ட பல்வேறு முக்கிய துறைகள் சார் தகவல்கள் உளவு பார்க்கப்படக் கூடிய அபாயம் காணப்படுகிறது. தனிப்பட்ட நபர்களின் இணையத் தளங்கள், மின்னஞ்சல்கள், சமூக வலைப் பக்கங்கள் போன்றவற்றுக்குள் ஊடுருவி தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று கூறப்படுகிறது.
அமெரிக்கப் பாதுகாப்புப் பிரிவினர் அந்த நாட்டு மக்களின் தகவல்களை இரகசியமாக உளவு பார்த்த விவகாரம், முன்னாள் சீ.ஐ.ஏ அதிகாரி எட்வர்ட் ஸ்னோவ்டனின் ஊடாக வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்பட்டு பெரும் சர்ச்சை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தகவல்களை உளவு பார்ப்பதற்கான அதிகளவு வாய்ப்புக்கள் இலங்கையில் காணப்படுகிறது என்று குறிப்பிடப்படுகிறது. (ச)






திருகோணமலை, மடத்தடி சனீஸ்வரா ஆலய வருடாந்த புரட்டாதி சனி விரதத்தின் முதலாவது வார விரத அனுஸ்டிப்பு சனிக்கிழமை இடம்பெற்ற போது பக்தர்கள் எள்ளுச் சட்டி எரித்து தமது தோசங்களுக்கான பரிகாரங்களில் ஈடுபடுபட்டனர். (ச-40)

# பிரதிப் பொலிஸ் மா அதிபரை அச்சுறுத்திய நான்கு பேர் கைது

கொழும்பு,செப்.23
கொழும்பு வடக்குப் பகுதிக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரை அச்சுறுத்திய பஸ் உரிமையாளர் மற்றும் மூன்று பஸ் ஊழியர்கள் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
பிரதிப் பொலிஸ் மா அதிபர் தனது அலுவலகத்துக்குச் சென்று கொண்டிருந்த போது தனியார் பஸ் ஒன்று அவரது வாகனத்தை முந்திச் சென்றுள்ளது.
அதனையடுத்து பஸ்ஸை நிறுத்திய பிரதிப் பொலிஸ் மா அதிபர், பஸ் சாரதியிடம் விசாரணை நடத்தியுள்ளார். அப்போது சாரதி அவரை தவறான வார்த்தைகளால் திட்டியுள்ளதுடன் அச்சுறுத்தியுள்ளார்.
அங்கு ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் சாரதியை தாக்கியுள்ளார்.
இவ்வாறு அநாகரிகமாக நடந்து கொண்டமை தொடர்பில் விசாரணை நடத்திய பொலிஸார் பஸ் உரிமையாளர் உட்பட சந்தேகநபர்களை கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியதையடுத்து, அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
இந்தச் சம்பவத்தையடுத்து 230 கொழும்பு - பூகொடை, 226 கொழும்பு -தெகட்டன, 224 கொழும்பு - தொல்கொட பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளன. (ச)



# இரத்தோட்டையில் 2 சடலங்கள் மீட்பு

கொழும்பு.செப்.23
மாத்தளை, இரத்தோட்டை பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் இருந்து இரண்டு சடலங்களை பொலிஸார் மீட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
இந்தச் சடலங்கள் சனிக் கிழமை இரவு மீட்கப்பட்டுள்ளன.
இதேவேளை வீட்டில் காயமடைந்த நிலையில் இருந்த பெண்ணொருவரும் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.
31 வயதான ஆண் மற்றும் 70 வயதான பெண் ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். 27 வயதான பெண் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டார். அவர்கள் அனைவரும் ஒரே குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
குடும்பத்தில் ஏற்பட்ட தகராறு காரணமாக 31 வயதான நபர் மனைவியின் தாயை கொலை செய்துள்ளதுடன் மனைவியையும் கொலை செய்ய முயற்சித்துள்ளார்.
இதன் பின்னர் அவர் தற்கொலை செய்து கொண்டுள் ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)



# ராஜதந்திர உறவைப் பேணுவதில் கவனம் செலுத்தத் தவறியது அரசு

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

கொழும்பு.செப்.23
அரசு ராஜதந்திர விவகாரங்களில் கூடுதல் கவனம் செலுத்தத் தவறியுள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.
இலங்கைக்கு அண்மையில் வருகை தந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் ஆணையாளர் நவநீதம் பிள்ளை, சுதந்திர சதுக்கத்தில் அமைந்துள்ள டி.எஸ்.சேனாநாயக்க சிலையும், பௌத்த கொடியையும் அகற்றுமாறு கோரியதாக பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார். எனினும், அதனை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மறுத்துள்ளார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரட்ண தெரிவித்தார்.
சர்ச்சைக்குரிய கருத்துக்களை ஆளும் கட்சியினர் வெளியிடுவதும் அதனை ஆளும் கட்சியினரே மீள மறுப்பதும் தற்போது அரசுக்கு வாடிக்கையாகிவிட்டது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

> “ வெளிநாட்டு ராஜதந்திரிகளை அவமரியாதை செய்வது ஆரோக்கியமான நடவடிக்கையாகக் கருதப்பட முடியாது

முக்கிய பொறுப்புக்களை வகிப்பவர்கள் நாட்டின் நன் மதிப்பை பாதுகாக்கக் கூடிய வகையில் கருத்துக்களை வெளியிட வேண்டியது அவசியமானது. ஐக்கிய நாடுகள் அமைப்பு உள்ளிட்ட சர்வதேச அமைப்புக்கள் மற்றும் நாடுகளிடம் இலங்கையின் நன்மதிப்பு வீழ்ச்சியடைவதற்கு அரசே பொறுப்பு என்று அவர் சுட்டிக் காட்டினார்.
வெளிநாட்டு ராஜதந்திரிகளை அவமரியாதை செய்வது ஆரோக்கியமான நடவடிக்கையாகக் கருதப்பட முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# பொதுநலவாய மாநாட்டுக்கு பெருந்தொகை பணம் செலவு

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு.செப்.23
பொதுநலவாய நாடுகள் மாநாட்டுக்காக அரசு அதிக பணத்தைச் செலவிட்டு வருகிறது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஸ்ட உப தலைவர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.
சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலின் போதே அவர் இவ்வாறு கூறினார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவதில் எவ்வித தவறும் இல்லை. எனினும், அதற்காக 15000 கோடி ரூபா வரையில் செலவிடப்பட உள்ளது.
பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை நடத்துவதன் மூலம் நாட்டுக்கு மேலும் அபகீர்த்தி ஏற்படக் கூடும். நாட்டின் நன்மதிப்பு உயர்த்தப்படக் கூடும் என்ற கருத்தில் உடன்பாடில்லை.
ஏனெனில் மாநாட்டில் பங்கேற்கும் உலகின் பலம் பொருந்திய நாடுகளின் தலைவர்கள் மனித உரிமை மீறல்கள் குறித்து



கொழும்பிலிருந்தே கேள்வி எழுப்பக் கூடும். இது நாட்டுக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தாது.-என்றார். (ச)

# மானியம் வழங்கக் கோரி ஒக்டோபர் முதல் போராட்டம்

கொழும்பு,செப்.23
2014 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சம்பள உயர்வு, மானியங்கள், வாழ்க் கைச் செலவு குறைப்பு போன்ற முக்கிய காரணிகளை வலியுறுத்தி போராட்டங்கள் நடத்தப்படவுள்ளன.
எதிர்வரும் நவம்பர் மாதம் வரவு- செலவுத் திட்ட யோசனை முன்வைக்கப்பட உள்ளது.
இந்தப் போராட்டங்களை அரசியல் கட்சிகள், வெகுஜன அமைப்புக்கள், தொழிற்சங்கங்கள் போன்றன கூட்டாக இணைந்து எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதல் ஆரம்பிக்கவுள்ளன.
இந்தப் போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி போன்ற முக்கிய கட்சிகளும் ஈடுபட உள்ளன.
பொருள்கள் சேவைகளுக்கான விலைகளைக் குறைத்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்குமாறு கோரி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப்படும் என்று ஜே.வி.பி அறிவித்துள்ளது. (ச)

# காதி நீதிமன்றங்கள் ஊடாக திருமணப் பிரச்சினைக்குத் தீர்வு

## ஹக்கீம் கூறுகிறார்

கொழும்பு, செப். 23
முஸ்லிம் சமூகத்தவரின் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் கீழ் காதி நீதிமன்றங்களின் ஊடாக திருமண வாழ்வு தொடர்பான பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகின்றது என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.
மாத்தளையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள காதி நீதிமன்றத்தை திறந்து வைத்து உரையாடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:
"ஆரம்ப காலங்களில் வீடுகளிலும் பாடசாலைக் கட்டடங்களிலும் இயங்கி வந்த காதி நீதிமன்றங்கள் இன்று அரச காணிகளில் நிரந்தரக் கட்டடங்களாக்கப்பட்டுள்ளன. பொது மக்கள் காதி நீதி மன்றங் [illegible] பாராட்டத்தக்கது. நாட்டில் இன்னும் பல காதி நீதிமன்றங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன. முஸ்லிம் விவாக, விவாகரத்து சட்டத்தில் மாற்றம் [illegible] கவனம் [illegible] வருகின்றோம்.- என்றார். (ச-10)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கு வாக்காளரின் எழுச்சி அரசுக்கு விடுக்கும் செய்தி..

வடக்கு வாழ் மக்களால் மட்டுமன்றி , புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகளாலும், அனைத்துலக நாடுகளினாலும் மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபைத் தேர்தல் நேற்றுமுன்தினம் நடந்தேறி விட்டது.

வாக்காளர் பெருமக்களின் விழிப்புணர்வால், எதிர் பார்த்ததையும் விடத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சிறப்பான-அமோக-வெற்றியைப் பெற்றுள்ளது.

தேர்தல் பிரசாரத்தின் போது, அரசு சார்ந்த தரப்புகளால் தேனொழுகும் பிரசாரம் கட்டவிழ்த்துவிடப்பட்ட போதிலும், கவர்ச்சிகரமான ஆசையான வாக்குறுதிகள் அளிக்கப்பட்ட போதிலும், வடக்கு வாக்காளர்களை ஏமாற்ற இயலவில்லை.

தேர்தலில் போட்டியிட்ட அரசு சார்பில்லாத கட்சிகளின் அமோக வெற்றியைத் தடுத்துவிட வேண்டும் என்ற அரசாங்கத்தின் நோக்கத்தை, அதன் பலம் மிக்க பரப்புரைகள் மற்றும் தகிடு தத்தங்களால் ஈட்ட முடியவில்லை. வடக்கு மக்கள் நிராகரித்து விட்டார்கள்.

மிகக் குறிப்பாக, புலனாய்வாளர்கள் மற்றும் இராணுவத்தின் எடுபிடிகளின் அச்சுறுத்தல்கள், வன்முறைகள் வெளிப்படையாக இருந்த போதிலும் , வடக்கு வாக்காளர்கள் உதாசீனம் செய்து உதறித் தள்ளிவிட்டதையே தேர்தல் முடிவுகள் முழுமையாகத் தொட்டுக் காட்டுகின்றன.

போரின் போதும், அதன் பின்னரான கடந்த நான்கு வருட காலத்திலும், வடக்கு மக்களின் அடிப்படை, அத்தியாவசியத் தேவைகளை அரைகுறையாகவேனும் பூர்த்தி செய்வதில் அரசு முழுமையான அக்கறை காட்டவில்லை. பிரசாரம் நூறு வீதமும் செயல் இருபது வீதமும் என்ற வகையிலேயே அவை நடந்தேறின.

தேர்தலில் போட்டியிட்ட அரசு சாராத கட்சிகள், மிகக் குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு (தமிழரசுக் கட்சி) உள்நாட்டு, வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப்பாளர்கள்-

கண்களுக்குள் எண்ணெய் விட்டுக் கொண்டும் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டும் உன்னிப்பாகச் செயற்பட்டதாலேயே 68 சதவீத வாக்களிப்புச் சாத்தியமானது என்பது ஊன்றிப் பதிய வேண்டிய ஒன்றாகும்.

தேர்தல் நாளன்று ஒரு புனித கடமையை நிறைவேற்றும் பாங்கில், காலை வேளையில் தமது ஜனநாயகக் கடமையை வடக்கு வாழ் மக்கள் மிக்க ஆர்வத்தோடு நிறைவேற்றினர்.

அது மட்டுமன்றி, தமது தீர்ப்புடன் வடபகுதியின் சக மக்களும் ஒத்தியங்கினரா என்பதனைக் கண்டறிவதற்காக தேர்தல் முடிவை மிக ஆர்வத்துடன் எதிர்பார்த்திருந்தனர்.

வாக்காளர் பெருமக்களின் அந்த ஆவல் நேற்று இப்பத்தியை எழுதும் போதும் தளராது இருந்தது. வேட் பாளர்கள் பெற்ற விருப்பு வாக்குகளை அறிவதில் காட்டிய தீவிர ஆர்வம் அதனை வெளிப்படுத்தியது. மொத்தத்தில் வடக்கு வாழ் மக்கள் தமது இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் தமது விருப்பை அமோகமாக வெளிப்படுத்தி உள்ளனர்.

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நீண்ட காலமாக நடத்தாமல், அதற்கான உப்புச் சப்பற்ற காரணங்களை முன்னிறுத்தி வந்த அரசாங்கம், திடீரெனத் தனது மனதை மாற்றியதும், தேர்தலை நடத்தியதும் தனது சொந்த உள்ளார்ந்த விருப்பத்தினால் அல்ல.

இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகள் அந்தரங்கமாகக் கொடுத்த அழுத்தமே அரசை இந்த வழிக்கு உந்தியது என்பது இரகசியமல்ல.

ஆனால் அதனைப் பூசி மெழுகிவிட்டு, தானே சொந்தத்தில்-சுய விருப்பத்துடன்- அதனைச் செயலாக்கியதாக அரசும் அதன் அமைச்சர் பிரதானிகளும் மார் தட்டிப் பேசினாலும் ஆச்சரியப் படுவதற்கு இல்லை.

இதேவேளை, வடக்கு மக்கள் தமது தீர்ப்பின் ஊடாக முக்கிய செய்தியை வெளியிட்டிருப்பதும் ஊன்றிக் கவனித்தாக வேண் டிய ஒன்றாகும்.

முப்பது வருடகாலமாக ஆயுதப் போராட்டம் வெறும் அபிவிருத்திக்கா நடத்தப்பட்ட ஒன்றல்ல. அர்த்தமுள்ள அதிகாரங்கள் நிறைந்த அரசியல் தீர்வே அதன் முழுதார்ந்த குறிக்கோள்.

அதனை வலியுறுத்தும், வகையிலேயே, வடக்கு வாக்காளர்கள் தமது வாக்குகளை - தீர்ப்பை - வழங்கி உள்ளனர். அவர்களது நிதானமான முடிவு - மக்கள் சிந்தனை, மஹிந்த சிந்தனையை விஞ்சி எழுந்திருப்பதனை அரசு மறந்து விடலாகாது.

மறுபுறத்தில், வடமாகாண சபைத் தேர்தலை உன்னிப்பாகக் கவனிக்கிறோம், உள்ளார்ந்து அவதானிக்கிறோம் என்று தெரிவித்த தரப்புக்கள்-

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் முதற்கொண்டு அனைத்துலக நாடுகளின் அரசுகள் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள் வரை-

இது விடயத்தில் இலங்கை அரசு அக்கறையுடன் செயற்படுத்துவதற்கு உந்துதல் கொடுக்குமா, அதற்கான அடிகளை அவை முன் வைக்குமா என்பதனை வாக்களித்த மக்கள் உரிமையோடும் உன்னிப்பாகவும் எதிர்பார்த்து நிற்கின்றனர்.

# ‘உதயன்’ பத்திரிகை போன்று வெளிவந்த மோசடி பத்திரிகை

## வாக்காளரை ஏமாற்ற முயன்று ஏமாற்றமடைந்த ஏமாளிகள்

சண்டே ரைம்ஸ் கட்டுரையிலிருந்து

■ கோகுலன்

தேர்தல் செயற்பாடுகளில் கடந்த வெள்ளிக் கிழமை காலை 12.40 மணியளவில் நடந்த சம்பவம் ஒன்றில் த.தே.கூட்டமைப்பு வேட்பாளர் அனந்தி சசிதரன் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் அமைந்தது. டிரக் ஒன்றில் வந்த இனந்தெரியாத குழுவொன்று இந்தத் தாக்குதலை நடத்தியிருந்தது. சம்பவத்தில் காயமடைந்தவர்களில் கண்காணிப்பு அமைப்பொன்றைச் சேர்ந்த 28 வயது சட்டத்தரணி சுஹாஸ் கனகரட்ணமும் ஒருவர். சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலுக்கான மக்கள் அமைப்பின் (Paffrel) பிரதி நிதியாக அந்த இடத்தில் அவர் இருந் துள்ளார். புலிகள் அமைப்பின் திரு கோணமலை அரசியல் பிரிவின் திருமலை அரசியல் பிரிவு தலைவர் காணாமற்போனவரான எழிலனின் மனைவியாவார் அனந்தி.

அவர் த.தே.கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர்கள் முதல் மூவரில் ஒருவராக அவர் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவரது பிரசாரத்தில் அவர் அடைந்த துன்பங்களுடன் அவரது கணவர் எவ்வாறு 2009 ஆம் ஆண்டு போரின் இறுதியில் ராணுவத்திடம் சரணடைந்தார். மற்றும் அவர் பற்றிய தகவலே கிடைக்காமல் போனமை பற்றிய தகவல்களைக் கொண்டதாக இருந்தது. கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான ஆணைக் குழுவின் முன் சாட்சியமளித்தவர்களில் அவரும் ஒருவர். மனித உரிமை ஆணையாளர் நவநீதம் பிள்ளையை யாழ்ப்பாணத்தில் சந்தித்துப் பேசியவர்களில் அவரும் ஒருவர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல செய்திப் பத்திரிகை முகவர்கள் உதயன் பத்திரிகையின் வழக்கத்துக்கு மாறான ஒரு பதிப்பை விநியோகித்துக்காக கடந்த சனிக்கிழமை பெற்றுக் கொண்டார்கள். அதன் முதல் பக்க முக்கிய செய்தி என்னவாக இருந்தது என்றால்; திருமதி சசிதரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து விலகி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் சேர்ந்துவிட்டார் என்பதாகும். ஆனால் உதயன் பத்திரிகை நிறுவனத்தினர் அது மோசடி பத்திரிகை என்று உடனடியாக அறிவித்திருந்தார்கள். அந்தப் பத்திரிகைப் பதிப்புக்கும் தமக்கும் சம்பந்தமில்லை என்று அவர்கள் தமது இணையத்தில் அறிவித்தல் ஒன்றை விடுத்தார்கள்.

கடந்த வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டி ஒன்றில் றைபிள் (துப்பாக்கி) படம் ஒன்று கீறப்பட்டு சிவப்புக் கோட்டினால் அது வட்டமிடப்பட்டிருந்தது. அதில் தமிழில் பின்வரும் கருத்து வரும்படி எழுதப்பட்டிருந்தது. "இரண்டு தரம் யோசியுங்கள். மேலும் ஒரு போருக்கு நீங்கள் தயாரா? த.தே. கூட்டமைப்புக்கு வாக்களிக்கப் போகிறீர்களா?" என்பதாக.

அரசியல் கட்சிகள் மற்றும் இந்தச் சுவரொட்டிகளை கண்ணுற்றவர்களி டமிருந்து அது பற்றிய முறைப்பாடுகள் தமது நிறுவனத்துக்கு கிடைத்திருந்ததாக கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்திருந்தார். வாக்காளர் மத்தியில் பய பீதியை உருவாக்குவதற்காக இவ்வாறு செய்யப்பட்டிருந்தது. தாம் விரும்பும் கட்சிக்கு வாக்காளர்கள் வாக்களிக் கக் கூடாதென அச்சுறுத்துவதானது மிக அபாயகரமான விடயம். இந்த மாதிரி செயல்களை நாம் கண்டிக்கிறோம் என்றார் அவர்.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) மாகாண சபைத் தேர்தலானது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குப் பல வழிகளில் முக்கியமாக அமைந்தது. போர் ஓய்ந்துள்ள சூழலில் அது நடந்துள்ளது. பொருளாதாரக் கஷ்டங்கள் , ஜனநாயகம் தொடர்பான பிரச்சினைகள், முக்கியத் துவம் இல்லாத பகுதிகளில் அபிவிருத் திப் பணிகள் போன்றவை அரசுக்கு எதிராக எதிர்த் தரப்பினர் தமது பரப்புரை மேடைகளில் முன் வைக்கும் விடயங்களாக இருந்தன. சிறுபான்மையோரை முறை தவறி நடத்துவது மற்றும் பெருமளவில் இடம் பெற்று வரும் இலஞ்சம், ஊழல்கள் தொடர் பாகவும் அரசு மீது குற்றச்சாட்டுகள் நீண் டிருக்கின்றன. இன்னும் மிக முக்கியமான விடயம், வடமாகாண சபைத் தேர்தலில் த.தே. கூட்டமைப்பின் சவாலை எதிர்கொள்வதற்கு கட்டளையொன்றை வழங்கும்படி அது வாக்காளர்களை கேட்டிருந்தது. அரசின் ஆதரவு பெற்ற அமைப்பு ஒன்று த.தே. கூட்டமைப்பின் சர்ச்சைக்குரிய தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக தீர்ப்பொன்றைக் கேட்டு நீதிமன்றுக்குச் சென்றுள்ளது. எனவே அரசுக்கு கிடைக்கும் வெற்றி அதன் கொள்கைகளுக்கு கிடைத்த அங்கீகாரமாகவும் எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டுக்கள் நிராகரிக்கப்பட்டதாகவுமே கருதப்படுவதாகும். என்றாலும், அவர்கள் கிளப்பியுள்ள சில பிரச்சினைகள் தொடர்ந்தும் இருந்து வரவே செய்யும். உண்மையில் வரும் செவ்வாய்க் கிழமை ஐ.நா.வில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ நிகழ்த்தவிருக்கும் உரையில் மாகாண சபைத் தேர்தல் குறிப்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக குறிப்பிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஐ.நா.மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அவர் தம் கருத்தை வெளியிடக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஜெனிவாவில் நடைபெற்று வரும் மனித உரிமைகள் சபையின் மாநாட்டில் வரும் 25 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம் பிள்ளை அம்மையார் தமது இலங்கை தொடர்பான வாய் மூலமான அறிக்கையை வழங்கவிருக்கிறார்.

இந்த உரையில் ஐ.நா.அதிகாரிகள் வழங்கியுள்ள விடயங்களையும் அவர் உள்ளடக்கியிருப்பார் என்று தெரிகின் றது. அதன் பின் சபையின் 25 ஆவது மாநாட்டின்போது அவர் விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்கும்படி கேட்கப்பட்டுள்ளார். தற்போதைய தீர்மானங்கள் செயற்படுத்தப்படுவதையொட்டிய அறிக்கை 25 ஆம் திகதி இடம்பெறுவதன் பின்னர் நடக்கும் விவாதத்தையடுத்து அவரது விரிவான அறிக்கை 25 ஆவது மாநாட்டில் சமர்ப்பிக்கப்படும்.

தற்போதைய மாநாடு ஆரம்பமானதும் ஆரம்ப உரையொன்றை நிகழ்த்திய அம்மையார் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றதாக 15 நாடுகளைப் பட்டியலிட்டிருந்தார். இலங்கை தொடர் பாக அவர் குறிப்பிட்ட போது, அண்மையில் நான் இலங்கைக்கு விரிவானதொரு பயணத்தை மேற்கொண்டபோது அதற்கு அனுசரணை வழங்கிய இலங்கை அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன். அந்த நாட்டில் இடம்பெற்றுவரும் மீள் கட்டமைப்புக்கள், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான பணிகளை பகுப்பாய்வு செய்வதற்கு இந்தப் பயணம் உதவியாய் இருந்துள்ளது. மனித உரிமைகள் தொடர்பான விரிவான ஆய்வுக்கும் இது உதவியுள் ளது. இவைகளில் சமய சகிப்பின்மை கள், ஆட்சிமுறை மற்றும் சட்ட செயற் பாடுகளும் அடங்கும்.

எனது கணிப்பீடுகள் தொடர்பாக பின்னர் ஒரு சமயம் அறிக்கை தாக்கல் செய்வேன். இருந்தாலும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் போன்றோர் என்னைச் சந்தித்ததன் பின்னர் பழிவாங்கல் அச்சுறுத்தல் மற்றும் தாக்குதல்களில் இருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்பதில் நான் கவலை கொண்டுள்ளேன் என்று தெரி வித்திருந்தார்.

ஐ.நா.வுடன் மற்றும் அதன் பிரதிநிதிகள் மற்றும் பொறி அமைப்புக்களுடனான ஒத்துழைப்பு தொடர்பான ஐ.நா.செயலாளர் நாயகத்தின் அறிக்கை தற்பொழுது சபையின் ஆய்வின் இருக்கிறது. ஆள்களுக்கு எதிரான 2012 ஜூன் 16 முதல் ஜூன் 15 2013 வரையான பழிவாங்கல்கள், பயமுறுத்தல்கள் தொடர்பாக இந்த அறிக்கை பேசுகின்றது. தமது ஆரம்ப உரையில் அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தொடர்பாகவும் நவிப்பிள்ளை சில குறிப்புக்களை முன்வைத்தார்.

மனித உரிமைகள் சபையில் நிறை வேற்றப்பட்டுள்ள இரண்டு தீர்மானங்கள் மீதான அமெரிக்காவின் நிலைப்பாடு உறுதியாகவே இருக்கிறது என்பதை ராஜாங்க அமைச்சின் புதிய உதவி செயலாளர் நிஷா தேசாய்பிஸ்வால் உறு திப்படுத்தியுள்ளார். செனெட் சபையின் வெளியுறவுக் குழுவின் விசாரணை அமர்வின்போது அவர் இதனைக் கடந்த வாரம் தெரிவித்தார். குறித்த பிராந்தியத்தில் உள்ள ஜனநாயக ஆட்சிமுறை , மனித உரிமைகள் மற்றும் ஊழல் குறித்து இப்போது நான் குறிப்பிடாது போனால் அதற்கான சந்தர்ப்பத்தை இழந்தவள் ஆகிவிடுவேன். பேரழிவை ஏற்படுத்தியி ருக்கும் போரின் பின்னர் தனது சமூக அமைப்பை மீளவும் கட்டியெழுப்புவதில் இலங்கை ஈடுபட்டுள்ள நிலையில் அங்கு போருக்குப் பின்னர் நிலையான மீள் இணக்கம் ஏற்பட்டு போர் கால அட்டூழியங்களுக்குப் பொறுப்புக் கூறுதலை உறுதிபடுத்துவதோடு அரசு தனது மக்களுக்கு அளித்த உறுதிமொழி கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென நாம் தொடர்ந்தும் வற்புறுத்துவோம் என்று கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில் செனெட் அனுமதிக்குமானால் அந்தப் பிரதேசத்திலுள்ள நாடுகள், பயங்கரவாதம், தீவிர வாதம் முதலியவற்றின் பயமுறுத்தலில் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அவர்களோடு தொடர்ந்து இணைந்து செயற்படுவதோடு ஜனநாயகத்தை மற்றும் மனித உரிமைகளை நோக்கிய முன்னேற்றமானது மக்கள் தமது எதிர்ப்பினை தெரிவிப்பதற்கு அமைதியான வழிவகைகள் இருக்க வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு இது அவசியம். யு.எஸ்.எயிட் அமைப்பின் உதவி நிர்வாகியாக இருந்துள்ள பிஸ்வால் இப்போது ராஜாங்க அமைச்சின் உதவிச் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்தப் பதவியில் முன்னர் ஒரு சமயம் இலங்கையில் அமெரிக்கத் தூதுவராக இருந்தவரான றொபேர்ட் பிளேக் இருந் துள்ளார்.

இலங்கைக் குழு முக்கியமான இன் னொரு கட்டமான பொதுநலவாய அமைப்பின் அமைச்சர்கள் செயற் குழுவின் அமர்வு நியூயோர்க்கில் வரும் 26 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது. அதேசமயம் ஐ.நா .பொதுச் சபைக் கூட்டத்தின் புறநிலையில் பொதுநலவாய வெளியுறவு அமைச்சர்களின் கூட்டமொன்றை இலங்கை நியூயோர்க்கில் நடத்தவிருக்கின்றது.

மாகாண சபைத் தேர்தல்கள் முடிவுற்ற நிலையில் இலங்கையின் -எல்லாரது கவனமும் இப்போது சர்வதேசத்தின் பக்கம் திரும்பியிருக்கிறது.

செவ்வாய்க்கிழமை ஐ.நா.பொதுச் சபை யில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உரை நிகழ்த்துகிறார். அதற்கு அடுத்த நாள் நவநீதம்பிள்ளை இலங்கைக்குத் தாம் மேற்கொண்ட பயணம் தொடர்பாக மனித உரிமைகள் சபையில் எடுத்து ரைக்கவிருக்கிறார். அதற்கடுத்தநாள் பொது நலவாய அமைச்சர்களின் செயற்குழு கூடுகின்றது. இலங்கை மிக திறமாக தனது ராஜதந்திரத்தைப் பிரயோகிக்க வேண்டிய காலம் இது என்பதை இவை எல்லாம் எடுத்துக் காட்டுகின்றன. வெளி யுறவு அமைச்சுக்கு இது மிகவும் சவாலான பணியாகவே இருக்கப்போகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழங்களை பாதுகாப்பது எப்படி?

திருமதி.கிருபவதனி சிவதீபன்,
விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர்.



உலர் வலயப் பழங்களுக்குச் சிறப்புப் பெற்ற யாழ்ப்பாணத்தில் மாம் பழம், வாழைப்பழம், பலாப்பழம், பப்பாசிப் பழம், திராட்சைப்பழம் போன்ற பழமரங்கள் பெருமளவில் காணப்படுகின்றன. இந்தப் பழங்களின் சுவைக்கு சர்வதேசச் சந்தை வரை நல்ல கேள்வி உண்டு இந்தப் பழங்கள் யாவும் தரமானவையாக உற்பத்தி செய்யப்பட்டுச் சந்தைப்படுத்தப்பட்டால் மாத்திரமே விவசாயிகள் நியாயமான சந்தை விலையை தமது உற்பத்திகளுக்குப் பெறக்கூடிய தாகவிருக்கும்.

**1. உரிய பருவத்தில் அறுவடை செய்யாமை**

யாழ்ப்பாணத்தில் உள்ள பழ உற்பத்தியாளர்கள் சிலர் உரிய பருவத்துக்கு முன்பதாகவே பழங்களை அறுவடை செய்கின்றனர். அவ்வாறு அறுவடை செய்யப்படும் பழங்களை பழுக்க வைப்பதற்கு பிழையான பழுக்க வைக்கும் முறைகளை உற்பத்தியாளர்களாலும், விற்பனையாளர்களாலும் கையாளப்படுகிறது. சிலர் அக்கறையின்மையால் காலம் தாழ்த்தியே பழங்களை அறுவடை செய்கின்றனர். காலம் தாழ்த்தி பழங்களை அறுவடை செய்யும்போது பறவைகளால் 10%- 15% பழங்கள் சேதமாக்கப்படுகின்றன.

**2. தவறான கொண்டு செல்லல்**

அறுவடை செய்யப்படும் பழங்கள் முறையாகப் பொதி செய்யப்படாது அளவுக்கதிகமாக ஏற்றப்பட்டு இரண்டு சில்லு உழவு இயந்திரம், சைக்கிள், லொறி போன்றவற்றில் ஏற்றப்பட்டு சந்தைக்கு கொண்டு செல்லப்படுகின்றன. இதனால் பழங்கள் பொறிமுறைச் சேதத்துக்குள்ளாக்கப்படுகின்றன.

இதனைத் தவிர்ப்பதற்கு கொண்டு செல்லலில் திருந்திய தொழில் நுட்ப முறைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். பழங்களைச் சேதமின்றிக் கொண்டு செல்வதற்கு வாழைப்பழங்களைத் தோட்டத்திலேயே சீப்புகளாக்கி தரம் பிரித்து கடதாசிப்பெட்டி, பிளாஸ்ரிக் கிறேற், பிரம்புக்கூடை போன்றவற்றில் ஒன்றில் சரியான முறையில் அடுக்கிக் கொண்டு செல்லல் வேண்டும்.

**3. சீரற்ற சந்தை உட்கட்டமைப்பு**

யாழ்ப்பாணச் சந்தைகளில் விவசாயிகளால் கொண்டு வரப்படும் வாழைக் குலைகள் வெறும் சரளைக்கல் தரைகளிலேயே விற்பனைக்காக வைக்கப்படும் போது பொறிமுறைச் சேதத்துக்குள்ளாவதுடன் நேரடி வெயிலினால் சூடாவதன் மூலம் எரித்தல் (Scorching) தாக்கத்துக்குட்படுகின்றது.

**4.களஞ்சியப்படுத்தும் முறைகள்**

பழ விற்பனையாளர்கள் விற்பனை செய்யும் பழங்களை சேதமடையாதவாறு களஞ்சியப்படுத்துவதில் கவனம் எடுப்பதில்லை. பிரதான சந்தைகள் மற்றும் வாழை உற்பத்தியாளர் சங்கம் ஆகியவற்றில் ஒழுங்கான களஞ்சியப்படுத்தல் வசதியின்மையால் பழங்கள் பொறிமுறைச் சேதத்துக்கும் விலங்குகளினால் சேதப்படுத்தப்படுவதற்கும் உள்ளாதல் அவதானிக்கப்பட்டுள்ளது.

**5. பழுக்க வைக்கும் முறைகள்**

பொதுவாக புகையூட்டலின் மூலமே வாழைப்பழங்கள் பழுக்க வைக்கப்படுகின்றன. முன்னைய காலங்களில் நிலத்தின் கீழ் அமைக்கப்படும் கிடங்குகளில் வாழைக்குலைகள் அடுக்கப்பட்டு புகையூட்டப்பட்டு வந்தன. ஆயினும் தற்போது பழுக்க வைத்தலுக்காகக் கீழ்க் காட்டப்பட்டுள்ள பல்வேறு பழுக்க வைக்கும் முறைகள் விவசாயிகளாலும் சந்தை வியாபாரிகளாலும் உபயோகிக்கப்படுகின்றன.

**புகையூட்டும் பெட்டிகளில் பழுக்க வைத்தல்**

இங்கு வாழைக்குலைகள் பழுக்க வைக்கும் பெட்டிகளில் அடுக்கப்பட்டு ஊதுபத்திக்குச்சியின் புகையூட்டப்பட்ட பின் பெட்டி மூடி வைக்கப்படுகின்றது. இம்முறை மூலம் குலைகள் 36-40 மணித்தியாலங்களில் பழுக்க வைக்கப்படுகின்றன.

**சிமெந்துத் தரையில் பழுக்க வைத்தல்**

வாழைக்குலைகள் அடுக்கப்பட்டு ஊதுபத்திக் குச்சியின் புகையூட்டப்பட்டபின் குலைகள் படங்கால் மூடி வைக்கப்படுகின்றன. இந்தமுறை மூலம் குலைகள் 36-40 மணித்தியாலங்களில் பழுக்க வைக்கப்படுகின்றன.

**இரசாயனங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைத்தல்**

அத்துடன் விரைவாகப் பழுக்க வைப்பதற்காக அளவுக்கதிகமாகப் பாவிக்கப்படும் இரசாயனங்கள் பரிந்துரை செய்யாத நச்சு இரசாயனங்களையும் பாவிப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது. இதனால் நுகர்வோர் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது. ஆகவே பழ உற்பத்தியாளர்கள் மற்றும் பழ வியாபாரிகள் சுகாதாரக்கேடற்ற , தரத்தைப் பாதிக்காத முறையை பழுக்க வைத்தலுக்கு உபயோகித்தல் மூலம் தரமான பழங்களைச் சந்தைப் படுத்தல் வேண்டும்.

இந்தக் காரணங்களுள் தவறான பழுக்க வைக்கும் முறைகள் பழங்களின் தரத்தைக் குறைப்பது டன் நுகர்வோரின் ஆரோக்கியத்திலும் பெரிதும் தீங்கிழைக்கின்றது. பழங்கள் பழுக்கும் போது எதிலீன் வாயு வெளியிடப்படுகின்றது. இந்த வாயுவே பழங்களின் இழையங்களைத் தூண்டி பழங்களில் பௌதீக, இரசாயன மற்றும் உடற்றொழிலியல் மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இந்தப் பழங்களை தொடர்ச்சியாக உண்ணும் நுகர்வோர் இந்த வாயுக்களின் செறிவால் எதிர்காலத்தில் பக்க விளைவுகளை எதிர் நோக்க வேண்டி ஏற்படும்.

எனவே விவசாயத்திணைக்களத்தால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கீழ் காட்டப்பட்டுள்ள முறையை உபயோகிப்ப தன் மூலம் இயற்கை முறையில் பழுத்தலுக்கு ஒப்பான வகையில் பழங்கள் பழுக்க வைத்து தரமான பழங்களை சந்தைப் படுத்த முடியும்.

**தேவையான இரசாயனங்கள்**

✦ ஐதான எதபோன் கரைசல் 1 மி.லீ.எதபோன் / 1 லீற்றர் நீர்

எதபோன் இரசாயனத்தினை வெவ்வேறு இரசாயனப் பெயரில் சந்தையில் பெற்றுக்கொள்ள முடியும். எதபோன் இரசாயனத்தில் 1 மி.லீ. இனை அளந்தெடுத்து 1 லீற்றர் நீரில் அதனை கலந்து சூரிய ஒளி உட்புகாத கறுப்புப் போத்தல் அல்லது பொருத்தமான பாத்திரத்தில் சேமித்தல் வேண்டும். உபயோகிக்கும் கொள்கலனின் கொள்ளளவிற்கு ஏற்றவாறு நீர்ல் கரைசலைத் தயாரித்தல் வேண்டும்.

✦ சுண்ணாம்புகரைசல் 100 கிராம் / 1 லீற்றர் நீர்

100 கிராம் சுண்ணாம்பை 1 லீற்றர் நீரில் கரைத்து அதனை போத்தல் அல்லது பொருத்தமான பாத்திரத்தில் சேமித்தல் வேண்டும். உபயோகிக் கும் கொள்கலனின் கொள்ளளவிற்கு ஏற்றவாறு சுண்ணாம்புக் கரை சலைத் தயாரித்தல் வேண்டும்.

பரிகரணப் படிமுறைகள்:

- பழுக்க வைக்க உபயோகிக்கும் கொள்கலனின் கொள்ளளவை கணித்தல் வேண்டும்
- நன்கு முற்றிய பழங்களைக் கொள்கலனின் 2/3 பகுதியில் அடுக்குதல் வேண்டும். அடுக்கும் போது கொள்கலனின் 1/3 பகுதி வாயுக்களின் ஓட்டத்திற்காக வெறுமையாக விடப்படல் வேண்டும்.
- தேவையான இரசாயனத்தின் அளவைக் கணித்தல் வேண்டும்.
- எதபோன் கரைசலைக் கொள்கலனில் வைத்தல் வேண்டும்.
- அதேயளவு சுண்ணாம்பு கரைசலை எதிரல் கரைசலினுள் ஊற்றிக் கலக்குதல் வேண்டும்.
- கொள்கலனை உடனடியாக மூடி விடுதல் வேண்டும்.
- கொள்கலனின் வெப்ப நிலை அண்ணளவாக 18°C, சாரீரப்பதன் அண்ணளவாக 18°C இருப்பின் எதிலின் வெளியேற்றம் உத்தமமாக இருக்கும்.
- கொள்கலனை 24 மணித்தியாலயம் மூடியபடிவிடுதல் வேண்டும்.
- பழுத்தல் செயன்முறையின் போது வெளியேற்றப்படும் காபனீரொட்சைட் வாயு, மீதமாகவுள்ள எதிலீன், வெப்பம் என்பவற்றை வெளியேற்றுவதற் காக கொள்கலனைத் திறந்து காற்றோட்டமாக்கல் வேண்டும்.
- பரிகரிக்கப்பட்ட பழங்கள் வெளியே எடுத்து 2 நாள்களில் இயற்கையாகப் பழுத்த பழங்களை ஒத்ததாகப் பழுக்கும்.

எதபோன் கரைசலின் சுண்ணாம்புக் கரைசலைச் சேர்க்கும் போது வெளிவிடப்படும் எதிலீன் வாயு பழங்களின் இழையங்களைத் தூண்டி பழுக்க வைத்தல் செயன்முறை நடைபெற உதவுகின்றது. இதன்போது தீங்கற்ற வாயுக்கள் உற்பத்தியாக்கப்பட மாட்டாது. அத்துடன் பெறப்படும் பழங்களும் சுவை மிக்கதாகவும் தரமானதாகவும் இருக்கும். இந்த முறையை உபயோகிப்பதற்கான உற்பத்திச் செலவு ஒப்பீட்டளவில் மிகவும் குறைவானதாகும்.

"எனவே பழ உற்பத்தியாளர்களே பழ வியாபாரிகளே தங்களையும் தங்கள் சந்ததியின் ஆரோக்கியத்தினைக் கருத்தில் கொண்டு மேற்குறித்த முறையை உபயோகித்து சுகாதாரக்கேடற்ற, சுவை மிக்கதாகவும் தரமானதாகவும் பழங்களை உற்பத்தி செய்யுங்கள். சர்வதேச சந்தை வரை சந்தை வாய்ப்பைப் பெற்றிடுங்கள்"

# படிப்போம்; பகிர்வோம்

சு.ஜாக்ஸன்

தற்போது செய்தித்தாளை சில நொடிகளில் புரட்டிவிட்டுச் செல்வதும், விரல் நுனியில் உலகம் எனக் கூறிக்கொண்டு கணினியின் முன் அமர்ந்து நுனிப்புல் மேய்வதுபோல செய்திகளைப் படிப்பதும், நிகழ்வுகளைப் பார்ப்பதும் வாசிப்பாளர்களிடையே அதிகமாகக் காணப்படுகிறது.

ஒரு செய்தி அல்லது நிகழ்வு எதனை வெளிப்படுத்த முனைகிறது. அதன் மூலமாக புரிந்துகொள்ளவேண்டியது என்ன என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதற்குப் பின்னர் அடுத்த செய்தி அல்லது நிகழ்வினைப் படிக்க ஆரம்பிக்கும்போது அதன் அடிப்படைக் கருத்துகள் எளிதாக மனதில் பதிந்துவிடும். காட்சி ஊடகத் தில் செய்திகளைப் படிக்கும்போதோ, நிகழ்வுகளைப் பார்க்கும்போதோ அவை உள்ளது உள்ளவாறே மனதில் பதிந்துவிடும். நாளிதழ்களில் மேலோட்டமாகத் தலைப்புச் செய்திகளை மட்டும் பார்த்துவிட்டுச் செல்வதைத் தவிர்த்து, சற்று உன்னிப்பாகப் படித்தால் பல புதிய சொற்களையும், சொற்றொடர்களையும், பயன்பாடுகளையும் தெரிந்துகொள்ள வாய்ப்புள்ளது.

அரசியல் தொடங்கி அறிவியல் வரை ஒவ்வொரு துறையிலும் அவ்வப்போது பல புதிய சொற்கள் உருவாகின்றன. தொடர்ந்து படித்தால் தான் அவ்வப்போது அறிமுகமாகின்ற புதிய சொற்களைப் புரிந்துகொள்ள முடியும். அதற்கெல்லாம் தேவையில்லை', வாசித்து என்ன ஆகப் போகிறது?' அவ்வப்போது இணையதளங்களில் பார்த்துவிடுகின்றோம்' என்றெல்லாம் கூறுவதைத் தவிர்க்க வேண்டும்.

பல அரசியல் பிரமுகர்களும், வேறு பல துறையைச் சார்ந்தவர்களும் தினமும் படிப்பதையும், எழுதுவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளனர். உள்ளூர் செய்தி தொடங்கி உலகச் செய்திகள் வரையில் அறிய, நாள்தோறும் குறைந்தது 30 நிமிடங்களாவது நாளிதழைப் படிப்பதற்காக ஒதுக்குவது நல்லது.

அவ்வாறே நூல் படிப்பதற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். கதைகள், கட்டுரைகள், சாதனையாளர்களின் வரலாறு, ஆன்மிகம், கலை, இலக்கியம், அறிவியல், பயணக்கட்டுரைகள் என பலவகையான நூல்கள் உள்ளன. சார்லி சாப்ளினுக்கு புதிய சொற்கள் மேல் அலாதிப் பிரியம் என்றும், தினமும் ஒரு புதிய சொல்லைத் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருப்பார் என்றும், அதனை நடைமுறையில் பயன்படுத்துவார் என்றும் கூறுவர். அவர் தன்னுடைய சுயசரிதையில் அதிகமான புதிய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நூல் படிக்கும் பழக்கத்தை மேற்கொள்ளும் முன்பாக எந்த நூலைப் படிக்க வேண்டும் என்ற ஐயம் மனதில் தோன்றும். பல நூல்களைப் படிக்கப் படிக்க நாளடைவில் தானாகவே எந்த நூலைப் படிப்பது என்ற தெளிவு கிடைத்துவிடும்.

நூல் என்பது நமக்கு சிறந்த நண்பன் என்பதை மனதில் கொண்டு, நாளிதழ் வாசிக்க நேரம் ஒதுக்குவதைப் போல தினமும் 50 பக்கங்களுக்குக் குறையாமல் ஏதாவது ஒரு நூலைப் படிப்பது நல்லது.

படிப்பதால் மனம் தெளிவாகிறது. நினைவாற்றல் பெருகுகிறது. நற்சிந்தனை மேம்படுகிறது. நாளிதழ்களைப் படிப்பதால் அன்றாட நிகழ்வுகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது.

அவ்வாறே நூல்களைப் படிக்கும்போது நமக்குள் எதையாவது சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் மேலிட ஆரம்பிக்கிறது.

நாளிதழையோ, நூலையோ



படித்து முடித்தபின்னர் நண்பர்களிடமும், குடும்பத்தாரிடமும் படித்தவை பற்றி விவாதிக்கலாம். அதன் மூலம் பல புதிய கருத்துக்களைப் புரிந்து கொள்ளலாம். புதிய சொல், புதிய செய்தி, புதிய உத்தி, புதிய நடை, புதிய வரலாறு என்று ஒவ்வொரு நிலையிலும் ரசித்து ரசித்துப் படிக்கலாம்.

இதுவரை இப்பழக்கம் இல்லாதவர்கள் வாசிப்புப் பழக்கத்தை இன்று முதல் தொடங்கலாம். நண்பர்களையும் இவ்விதப் பழக்கத்தை மேற்கொள்ள அறிவுறுத்தலாம்.

வாசிப்புக்கென நேரத்தை ஒதுக்கி, வீட்டில் ஒரு நூலகத்தை உருவாக்கி நூல் எண்ணிக்கையைப் பெருக்கினால் வீடும் நாடும் வளம்பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23/09/2013

# பெண்ணுக்கு மறுக்கப்பட்டுள்ள மூன்று விடயங்கள்

கேஷாயினி

இன்றைய சமூகக் கட்டமைப்பில் விளிம்பு நிலையில் காணப்படுகின்ற பாலினமான பெண்கள் பல்வேறு வழிகளிலும் தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கு போராடி வருகின்றனர். பல்வேறு பெண்கள் அமைப்புக்கள் முதல், தனி நபர்கள் வரை பலர் பெண்ணியத்துக்காக குரல் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர். அன்று மூலையில் முடங்கிக் கிடந்த காலம் போய் இன்று பெண்கள் பல தலைமைப் பதவிகளை வகிக்கின்ற நிலை தோன்றிவிட்டமை பெருமைக்குரியதொரு விடயமே. ஆயினும் அன்று தொட்டு இன்று வரை பெண் வெளிப்படையாகப் பேச முடியாத சில விடயங்கள் இருக்கவே செய்கின்றன. இவற்றுள் முக்கியமானவை மூன்று.

1. அரசியல்
2. பாலியல் விடயங்கள்
3. மதம் சார்ந்த கருத்துக்கள்.

இவை தொடர்பான தமது தனிப்பட்ட கருத்துக்கள் மட்டுமன்றி சமூகத்தில் இது தொடர்பாகத் தான் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கூட, வெளிப்படுத்த முடியாத நிலையிலேயே இன்றும் பெரும்பாலான பெண்கள் இருக்கின்றனர்.அதையும் மீறி முற்போக்காகச் செயற்படும் பல பெண்களின் சுயம் பற்றிய கருத்துக்கள் அலசப்படுகின்றன, எதிர்ப்புகளை எதிர்நோக்குகின்றனர். அல்லது சமூகத்தில் இருந்து தள்ளிவைக்கப்படுகின்றனர்.

முதலாவது விடயமான அரசியலைப் பொறுத்தமட்டில் இன்று பெண்களின் விகிதாசாரம் முன்னரை விட அதிகரித்துள்ளமை உண்மை. வழமையில் அரசியல் பற்றியதொரு கருத்தினை ஆணொருவர் முன்வைக்கும்போது கொலை அச்சுறுத்தல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும். ஆனால் அதுவே பெண் எனும் போது உயிராபத்து மாத்திரமல்ல பாலியல் தொடர்பான அச்சுறுத்தல்களும் அவளுக்கு ஏற்படுகின்றன. குடும்ப அமைப்பினை எடுத்துக்கொண்டால் தன் ஆண் வாரிசு அரசியலைப் பற்றி பேசும்போது கிடைக்கின்ற பக்கபலம் அதுவே பெண் பேச ஆரம்பிக்கும் போது மறுக்கப்படுகின்றது.

பெண்ணுக்கு மறுக்கப்பட்ட இரண்டாவது விடயமான பாலியல் தொடா;பான கருத்துக்கள் என்பதை எடுத்துக்கொண்டால் ஓர் ஆண் பாலியல் தொடர்பான கருத்தினை முன்வைக்கும் போது சமூகம் அதனை ஏற்றுக்கொள்கிறது. அது மட்டுமன்றி அவனது கருத்துக்கள் சில சமயங்களில் சமூகமாற்றத்துக்குக் கூட வழிவகுக்கின்றது. ஆயினும் இந்த முன்வைத்தல் பெண் ஒருவாரால் முன்வைக்கப்படும் போது அல்லது பாலியல் தொடர்பிலான பிரச்சினைகள் பற்றி சுட்டிக்காட்டப்படும் போதோ சமூகத்தின் பார்வை அவள் முன்வைத்த விடயத்தில் இருந்து திசை திரும்பி அவளின் மீதே படிகின்றது. அவளால் சுட்டப் பட்ட விடயங்களை விடவும் அவளது சுயம் நோக்கியே சமூகம் பார்வையைத் திருப்புகின்றது. அவளது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் விமர்சிக்க தலைப்படுகிறது. அல்லது அவள் தொடர்பான தப்பானதொரு கருத்தையே சமூகம் தேட தலைப்படுகிறது.

இந்தத் தாக்கமானது இன்று மட்டுமல்ல அன்று முதலே நமது இலக்கியங்களில் கூட எழுதப்பட்டுவிட்ட மறைமுகமான சட்டம். பெண்ணுக்கு அந்தப்புரம், ஆணுக்கு ஆயிரம் திருமணம் என்றெழுதிய இலக்கியங்கள் அதே எழுத்தாணியினால் பெண்ணுக்கு உடன் கட்டை வழக்கம் அல்லது வனவாசத்தை தான் எழுதியது. கணவன் வேறு பெண்ணைத் தேடியபோது பேசாத பெண்மை தன் கணவனைத் தண்டித்தபோது நகரையே கொளுத்தியதாக பெண் பாத்திரத்தைப் படைத்திருந்தது.

மூன்றாவதான விடயம் சமயம் தொடர்பானது. இன்றுள்ள சமய விதிமுறைகள் என்பது அன்று ஒருவரினால் எழுதப்பட்டதொரு விடயம். காலத்துக்கு ஏற்ற வகையில் சமய வழிபாடுகளை மாற்றிக் கொள்கின்றோம். சடங்குகளை மாற்றுகின்றோம். ஆனால் பெண்ணினால் காலத்திற்கேற்ப முன்வைக்கப்படும் மாற்றுக் கருத்துக்களை மட்டும் ஏற்க ஏனோ எம்மால் முடிவதில்லை. அப்படியே முன்வைத்தாலும் அவளை எமது சமூகத்துக்கு எதிரானவளாகப் பார்க்கின்றோம் அல்லது ஒதுக்கிவைக்கின்றோம்.

மேற்கூறிய விடயங்களில் ஒரு பெண் தன் கருத்தினை முன்வைக்க முயலும் போது அச்சுறுத்தல்கள், பாலியல் கொடுமைகள், சமூக புறந்தள்ளல்கள், குடும்பத்தினுள் ஏற்படுகின்ற பிரச்சினைகள், தன் சுயம் பற்றிய விமர்சிப்புக்கள் என்பவற்றை எதிர்கொள்ள வேண்டிய பலவித நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகின்றாள்.

ஆகமொத்தத்தில் என்ன தான் பெண்ணுரிமைக் குரல்கள் உயர்ந்துள்ள போதும் இந்த மூவகை விடயங்களும் அன்று முதல் இன்று வரை பெண் என்கின்ற விளிம்பு நிலையினருக்கு மறுக்கப்பட்டே வருகிறது என்பதே யதார்த்தம் என்பதை யாராலும் மறுத்திட முடியாது.

அவளது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் விமர்சிக்க தலைப்படுகிறது. அல்லது அவள் தொடர்பான தப்பான தொரு கருத்தையே சமூகம் தேட தலைப்படுகிறது.





# பெண் அடக்குமுறையின் ஒரு வடிவம் சீதனம்



பெண்ணடிமை முறையில் பல ஆண்டுகளாக நிலைநிறுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டு வரும் பொருளாதார கலாசார முறைகளில் சீதனமுறையும் ஒன்றாகும். பெண்களுக்கான திருமண நிறைவேற்றத்துக்கு இந்தச் சீதனம் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாக அன்று தொட்டு இன்று வரை பல வளர்ச்சி மாற்றங்களின் ஊடாக இருந்து வருகிறது. சீதனமுறையால் எமது சக சமூகத்தில் பொருளாதார பாதிப்பு மட்டும் ஏற்படவில்லை; மனிதன் படைத்த பணத்துக்கு மனிதனே விலை போவதுடன் அவனையே அளக்கும் அளவுகோலாக பணம் இங்கு மாற்றம் அடைகின்றது. இன்றைய பொருளாதார வளர்ச்சி அதிகரிப்பினை போல சீதன முறை அதிகரிப்பும் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது.

சீதனம் கொடுக்க வசதியற்ற குடும்பச் சூழலில் முதிர்கன்னியர் என்ற நிலையில் பல ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் இன்று சமூகத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இந்தச் சீதன முறைமை என்பது நிலவுடைமையின் கீழ் ஆணாதிக்க வரம்புகளுக்கு உட்பட்டதாகும். இந்த நடைமுறை சாத்தியம் போன்று தமிழ்ச் சூழலில் மிகவும் இறுக்கமானதாக இருந்து வருகின்றது. ஒரு பெண் கல்வி கற்று அரச தொழில் பெற்று மாதாந்தம் நிரந்தர வருமானம் பெறுபவராக இருந்தும் கூட அந்தப் பெண்ணுக்குச் சீதனம் என்ற பெயரில் இலட்சங்களும் தங்கமும் நிலமும் வழங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் நமது தமிழ்ச் சூழலில் நிலைத்து நீடித்து வருகின்றது. அவ்வாறு ஆண் வீட்டார் கேட்டும் சீதனத்தை கடன்பட்டுக் கொடுத்து தமது பெண்ணைக் கரைசேர்க்கும் பெற்றோர் அந்தக் கடனுக்குத் தமது ஆண் மகனைப் பொறுப்பாக்குவதுடன் அதே மகனுக்குப் பெண் பார்க்கும் போது தாம் மகளுக்குக் கொடுத்த அளவையும் விடக் கூடுதலாகச் சீதனம் பெற்றுக் கொள்ளவும் முன் நிற்கின்றனர். எனவே சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சூழல் வட்டத்தில் தொடர்கிறது. இதனால் ஏற்படும் துன்ப துயரங்கள் பாதிப்புக்கள் யாவும் ஒட்டு மொத்த சமூகத் துயரமாகவும் அவமானமாகவும் தொடருவதையிட்டுப் பழமைபேண்வாதிகள் கவலைப்படுவதில்லை. அதனை நியாயப்படுத்தவே முன்நிற்கின்றனர்.தமிழ்த் தேசியத்தை உயர்த்தி நிற்கும் பழைமைவாதிகள் சீதனம் விளைவிக்கும் சமூக அநீதியைக் கேள்விக்கு உள்ளாக்கிக் கொள்வதில்லை. அவர்கள் சீதனத்தை உயர்வர்க்க உயர் சாதிய சமூக அந்தஸ்தாகவே கொண்டுள்ளனர். அதன் பாதிப்பு ஒரு சமூகக்கேடாக வசதியற்ற ஏகப் பெரும்பான்மையான பெண்களை எப்படிப் பாதிக்கும் என்பது பற்றிச் சிந்திக்கப்படவே இல்லை. அத்துடன் மதம் பண்பாடு மரபு வழமை குடும்ப கௌரவம் என்பனவும் சீதன முறைமையைச் செழுமைப்படுத்தி நிற்கின்றன. ஊடகங்கள் எதுவுமே இந்தச் சமூகப் பிற்போக்குத்தனம் அல்லது பெண்கள் மீதான அநீதி பற்றி கேள்வி எழுப்பிக் கொள்வதில்லை. இன்றும் தமிழ் ஆங்கில ஊடகங்களில் திருமண பந்தம் தேடும் விளம்பரங்களில் சாதி பற்றித் தவறாது குறிப்பிடப்படுவதுடன் சீதனம் பேசித் தீர்க்கப்படும் அல்லது தகுந்த சீதனம் வழங்கப்படும் என்றே வாராந்தம் வந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் மத்தியில் மண்ணடிமை, பெண்ணடிமை, சாதியடிமை போன்ற ஒடுக்குமுறைகளும் அடிமைத்தனங்களும் நீடிக்கும் நிலையில் எவ்வாறு இன விடுதலை என்பதைச் சாத்தியமாக்க முடியும்.

பெண் ஒடுக்குமுறையின் ஓர் அம்சமாகக் காணப்படுவது சீதனமாகும். இந்தச் சீதன முறையை ஒழிப்பதற்குரிய சமூக விழிப்புணர்வை மாற்றுக் கருத்துப் பிரசாரத்தின் மூலம் முன்னெடுக்க வேண்டும். சீதனம் கொடுப்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை என்பது நடைமுறையாக்கம் பெறும் வகையில் பரந்துபட்ட இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும். எல்லாப் பெண்களும் சீதனம் கொடுத்து திருமணம் செய்யமாட்டோம் என்ற முடிவுக்கு வரவேண்டும். அப்போது யாரை திருமணம் செய்து கொள்வார்கள் சீதனம் என்னும் பிச்சை எடுக்கும் ஆணாதிக்கவாதிகள்? உயர்வர்க்க [illegible] சீதனம் ஒரு சமூக அந்தஸ்தாகவும் தனிச் சொத்துடைமை பேணுதலாகவும் சொத்து விரிவாக்கமாகவும் முன்னெடுக்கப்படுகிறது. அதுவே சாதாரண உழைக்கும் [illegible] பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் பெண்களுக்கும் ஒருவகையான உடைக்க முடியாத விலங்காக இருந்து வருகின்றது. இதனை உடைக்க [illegible] இணைந்து போராட வேண்டும்.

அகல்யா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் 58 ஆலயங்களின் அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு

வவுனியா,செப்.23
வவுனியா பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட மீள்குடியமர்வுப் பிரதேச ஆல யங்களின் அபிவிருத்திக்கென தலா ஒருலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
இவ்வாறு தெரிவித்தார் வவுனியா பிரதேச செயலர் கா.உதயராசா.
மீள்குடியமர்வு பிரதேச இந்து ஆல யங்களின் மீள்கட்டுமானத்துக்கு உதவுமாறு இந்து சமய கலாசார அலு வல்கள் திணைக்களப் பணிப்பாள ரிடம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அதன் பிரகாரம் 58 இந்து ஆல யங்களுக்கு இவ்வாறு தலா ஒருலட் சம் ரூபா வீதம் ஒதுக்கப்பட்ட நிதி கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.
நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட ஆலயங் களின் விவரம் வருமாறு:-
குஞ்சுக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், வாரியுடையூர் இலுப்பைக் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆல யம், மருதோடை ஸ்ரீ கந்தசாமி ஆல யம், பாலமோட்டை புளியடி விநாயகர் ஆலயம், சேமமடு ஆட்காட்டி விநாய கர் ஆலயம்,
கூமாங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மகிழங்குளம் சித்தி விநாய கர் ஆலயம், ஓமந்தை வீரகத்தி பிள் ளையார் ஆலயம், மகாறம்பைக் குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆல யம், ஆறுமுகத்தான் புதுக்குளம் ஸ்ரீகந்தசாமி ஆலயம்,
நொச்சிக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூவரசன்குளம் இயங்கரா வூர் விக்னேஸ்வரா ஆலயம், பால மோட்டை நவ்வி ஸ்ரீ ஞானசக்தி வேல்முருகன் ஆலயம், மாதர்பணிக் கர் மகிழங்குளம் பத்திரகாளி அம்மன் ஆலயம், பண்டாரிக்குளம் அருள்மிகு மாடசாமி ஆலயம்,
கோயில்புளியங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கந்தபுரம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், கல்நாட் டினகுளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆல யம், சாந்தசோலை ஸ்ரீ இராமர் ஆலயம், சாந்தசோலை துர்க்கை அம்மன் ஆலயம்,
ஈச்சங்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், சாஸ்திரிகூழாங்குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், மதவுவைத்தகுளம் ஸ்ரீகாளியம்மன் ஆலயம், ஆறுமுகத் தான் புதுக்குளம் செங்காரத்தி மோட்டை ஆதி விநாயகர் ஆலயம், தோணிக்கல் ஸ்ரீ ஆதி சிவன் ஆலயம், சேமமடு ஸ்ரீ ஆதி விநாயகர் ஆலயம், சுந்தரபுரம் ஸ்ரீ சர்வசக்தி விநாயகர் ஆலயம், விநாயகபுரம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், எல்லப்பர் மருதங் குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், சகாயமாதாபுரம் ஸ்ரீ துரக்கை அம் மன் ஆலயம்,
நெளுக்குளம் சந்தி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் ஆலயம், வேலவர் சின்னக் குளம் ஸ்ரீ வீரபத்திரர் ஆலயம், பெரிய விளாத்திக்குளம் ஸ்ரீ வீரசக்தி அம்பாள் ஆலயம், மருக்காரம்பளை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கட் டையர்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்,
பணிக்கர் புளியங்குளம் ஸ்ரீ முத்து மாரி அம்மன் ஆலயம், தவசிகுளம் ஸ்ரீ ஆதி பிள்ளையார் ஆலயம், கற்பகபுரம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் அலயம், சுப்பிரமணியர் வேலன் குளம் ஸ்ரீ முருகன் ஆலயம், வேலன் குளம் வீதி செக்கட்டிப்புலவு ஸ்ரீமுத் துமாரி அம்மன் ஆலயம்,
கந்தன்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், நாவற்குளம் ஸ்ரீ வீரசக்தி அம்மன் ஆலயம், தவசிகுளம் ஸ்ரீ விநாயகர் ஆலயம், புதுக்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், கோதண்டர் நொச்சிக்குளம் ஸ்ரீ கந்தசாமி ஆலயம், நொச்சிமோட்டை கருங்காலியடி பிள்ளையார் ஆலயம், நாம்பன் குளம்ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆல யம், கோவில்குளம் மருதமடு ஸ்ரீ கந்தசாமி ஆலயம், அலைகல்லு போட்டகுளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், சேமமடு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம், பேயாடிகூழாங்குளம் ஸ்ரீ முனீஸ்வரர் ஆலயம்,
ஓமந்தை வேப்பங்குளம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பேயாடிகூழாங் குளம் ஸ்ரீ நாகபூசணி ஆலயம், காத் தார் சின்னக்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், நெளுக்குளம் உச்சிப்பிள்ளையார் ஆலயம், மணி புரம் மீனாட்சி அம்மன் ஆலயம், பாரதிபுரம் முத்துமாரி அம்மன் ஆல யம், செல்வாநகர் செக்கட்டிப்புலவு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம் என்பன வாகும். (க-402)

## அணைக்கட்டுக்களில் போக்குவரத்து இடம்பெறுவதால் உடைப்பெடுக்கும் அபாய நிலை

அக்கராயன், செப்.23
துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள குளங்களின் அணைக்கட்டுக் களில் போக்குவரத்து இடம்பெறுவ தால் அணைக்கட்டுக்கள் சேதம டைந்து குளங்கள் உடைப்பெடுக்கும் அபாய நிலை தோன்றியுள்ளது.
இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் கூட்டங் களில் விவாதிக்கப்படுவது வழக்க மாகும்.
நீண்ட காலத்துக்குப் பின்னர் புனர மைக்கப்படும் இந்தக் குளங்களின் அணைக்கட்டு மற்றும் வான்பகுதிக் கட்டுமானங்கள் ஊடாக கனரக வாக னங்கள் செல்வதன் காரணமாக பெரும் சேதங்கள் ஏற்பட்டு வருகின் றன.
குறிப்பாக துணுக்காயிலுள்ள உயி லங்குளம் அணைக்கட்டு வழியாக போக்குவரத்தைத் தடை செய்ய வேண்டும் என கிராம மக்கள் நீண்ட காலமாகவே குரல் எழுப்பி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது. (க-18)

## மத்திய கல்லூரி மைதானம் வேறு தேவைகளுக்கு

### மாணவர்களும் நிர்வாகமும் சிரமங்களில்

அக்கராயன்,செப்.23
கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதா னத்தை இராணுவத்தினரின் தேவை கள் மற்றும் அரசின் முக்கிய நிகழ்வு களுக்குப் பயன்படுத்துவதால் பாட சாலை நிர்வாகமும் மாணவர்களும் இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
வடமாகாண ஆளுநர் பாடசாலை வளாகத்தில் எந்த நிகழ்வு இடம்பெற் றாலும் அனுமதி பெற வேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் இராணுவத்தினரின் நிகழ்வுகள் இங்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன எனப் பெற்றோர் தெரிவிக்கின்றனர்.
கிளிநொச்சி மத்திய கல்லூரி ஒரு தேசியப் பாடசாலை என்பதுடன் போர்க் காலத்தில் பெரும் அழிவு களையும் எதிர்கொண்டமை குறிப் பிடத்தக்கது. (க-18)

வடமாகாண ஆளுநர் பாடசாலை வளாகத்தில் எந்த நிகழ்வு இடம்பெற் றாலும் அனுமதி பெற வேண்டுமென உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் இராணுவத்தினரின் நிகழ் வுகள் இங்கு தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

## பயிர்ச் செய்கை நிலங்களில் இடம்பெறும் மணல் அகழ்வு

கிளிநொச்சி ,செப்.23
கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள கண்டாவளை, ஊரியான் ஆகிய பகு திகளில் அமைந்துள்ள பயிர்ச் செய்கை நிலங்களில் சட்ட விரோத மணல் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின் றனர்.
கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஊரி யான், தட்டுவன்கொட்டி, கண்டா வளை ஆகிய பகுதிகளில் சட்ட விரோத மணல் அகழ்வு இடம்பெற்று வரு கின்ற போதிலும் இதனைக் கட்டுப் படுத்துவதற்கு அதிகாரிகள் நட வடிக்கை எடுப்பதில்லையேனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
தற்போது கண்டாவளைப் பகுதியில் சிறுகைத்தொழில்களில் ஒன்றான புற்பாய் தயாரிப்பதற்கென புல் வளர்க் கும் பொருட்டு வழங்கப்பட்ட காணி களிலும் ஏனைய பயிர்ச் செய்கை நிலங்களிலும் சட்ட விரோத மணல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு வரு வதை அவ தானிக்க முடிகின்றது. இத னால் இந்தத் தொழிலில் ஈடுபடுபவர் களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.
இந்த மணல் அகழ்வுடன் அதிகாரிகள் பலருக்கும் தொடர்பு இருப்பதன் கார ணமாகவே இதனைக் கட்டுப்படுத் துவதற்கு அவர்கள் பின்னடிப்பதாக வும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
மேலும் இது தொடர்பாக பொலிஸா ரும் எந்த நடவடிக்கையும் எடுப் பதில்லையெனவும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (க-6)

## தேடுவாரற்ற நிலையில் வன்னிப் பனம் பழங்கள்



துணுக்காய், செப்.23
வன்னிப் பிரதேசத்தில் பனைமரங் களிலிருந்து வீழ்கின்ற பனம்பழங்கள் தேடுவாரற்ற நிலையில் காணப் படுவதை அவதானிக்க முடிகின்றது.
இங்குள்ள மக்களின் வாழ்க்கை முறையில் ஏற்பட்ட மாற்றங்களே இதற்கான பிரதான காரணமெனக் கூறப்படுகின்றது. மக்களால் உதா சீனம் செய்யப்படுகின்ற இந்தப் பனம் பழங்கள் மாடுகளால் உணவாக மாற்றப்படுவதைக் காண முடிகின்றது.
1990 ஆம் அண்டு காலப்பகுதியில் போர் இடம்பெற்ற போது கடுமையான பொருளாதாரத் தடைகள் ஏற்படுத் தப்பட்டதால் மக்கள் பனம் பழங்களை அதிகளவில் நாடினர். ஆடை களைத் துவைப்பதற்கு சவர்க்காரமும் இல் லாத நிலையில் பனம் பழங்களே அப்போது பேருதவி புரிந்தன. ஆனால் இன்று மக்கள் அதனை மறந்ததை யிட்டு இங்குள்ள பெரியவர்கள் கவலை தெரிவிக்கின்றனர். துணுக் காயில் வாழ்கின்ற வயது முதிர்ந்தவர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில்;
எமது முன்னோர் பனம் விதைகளைப் பொறுக்கியெடுத்து அவற்றைப் பாத் திகளில் இட்டுப் பராமரிக்கும்போது பனங்கிழங்குகள் கிடைக்கும். இந்தக் கிழங்குகளிலிருந்து ஒடியல், புழுக் கொடியல் என்பன தயார் செய்யப் படும். ஒடியல் மாவைக் கொண்டு ஒடியல் பிட்டி, ஒடியல் கூழ் என்பன தயார் செய்யப்படும். பனம் பழத்தின் களியிலிருந்து பனாட்டு தயாரிக்கப் படும். ஆனால் இன்றுள்ளவர்கள் இதனைக் கருத்தில் கொள்வதில்லை யெனக் கவலையுடன் தெரிவித்தார்.
தற்போது பனை மரத்திலிருந்து கிடைக்கும் பயன்களை மக்கள் உணரும் வகையில் விழிப்பூட்டும் செயற்பாடுகள் இடம்பெறவேண்டு மெனவும் இங்குள்ள பெரியவர்கள் தெரிவிக்கின்றனர். (க-415)

## இடம்மாறிச் செல்லும் ஆசிரியர்கள் நன்மதிப்புடன் செல்கின்றனர்

### அக்கராயன் பாடசாலை அதிபர் தெரிவிப்பு

அக்கராயன்,செப்.23
ஆசிரியர்கள் பிறபாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் போது தாம் கடமையாற்றிய பாடசாலை மாணவர்கள் வழங்கிய மதிப்பையும் கௌரவத்தையும் தம்முடன் கொண்டு செல்கின்றனர். இவ்வாறு தெரிவித் தார் அக்கராயன் மகாவித்தியாலய அதிபர் க.மதுரநாயகம்.
அக்கராயன் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற இடமாற்றம் பெற்ற ஆசி ரியர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
எமக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் களை நாம் இன்று காணும்போது வணக்கம் தெரிவிப்பதற்குத் தயங்கு வதில்லை. இதனைப் போன்று தற் போதைய மாணவர்களும் ஆசிரியர் களை மதிப்பதற்குப் பழகிக் கொள்ள வேண்டும்.
இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரி யர்கள் எமது பாடசாலையின் கல்வி, விளையாட்டுத் துறைகளின் வளர்ச்சி யில் பெரும் பங்காற்றியுள்ளனர்.
இவர்கள் எமது பாடசாலையில் சிறப் பாகப் பணியாற்றியது போன்று இடமாறிச் செல்லும் பாடசாலையிலும் பணியாற்ற வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-18)

## நெற்செய்கை மேற்கொள்வதற்கு தடை விதித்த கடற்படையினர்

கிளிநொச்சி,செப்.23
கிளாலிக் கிராமத்தில் காலபோக நெற் செய்கைக்கென வயல் நிலங்களைத் தயார் செய்வதற்கு கடற்படையினர் அனுமதி மறுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.
இங்கு 236 குடும்பங்கள் மீளக் குடிய மர்ந்துள்ள நிலையில் இங்கு காணப் படும் வயல் நிலங்கள் தமது பகுதி யெனத் தெரிவித்த கடற்படையினர் வரம்பு அமைக்கும் பணியில் ஈடுபட்டவர்களைத் திருப்பி அனுப்பி யுள்ளனர்.
கடற்படையினரின் இறங்குதுறைக்கு அருகில் இந்த வயல் நிலங்கள் அமைந்துள்ளதன் காரணமாகவே பயிர் செய்கைகளுக்கு அனுமதி வழங்கப்படவில்லையெனவும் தெரிய வருகின்றது.
நெற்செய்கைக்கான அனுமதி மறுக் கப்பட்ட குடும்பங்கள் இது தொடர்பாக அதிகாரிகளிடம் மனுவொன்றையும் கையளித்துள்ளனர்.
வயல் நிலங்களில் கடந்த ஆண்டு நெற்செய்கைகள் மேற்கொள்ளப்பட் டமை குறிப்பிடத்தக்கது. (க-18)

கடற்படையினரின் இறங்கு துறைக்கு அருகில் இந்த வயல் நிலங்கள் அமைந் துள்ளதன் காரணமாகவே பயிர் செய்கைக்கு அனுமதியில்லை.

## நிரந்தர மருத்துவர் இல்லை

நட்டாங்கண்டல் மருத்துவமனைக்கு நிரந்தரமாக மருத்துவரொருவர் நிய மிக்கப்படாததால் இங்குள்ள மக்கள் இடர்களை எதிர்கொண்டு வருகின் றனர்.
இங்கு கடமையாற்றி வந்த மருத்துவர் மாங்குளம் மருத்துவமனைக்கு இட மாற்றலாகிச் சென்றபோதிலும் இவரது இடத்துக்கு இதுவரை எவரும் நியமிக் கப்படவில்லை. மல்லாவி மருத்துவ மனையிலிருந்து பதில் மருத்துவர் ஒருவர் பகலில் வந்து சேவையாற்று கின்றபோதிலும் இவரால் முழுமை யான சேவையை வழங்க முடியாத நிலை காணப்படுவதாகத் தெரிய வருகின்றது. (க-415)

## கோணாவில் யூனியன்குளத்தில் தொடர்ந்து தடையின்றி நடந்து வரும் கிரவல் மண் அகழ்வு

கிளிநொச்சி,செப்.23
கிளிநொச்சி மாவட்டம் கோணாவில் யூனியன்குளம் கிராமத்தில் கிரவல் மண் அகழ்வு தொடர்ந்து இடம்பெற்று வருவதாக இந்தக் கிராம மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.
யூனியன்குளத்தில் உள்ள வளமான காடுகள் அழிக்கப்பட்ட பின்னர் இந்தக் கிரவல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டு தினமும் எடுத்துச் செல்லப்படுகின்றது. பூநகரி வீதியின் புனரமைப்புப் பணி களுக்காகவே இந்த மண் எடுத்துச் செல்லப்படுகின்றது.
மேலும் கிளிநொச்சி, முல்லைத்தீவுப் பகுதிகளிலுள்ள வீதிப் புனரமைப்பு மற்றும் கட்டடப் பணிகளுக்கும் வன் னியின் வளமான காடுகள் அழிக் கப்பட்டு கிரவல் மண் கொண்டு செல் லப்படுவதைக் காண முடிகின்றது.
இதன் காரணமாகத் தொன்மையான [illegible] தாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.
புத்துவெட்டுவான், பழைய முறி கண்டி, அமதிபுரம், கோட்டை கட்டிய குளம், ஆகிய கிராமங்கள் அழிவு களை எதிர்கொண்டுள்ள நிலையில் தற்போது யூனியன்குளமும் இந்த வரிசையில் இணைந்துள்ளது.
சுமார் 500க்கும் மேற்பட்ட குடும் பங்கள் வாழ்கின்ற யூனியன்குளம் அழிவடைவதைத் தடுத்து நிறுத்து வதில் இங்குள்ள பொது அமைப்புக்கள் கவனம் செலுத்த வேண்டுமெனவும் இந்தக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்துபோகும். முன்பின் தெரியாதவர்களிடம் குடும்ப அந்தரங்க விடயங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம். மற்றவர்களுக்கு நியாயம் பேசப் போய் நீங்கள் சிக்கிக் கொள்ளாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம்.

**இடபம்:** திட்டமிட்டவை தாமதமாகும். மறைமுக விமர்சனங்களும் தாழ்வு மனப்பான்மையும் வந்து செல்லும். உறவினர், நண்பர்கள் உதவி கேட்டு தொந்தரவு தருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் வரும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். நண்பர்களால் ஆதாயமடைவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள்.

**கடகம்:** புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். நல்ல நண்பர்களைச் சந்திப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்கள் பரபரப்புடன் காணப்படுவார்கள்.

**சிங்கம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**கன்னி:** சிக்கலான, சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். அடுத்தவர்களை குறை கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக் கொள்ளப் பாருங்கள். உத்தியோகத்தில் அலுவலக இரகசியங்களை வெளியிட வேண்டாம்.

**நாளை**

புரட்டாதி-08 செவ்வாய்க்கிழமை 24.09.2013
திதி: பஞ்சமி பி.ப. 05.49 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.இ.11.25 வரை
சுபநேரம்: 10.32 - 12.02 வரை
இராகுகாலம்: 03.02 - 04.32 வரை

**துலாம்:** விடாப்பிடியான செயல்களில் வெற்றியுண்டு. பணவரவு திருப்தி தரும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் மகிழ்ச்சி கிடைக்கும். வியாபாரத்தில் வேலையாள்கள் ஒத்துழைப்பார்கள்.

**விருச்சிகம்:** திருப்திகரமாக இருக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகி நிம்மதி கிடைக்கும். பிரபலங்களின் சந்திப்பு நிகழும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள்.

**தனுசு:** பிரார்த்தனைகள் நிறைவேறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். வியாபார ரீதியாக முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார்.

**மகரம்:** நீண்ட நாளாக மனதிலிருந்து வந்த குழப்பங்களுக்கு நல்ல தீர்வு கிடைக்கும். கூட்டுத் தொழிலில் பங்குதாரர்கள் அனுசரித்துப் போவார்கள். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**கும்பம்:** காரியங்களை முடிப்பதிலிருந்த தடுமாற்ற நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளை குறைப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. கோபம் தணியும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

**மீனம்:** பரபரப்புடன் காணப்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்து எளிமையாக வாழ விரும்புவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். அரசால் அனுகூலம் உண்டு.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | | 6 | 5 | | | 9 | |
| 6 | 5 | 7 | | 1 | | | | |
| | | | | 3 | 7 | | | |
| | 7 | | 9 | | | | | |
| 2 | 9 | 6 | 1 | | 5 | 3 | 7 | 8 |
| | | | | | 3 | | 4 | |
| 1 | | | 5 | 9 | | | | |
| | | | | 6 | | 4 | 5 | 2 |
| | 3 | | | 2 | 8 | | 1 | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 3 | 1 | 2 | 9 | 5 | 7 | 4 | 6 |
| 4 | 6 | 9 | 7 | 8 | 3 | 1 | 5 | 2 |
| 7 | 5 | 2 | 1 | 4 | 6 | 3 | 9 | 8 |
| 1 | 4 | 5 | 8 | 6 | 7 | 2 | 3 | 9 |
| 6 | 9 | 7 | 3 | 1 | 2 | 4 | 8 | 5 |
| 3 | 2 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 | 7 |
| 9 | 7 | 6 | 4 | 3 | 8 | 5 | 2 | 1 |
| 2 | 1 | 3 | 5 | 7 | 9 | 8 | 6 | 4 |
| 5 | 8 | 4 | 6 | 2 | 1 | 9 | 7 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# முதலாம் ஆண்டு நீங்கா நினைவினிலே



அன்னை மடியில்
28.10.1934

இறைவன் அடியில்
04.10.2012

வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த
அமரர்
**வைத்திலிங்கம் இராசலட்சுமி**
திதி : அபரபக்க சதுர்த்தி
23.09.2013 திங்கட்கிழமை

ஆண்டொன்று ஓடிச்சென்றதுவே - எம்
அன்புத் தெய்வம் எமைவிட்டகன்று
இணையில்லா நல்வாழ்வை எமக்களித்து
நீங்கள் இறையடி சேர்ந்தீர்களே
கண்களில் கண்ணீர் வழிந்தோட - சென்ற
திசைதனைப் பார்த்து ஏங்கி நிற்கின்றோம்
மீண்டும் எப்போது எமைநாடி வருவீர்கள் என்று...
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

நீங்கா நினைவுகளுடன்
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம். — கணவர், மகள், மருமகன், பேரப்பிள்ளைகள்.

(C/12122) (7.6.3)

## பதில் நீதிவான் விபத்தில் காயம்

தென்மராட்சி. செப்.23

கிளிநொச்சி நீதிமன்ற பதில் நீதிவான் சாவகச்சேரி பகுதியில் வாகனத்தினரால் மோதுண்டு காயமடைந்தார்.

பஸ்ஸிலிருந்து இறங்கி ஏ-9 வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் எதிர்த் திசையில் வந்த 'பிக் அப்' வாகனம் மோதித் தள்ளியது. இந்தச்சம்பவம்நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு சாவகச்சேரி மடத்தடியில் இடம் பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னையா சிவபால சுப்பிரமணியம் (வயது-55) என்பவர் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஓ-9)

## அங்கத்துவ அட்டை விநியோகம்

வரணி. செப். 23

சாவகச்சேரி பிரதேச செயலகப் பிரிவின் பகிரங்கசேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியத்தில் 2013 ஆம் ஆண்டு அங்கத்தவர்களாகச் சேர்ந்தவர்களுக்கான அங்கத்துவ அட்டைகள் தற்போது விநியோகிக்கப்படுகின்றன.

இதுவரை அவை கிடைக்காதவர்கள் தம்மிடம் தொடர்பு கொள்ளுமாறு சங்கம் கேட்டுள்ளது. (வ-122)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
21 . 03 . 1932

மறைவு
16 . 09 . 2011

**சுந்தரம் தங்கப்பிள்ளை**
திதி: சங்கடஹரசதுர்த்தி
(23.09.2013)

அன்போடு அரவணைத்து அறிவூட்டி
நல்வழிகாட்டி வளர்த்த அன்பு அம்மம்மா
நீங்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்து
இரண்டு ஆண்டுகள் ஆகியும் எம் உள்ளத்தில்
அணையாத தீபமாய் ஒளிர்கின்றீர்கள்.

உரும்பிராய். — தர்சன் (பேரன்) (வசந்தி பாமசி)

(31967/4.3.6)

# பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22.04.1949

உதிர்வு
25.09.2003

அமரர் **மார்க்கண்டு விஜயகாந்தன்**
(வவா-இலங்கை வங்கி முன்னாள் எழுதுவினைஞர்)
திதி: வளர்பிறை சதுர்த்தசி

அன்புக்கும் பண்புக்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
இமைப்பொழுதில் மீளாத்துயில் கொண்ட எங்கள்
அன்புத் தெய்வமே! நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து
பத்தாண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியாத
நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில்
அணையாத தீபமாய்ஒளிர்ந்து கொண்டிருக்கும்
என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திப்போமாக

நீங்கா நினைவுகளுடன்
அன்பு மனைவி, பிள்ளைகள், மருமகன்,பேரப்பிள்ளைகள்.
32/1, குமாரசாமி வீதி, கந்தர்மடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### யாக்கோப்பு சாமிநாதன்

(நாரந்தனை - கொழும்பு)



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலப் பிட்டியில் வசித்தவரும், வவுனியா தவசிகுளத்தைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட யாக்கோப்பு சாமிநாதன் நேற்று (22.09.2013) ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசையாக்கோப்பு- யாக்கோப்பு மேரி தம்பதியரின் அன்பு மகனும், மேரி யோசேப்பின் பிரான் சிஸ்கா, மரியசாளெற் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான மரிய நாயகம், மரியாம்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரான்ஸிஸ் சேவியர், பற்றிமா அமலேஸ் வரி-இம்மாக்குலேற் (நிர்மலா), அன்சில்லா ரஜனி, டொமிற் றில்டா, கிறிஸ்ரில்டா, இமல்டா வதனி, தேவராஜ், ஞானராஜ் ஆகியோரின் அன்பு மாமனும், மேரிலைலா, சேகர், உதயன், தர்மராசா, திருமகள் ஆகியோரின் சித்தப்பாவும், கியாராயூட், றொசான், றொட்மினா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வு இன்று (23.09.2013) திங்கட் கிழமை பி.ப 3 மணியளவில் வவுனியா தவசி குளத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, வேப்பங்குளம் புனித சூசை யப்பர் தேவாலயத்தில் இறுதித் திருப்பலியின் பின்னர் நெளுக் குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

திருவள்ளுவர் வீதி,
தவசிகுளம், வவுனியா. (C/12126)(10.6.3)

தகவல்:
சகோதரிகள், மருமக்கள்.

## 20 இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் கைது

மன்னார்,செப் 23

இலங்கைக் கடல் எல்லைக்குள் சட்ட விரோத மாகப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்ட 20 இந்திய மீனவர்கள் நேற்றுக் கைதுசெய்யப் பட்டனர் எனக் கடற்படையின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

இவர்கள் தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட மீனவர்களின் 04 படகு களையும் கடற்படையி னர் கைப்பற்றி யுள்ளனர்.

கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட மீன வர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டு, தலை மன்னார் பொலிஸாரி டம் ஒப்படைக்கப்பட் டுள்ளனர். யாழ்ப் பாணம் கடற்பரப்பில் மீன்பிடி யில் ஈடுபட்ட 19 இந்திய மீனவர்கள் அண் மையில் கைதுசெய்யப்பட்டமை குறிப் பிடத்தக் கது. (த)

## 'சலுகைக்கு முடிவும், உரிமைக்கு விடிவும்'

யாழ்ப்பாணம், செப். 23

'சலுகைக்கு முடிவும், உரிமைக்கு விடிவும்' என்ற கோட்பாட்டை ஏற்று தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின் னத்துக்கு வாக்களித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அமோக வெற்றிய டையச் செய்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும் மன மார்ந்த நன்றி களைத் தெரிவித்திருக்கிறார். தமி ழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் சி.வீ. கே. சிவஞானம். (ஒ)

### தவறவிடப்பட்டுள்ளது

21.09.2013 அன்று மல்லாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்த பஸ் பிரயாணத்தின் போது பேஸுடன் Flash ஒன்று(குங்கும நிறம்4GB) தவறவிடப் பட்டுள்ளது. இதில் பல முக்கியமான தரவுகள் அடங்கியுள்ளன. இதைக் கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 350 6501 (31971)(4.6.6)

## தேர்தல் நடந்த மாகாணங்களில் ஊர்வலங்கள், கூட்டங்கள் தடை

கொழும்பு,செப் 23

தேர்தல் நடைபெற்ற மாகாணங் களில் நேற்று முதல் ஒரு வாரத் துக்குக் கூட்டங்களையும், ஊர் வலங்களையும் நடத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் தலைமையகம் அறிவித் துள் ளது. குறித்த பகுதிகளில் ஊர்வலங்கள் நடத்தப்படும் பட்சத்தில் சம்பந் தப்பட்டவர்கள் கைது செய்யப் படுவார்கள் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தியட்சகர் புத்திக சிறிவர்த்தன தெரிவித்துள் ளார்.

தேர்தல் நிறைவுபெற்றதன் பின் னர் இதுவரையான காலப் பகுதியில் வடக்கு, மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கு உட்பட்ட பகுதிகளில் எவ்வித அசம்பாவிதங்களும் பதிவாகவில்லை எனவும் பொலிஸ் ஊடகப் பேச் சாளர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மரண அறிவித்தல்

### இரவீந்திரகுமாரக்குருக்கள் விஷ்ணுகா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இரவீந்திரகுமாரக் குருக்கள் விஷ்ணுகா அவர்கள் நேற்று (22.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலை அமரத்துவம் அடைந்து விட்டார்.

அன்னார் இரவீந்திரகுமாரக்குருக்கள் (பிரதமகுரு, ஸ்ரீவல்லிபுரநாதர் தேவஸ்தானம், கோண்டாவில், நல்லூர்) - பத்மசுலோசனா தம்பதியினரின் அன்புப் புத்திரியும், ஸ்ரீதரசர்மா அவர்களின் அன்புத் தமக்கை யாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2013) திங்கட்கிழமை சென். செபஸ்தியார் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று, நண்பகல் 12 மணிக்கு கோண்டாவில் கொட்டைக்காடு மயானத் திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சென். செபஸ்தியார் வீதி,
கோண்டாவில் கிழக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.
077 726 5941

A/L பின்னர் நிகழ்
HND கல்வியினை
அனுபவமிக்க விரிவுரையாளர்களிடமிருந்து கற்றுக்கொள்ளுங்கள்

edexcel Assured
அனைத்து மாணவர்களுக்கும் EDEXCEL - UK பதிவுகளுக்கான கட்டணம் ரூபா 40,000 இலவசம்
பாடநெறிகள் தொடர்பாகமேலதிக தகவல்களை தெரிந்துகொள்வதற்கு உங்கள் பெயர் மற்றும் பாடநெறியினை கீழுள்ள இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
077 990 5611
ஒரே தடவையில் இரு டிப்ளோமாக்களைப் பெற்றுக்கொள்வதோடு
பட்டப்படிப்பின் இறுதி ஆண்டினை இலவசமாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பு
edexcel HND
Equivalent to the 1st Two Years of a UK Degree
in Computing & Systems Development
in Business Management
நன்மைகள்
- பகுதி நேர அல்லது முழு நேரக்கல்வி
- மறைமுக செலவீனங்கள் இல்லை
- வேலைவாய்ப்புகளுக்கு பரந்த வாய்ப்புக்கள்
- Diploma in English கற்கை நெறியை இலவசமாக கற்றுக்கொள்ளும் வாய்ப்பு
Your Career Pathway
HND 18 Months → Top-up Degree 1 Year → Masters 1 Year
புதிய பிரிவுகள் 2013.09.28 9:00am
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308
NELLIADY BRANCH 151, Jaffna Rd, Nelliady | 021 226 4940
JFFNA 2nd BRANCH 17/1, Brown Rd, Jaffna | 021 750 1120
ESOFT Shaping Lives, Creating Futures.
METRO CAMPUS Sri Lanka's Largest Higher Education Network
50 நாடளாவிய கிளைகள்
www.esoft.lk HOTLINE: 077 309 9 308

ESOFT டிப்ளோமாவிற்கு
சர்வதேச (UK) தரச்சான்றிதழ்
edexcel Assured Only @ ESOFT

DiTEC INTERNATIONAL Diploma in Information Technology
DiWE Diploma in Web Engineering
DiE Diploma in English
DiSE Diploma in Software Engineering
DiBM Diploma in Business Management
International Recognised Courses only @ ESOFT
DiCA Diploma in Computerized Accounting
36+ ஆண்டுகள் ஒருங்கிணைந்த விரிவுரை அனுபவம்
SMS மேலதிக விபரங்களுக்கு to 077 990 56 11
<Fullname> space <Degree> spece <Address>
புதிய பிரிவுகள்
2013.09.25 2013.09.28 காலை 9:00 மணி

FREE Pendrive
ESOFT METRO CAMPUS Sri Lanka's Largest IT Education Network
ESOFT METRO CAMPUS - JAFFNA
No.137, K.K.S Road, Jaffna | Tel: 021 222 4142 | 077 309 9 308
KLINOCHCHI BRANCH 01, Kanagapuram Rd, Kili | 021 228 5444
NELLIADY BRANCH 151, Jaffna Rd, Nelliady | 021 222 4940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
23 . 06 . 1917

மறைவு
16 . 09 . 2011



திதி: சங்கடகரசதுர்த்தி

### திருமதி அன்னம்மா சிதம்பரப்பிள்ளை

எங்கள் அன்புத் தெய்வமே
எத்தனை ஆண்டுகள் கடந்தாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதைவிட்டு அகலாதம்மா
உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

கே.கே.எஸ் றோட், கோண்டாவில்
மேற்கு, கோண்டாவில்
(31970)(6.3.4)

சி.சிவராசலிங்கம்
குடும்பத்தினர்.

---

"தேவ சித்தம், எமது பாக்கியம்
சீவியத்தில் அவர்களை நேசித்தோம்
மரணத்திலும் அவர்களை மறவாதிருப்போம்"

## 6ஆம் மாத நினைவஞ்சலி



அமரர்
### கமலசேகரம் சதீஸ்சேகர் (சதீஸ்)

பிறப்பு: 1973.03.06
இறப்பு: 2013.03.23

இரக்கமுள்ள இயேசுவே!
ஆத்மாக்களை நேசிக்கிறவரே!
தேவரீருடைய திருத்தோளின் காயங்களையும்
தேவரீருடைய மாசில்லா திருத்தாயானவர்
அனுபவித்த வியாகூலங்களையும் பார்த்து
சதீஸ் சேகரின் ஆத்துமத்திற்கு நித்திய மோட்சானந்த
பாக்கியத்தைக் கட்டளையிட்டருளும்.

நெடுந்தீவு கிழக்கில் அவதரித்து - வட்டக்கச்சி, பாரதிபுரம், 155 ஆம் கட்டை, கிளிநொச்சியில் வசித்து, லெபனான் மற்றும் கனடாவில் புலம்பெயர்ந்து வாழ்ந்த எம் அன்பிற்கினிய சதீஸ்சேகர் கடந்த 2013.03.23 அன்று கனடா றொறன்ரோவில் அகால மரணமான செய்திகேட்டு நேரிலும், தொலைபேசி மின்னஞ்சல் மூலமும் எம்முடன் துயர் பகிர்ந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகள்.

(C/12493) (46.3)

நன்றி உணர்வுடன்
தாய் (மங்கை), தந்தை, சகோதரர்கள்.

---

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாட்சி ஆழ்வாப்பிள்ளை



கரவெட்டி வதிரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சி ஆழ்வாப்பிள்ளை நேற்று (22.09.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை- தெய்வானை தம்பதியரின் மகளும், கரவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற சித்தர்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், சித்தர் ஆழ்வாப்பிள்ளையின் அன்பு மனைவியும், வசந்தராணியின் (ஓய்வு பெற்ற எழுதுவினைஞர், யா/வட இந்து மகளிர் கல்லூரி) அன்புத் தாயாரும், காலஞ்சென்ற க. செல்வராசாவின் (ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்) அன்பு மாமியும், சுதர்சன், காந்தீபன், அருநோதயன்- துர்க்காதேவி ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற பார்வதியின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2013) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆலங்கட்டை இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'வசந்தம்'
மாப்புலவு வீதி,
வதிரி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

---

## மனன, துரித கணித போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன

புதுக்குடியிருப்புக் கோட்ட ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களின் திருக்குறள் மனனப் போட்டி துரித கணிதச் செய்கைப் போட்டி ஆகியவற்றின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதனடிப்படையில் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்ற பாடசாலைகளின் விவரம் வருமாறு:

**திருக்குறள் மனனப் போட்டி**

தரம் -1 கோ.கேளரசி-கோம்பாவில் விக்னேஸ்வரா வி., ம.இன்பராஜ்-இரணைப்பாலை றோ.க. ம.வி., அ.டன்சியா-சுப்பிரமணிய வி.

தரம் -2 ம.கோபினா-கோம்பாவில் விக்னேஸ்வரா வி., த.கிபன்சிகா-சுப்பிரமணியவி., பு.அபிசாஜினி- இரணைப்பாலை.றோ.க.ம.வி.

தரம் -3 ர.கயானா-உடையார்கட்டு அ.த.க.பா., பா.றொபின் சனா-நெத்தலியாறு த.வி., இ.ரதுஷா-சுப்பிர மணிய வி.

தரம் -4 ர.அர்ச்சனா-சுப்பிரமணியவி., சி.ரிலக்ஷி-கோம் பாவில் விக்னேஸ்வரா. வி.,சு.வேணுஜா-புதுக் குடியிருப்பு றோ.க.வி.

தரம் -5 ப.பிரவீனா- ஸ்ரீ சுப்பிரமணிய.வி., அ.டொமி னிசா - கோம்பாவில் விக்னேஸ்வரா வி., இ.ஜெயமாலினி - உடையார் கட்டு அ.த.க.பா..

**துரித கணிதச் செய்கைப் போட்டி**

தரம் -2 ச.தாயுதா - நெத்தலியாறு த.வி., தூ.சாதுரிஜா - ஸ்ரீ சுப்பிரமணிய வி., பு.திசாகரன் - உடையார் கட்டு அ.த.க.பா.,

தரம் -3 கி.லதுர்சன் - விசுவநாதர் ஆரம்ப பா., சி.அபிதா- உடையார் கட்டு அ.த.க.பா., அ.டனுசாயினி - இரணைப்பாலை றோ.க.ம.வி.

தரம் -4 பி.நிலாப்பிரியன் - உடையார் கட்டு அ.த.க.பா., ர.அர்ச்சனா - ஸ்ரீசுப்பிரமணிய வி., ச.தமிழ்நிலா - தேராவில் த.வி.

தரம் -5 க.மகிந்தன் - நெத்தலியாறு த.வி., து.புருசோத்துமன் - கோம்பாவில் விக்னேஸ்வரா வி., க.டிலக்ஷிகா - விசுவநாதர் ஆரம்பப் பா. (ந)

---

## மரண அறிவித்தல்

திருமதி
### வசந்தா அற்புதவிநாயகன்



மாதகலைப் பிறப்பிடமாகவும் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வசந்தா அற்புதவிநாயகன் நேற்று (22.09.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வயித்திலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் வள்ளியம்மை (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும், சரவணமுத்து அற்புதவிநாயகனின் (ஓய்வுநிலை தபாலதிபர் -இலங்கை நாடாளுமன்றம்) அன்பு மனைவியும், காலஞ்சென்ற சரவணமுத்து (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் தெய்வானைப்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை) தம்பதியரின் அன்பு மருமகளும், செல்வி சமர்த்தனி (Engineer - USA), செல்வி சாம்பவி (பல் மருத்துவம்) ஆகியோரின் பாசமிகு தாயும், வள்ளுவன் (USA), திருமதி வனிதா (India), திருமதி வதனா, ஞானசம்பந்தன் (CBA - Colombo) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி கேதாரகௌரி (USA), ஸ்ரீதரன் (INDIA), திருநாவுக்கரசு, மீனலோஜினி (ஆசிரியை- கொட்டாஞ்சேனை முஸ்லிம் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அருமை மைத்துனியும், குழலினி (பொறியியல் பீடம்), குலரூபினி, மயூரா, காண்டீபன் ஆகியோரின் அன்பு பெரிய தாயும், கௌரி சங்கரனின் பாசமிகு மாமியும், திருமதி இராசமணியின் ஆசைப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (23.09.2013) திங்கட்கிழமை அஞ்சலிக்காக மகிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு, தகனக்கிரியைகள் பிற்பகல் 2 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
011 250 1462
ச. அற்புதவிநாயகன்
(கணவர்)

(C/12094)(10.6.3)

---

## சிகிச்சை பயனின்றி ஆசிரியர் சாவு

ஓட்டோ - மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆசிரியர் சிகிச்சை பயனளிக்காது மூன்றாவது நாள் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் கைதடி முதியோர் இல்லத்தை அண்டிய பகுதியில் கடந்த புதன் கிழமை இடம்பெற்றது. கைதடி தெற்கைச் சேர்ந்த கோபாலகிருஷ்ணன் கமலா தேவி (வயது-51) என்பவரே உயிரிழந்தவராவார்.

இரண்டு பிள்ளைகளின் தாயாரான இவர் நாவற்குழி மகா வித்தியாலயத்தில் கல்வி கற்பிப்பவர். இவரது கணவரும் சுகவீனம் காரணமாக சில வருடங்களுக்கு முன்னர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-4)

## விழிப்புணர்வு வீதி நாடகம்

அச்சுவேலி, செப். 23

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் சிறுவர் உரிமை மற்றும் சிறுவர் பாதுகாப்பை வலியுறுத்தி விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக் குடன் வீதி நாடகம் கிராமம் கிராமாக மேடையேற்றப்படவுள்ளன.

வலி.கிழக்குப் பிரதேச செயலக சிறுவர் மேம்பாடு அபிவிருத்தி மற்றும் முன்பள்ளி சிறுவர் அபிவிருத்தி, சிறுவர் பாதுகாப்பு பிரிவு மூன்றும் இணைந்த நிலையில் வீதி நாடகத்தை தயாரித்து மேடையேற்ற ஏற்பாடு செய்துள்ளன.

(ந-11)

---

## கண்ணீர் அஞ்சலி



யாழ்/திருநெல்வேலி
கிழக்கை (முடமாவடி)
பிறப்பிடமாகவும்,
கொழும்பு
கொட்டாஞ்சேனையை
வசிப்பிடமாகவும் கொண்ட

### பூபாலசிங்கம் ஸ்ரீகுமார்(ஸ்ரீ)

அவர்கள் 20.09.2013 வெள்ளிக்கிழமை காலமாகி விட்டார். அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அருள்மிகு ஞானவைரவரை பிரார்த்திக்கின்றோம்.

இராமலிங்கம் வீதி,முடமாவடி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம். (31954)(4.6.3)

முடமாவடி சனசமூக நிலையத்தினரும்,
தர்மகர்த்தா சபையினரும். அருள்மிகு
ஞானவைரவர் தேவஸ்தானம்.

---

## இதய அஞ்சலிகள்



பிரபல வர்த்தகரும் தொழிலதிபருமான

### பூபாலசிங்கம் ஸ்ரீகுமார்

நேற்று வரை நீயிருந்து
செய்த சேவைகள் பற்பல
ஆலய வளர்ச்சிக்காய்
அள்ளி வழங்கியவனே
ஆற்றாது அழுகின்றோம்.
பிரிவால் துயருறும் குடும்ப துயரில் நாமும்
பங்கேற்பதுடன் ஆத்மா வெள்ளை விநாயகன்
பாதங்களைச் சேர இறைஞ்சுகின்றோம்.

(31960)
(7.6.3)

ஆலய பரிபாலன சபை
அருள்மிகு வெள்ளைப்பிள்ளையார் ஆலயம்
திருநெல்வேலி கிழக்கு.

---

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா சங்கரப்பிள்ளை



யாழ் எழுவைதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா சங்கரப்பிள்ளை கடந்த (19.09. 2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பொன்னம்மா தம்பதியரின் மகளும், ஐயம்பிள்ளை - பார்வதி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான குமாரவேலு, கந்தையா, சதாசிவம் மற்றும் அருணாசலம், நாகேஸ்வரி (மணி-எழுவைதீவு), சந்திரா, கலா, ஜெகன் (கனடா) ஆகியோரின் அன்புச்சகோதரியும், காலஞ்சென்றவர் களான சின்னாச்சி சிவகாமி, கந்தையா, கனகம்மா, மீனாட்சி மற்றும் கனகசபை (கனடா), காலஞ்சென்ற இராசம்மா, மனோன்மணி (கனடா), பேரின்பநாயகி (எழுவை தீவு), காலஞ்சென்ற பாலச்சந்திரன், சண்முகநாதன், அருளம்பலம், தயாளினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.09.2013) திங்கட்கிழமை எழுவைதீவில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கனகலிங்கம்(லிங்கன்-லண்டன்)
மனோன்மணி சதாசிவம் (மைத்துனி கனடா )+14164317436
அருணாசலம் (சகோதரன்- இலங்கை) + 94778994748
நாகேஸ்வரி பாலச்சந்திரன் (சகோதரி-இலங்கை) +94778994639
(31951)(4.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பின் அமோக வெற்றியால் உலகத் தமிழர்கள் பெருமகிழ்ச்சி

## கருணாநிதி பெருமிதம்

யாழ்ப்பாணம், செப். 23
இலங்கையில் இடம்பெற்ற வட மாகாண சபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளமை உலகத் தமிழருக்கு மகிழ்ச்சியாக உள்ளது.
உலகத் தமிழர்கள் விரும்பும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த புதிய ஆட்சியாளர்கள் முயற்சி எடுப்பர் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.
சென்னையில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
தமிழர்களுக்கு தீர்வு பெற்றுக் கொள்ளக் கூடியதாக நடத்தப்பட்ட வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமோகவெற்றி யைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. புதிய உறுப்பினர்களது நல்லாட்சியை வரவேற்கிறோம். அதற்காக மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறோம்.



இதேவேளை, தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவது கண்டிக்கத்தக்கது. இதற்கு மத்திய அரசு நடவடிக்கை எடுக்காமல் மௌனம் சாதிப்பது தமிழகத்தை அவமதிப்பதாக உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (ஒ-14)

# மீனவர் பிரச்சினைக்கு முத்தரப்பு பேச்சு அவசியம்

## நாராயணசாமி கருத்து

சென்னை, செப்.23
தமிழக மீனவர் தாக்கப்படுவது தொடர்பில் நிரந்தர தீர்வுக்கு முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.
சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
தமிழக மீனவர்கள், இலங்கை இராணுவத்தால் தொடர்ந்து தாக்கப்படுவதும், சிறைப் பிடிக்கப்படுவதும் தொடர்கிறது. இதைத் தடுக்க மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இந்த பிரச்சி னைக்கு நிரந்தர தீர்வு காண வேண்டுமானால் தமிழக அரசு, மத்திய அரசு, இலங்கை அரசு ஆகிய முத்தரப்பு பேச்சு நடத்த வேண்டும். அப்போதுதான் இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.
பொதுநலவாய மாநாட்டுக்கு இன்னும் அவகாசம் உள்ளது. தகுந்த நேரத்தில் பிரதமர் மன்மோகன் சிங் உரிய முடிவு எடுப்பார்-என்றார். (வ)

# மஹிந்த பறந்தார் நியூயோர்க்



கொழும்பு, செப். 23
வடக்கு மாகாண சபை மற்றும் மத்திய, வடமேல் மாகாண சபைகளின் தேர்தல் முடிவுகள் பரபரப்பாக வெளியாகிக் கொண்டிருந்த சமயத்தில்-
நேற்று அதிகாலை நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அமெரிக்கா பயணமானார்.
ஐக்கிய நாடுகளின் 68 ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் உரையாற்றுவதற்காகவே அவர் நியூயோர்க் செல்கிறார். நாளை செவ்வாய்க்கிழமை மஹிந்த உரையாற்றுவார் என்று அவரின் பேச்சாளர் மொஹான் சமர நாயக்க தெரிவித்தார்.
இந்தப் பயணத்தின் போது ஜனாதிபதி அரச தலைவர்கள் சிலரையும் சந்தித்து இருதரப்பு பேச்சுக்களை மேற்கொள்ளவுள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார். (ஒ-ச)

# தமிழர் நம்பிக்கையை நிறைவேற்றுங்கள்

## வாழ்த்துச் செய்தியில் திருமா எம்.பி.வலியுறுத்து

சென்னை, செப்.23
ஈழத் தமிழர்கள் அனை வரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் மூலம் அவர்கள் வெளிப்படுத்திவிட்டனர். அந்த ஒற்றுமையை முன் னோக்கி எடுத்துச் செல்வது த.தே.கூட்டமைப்பின் முன்னால் உள்ள சவாலாக உள்ளது. ஈழத்தமிழ் மக்களின் நம்பிக்கையை ஈடேற்றுங்கள் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித்தலைவர் தொல்.திருமாவளவன் தனது வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.
இதுதொடர்பில் அவர் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது :-
இலங்கையில் நடைபெற்ற வடக்கு மாகாணத்துக்கான தேர்தலில் 80 வீத வாக்குகளைப் பெற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. 36 இடங்களில் 30 இடங்களை அது வென்றிருக்கிறது.
இந்தத் தேர்தல் சர்வதேச நிர்ப்பந்தங்களின் காரணமாகவே நடத்தப்பட்டது. தேர்தலை அறிவித்தாலும் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதைத் தடுக்கும் விதமாகப் பல்வேறு இடையூறுகளை இலங்கை அரசு செய்து வந்தது. தமிழர்கள் சுதந்திரமாக வாக்களிக்க அனுமதிக்கப்படவில்லை. அவ்வாறு அனுமதித்திருந்தால் வாக்குப் பதிவு 90 வீதத்தைத் தொட்டிருக்கும்.



தமிழ் மக்கள் தமது கருத்து என்ன என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்து விட்ட னர். இலங்கை அரசின் அடக்கு முறைகளுக்குப் பணியமாட்டோம் எனத் துணிச்சலோடு அறிவித்து விட்டனர்.

எனினும் தமிழ் மக்கள் தமது கருத்து என்ன என்பதை மிகத் தெளிவாகத் தெரிவித்துவிட்டனர். இலங்கை அரசின் அடக்குமுறைகளுக்குப் பணியமாட்டோம் எனத் துணிச்சலோடு அறிவித்து விட்டனர். அதிகாரப் பகிர்வுக்கான அவர்களது வீரம் செறிந்த போராட்டத்தில் இதுவொரு முக்கியமான நிகழ்வாகும்.
சுதந்திரமாகத் தேர்தலை நடத்திவிட்டோம் என சர்வதேசத்தை நம்பவைத்து தம் மீதான அழுத்தத்திலிருந்து தப்பித் துக்கொள்ள ராஜபக்ஷ அரசு முயற்சிக்கும். அதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அனுமதிக் கக்கூடாது. தமிழ் மக்கள் தமக் களித்திருக்கும் இந்த மகத்தான ஆதரவைப் பயன்படுத்தி இலங்கை அரசின்மீதான சர்வதேச நெருக்குதல்களை அது அதிகரிக்கச் செய்யவேண்டும்.
நாளை மறுதினம் நவநீதம் பிள்ளை ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை குறித்து வாய்மொழி அறிக்கை தாக்கல் செய்யவுள்ள நிலையில் த.தே.கூ வின் பணி அவசர முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.
ஈழத் தமிழர்கள் அனைவரும் ஒன்றுபட்டு நிற்கிறார்கள் என்பதை இந்தத் தேர்தல் மூலம் அவர்கள் வெளிப்படுத்திவிட்டனர். அந்த ஒற்றுமையை முன்னோக்கி எடுத்துச் செல்வது த.தே.கூட்டமைப்பின் முன்னால் உள்ள சவால் ஆகும். குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாண மக்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தியாக வேண்டும். அதற்கு த.தே.கூ. முன்முயற்சி எடுக்கவேண்டும். முஸ்லிம் அமைப்புகளும் ஒத்து ழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்- என்றுள்ளது.

# அரசின் சூழ்ச்சித் திட்டத்தை முறியடித்து விட்டனர் தமிழர்கள்

## கூட்டமைப்பின் வெற்றி குறித்து வீரமணி



யாழ்ப்பாணம், செப். 23
தமிழர்கள் மீது இலங்கை அரசு மேற்கொள்ளவிருந்த சூழ்ச்சித் திட்டத்தை முறியடித்து அரசுக்கு எதிராக துணிந்து வாக்களித்து பெரு வெற்றியீட்டியுள்ளனர். இது அரசினுடைய மேலாதிக்கத்தை தடுத்து நிறுத்தக் கூடிய செயலாக அமைந் துள்ளது. இவ்வாறு திராவிட கழகத் தலைவர் வீரமணி தெரிவித்துள்ளார்.
இலங்கையில் இடம்பெற்ற மாகாண சபைத் தேர்தலில் தமிழர்கள் அதிகம் வாழக் கூடிய வடமாகாணத்தில் அவர்கள் மக்கள் மீது இலங்கை அரசு மேற்கொள்ளவிருந்த சூழ்ச்சித்திட்டத்தை துணிந்து முறியடித்துள்ளனர்.
தேர்தலின் போது இடம்பெற்ற இராணுவ மிரட்டல்கள், அச்சுறுத்தல்கள், கெடுபிடிகளுக்கு அடி பணியாது துணிந்து அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளார்கள்.
இலங்கையில் ஜனநாயகம் இல்லை சர்வதிகாரம் மேலோங்கி இருக்கிறது என்று மனித உரிமையாளர் நவநீதம்பிள்ளை நேரடியாக அங்கு சென்று தெரிவித்துள்ள நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றுள்ளமை பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு விடிவைப் பெற்றுத் தரும் என்றார் - வீரமணி. (ஒ-14)

# இழப்புக்கள் வந்தும் வடக்கு மக்கள் தன்னம்பிக்கையை இழந்துவிடவில்லை

## அவர்களின் வெற்றிக்கு காரணம் அதுவே என்கிறார் மஜீத்

கொழும்பு, செப்.23
தொடர்ச்சியாக அடுத்தடுத்து இழப்புக்கள் ஏற்பட்டபோதும் வடக்கு மக்கள் தன்னம்பிக்கையை இழக்கவில்லை. அதுவே அவர்களின் வெற்றிக்குக் காரணம்.-
இவ்வாறு கூறினார் முஸ்லிம் மக்கள் கட்சி தலைவர் மஜீத்.
வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பில் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.
அவர் அந்த அறிக்கையில்-
"மக்களை ஏமாற்றிப் பிழைப்பை நடத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளை மக்கள் நிராகரித்துள்ளனர். மன்னார் மாவட்டம் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் பிடியில் இருந்த போதிலும், அவரால் ஓர் ஆசனத்தை மட்டுமே கைப்பற்ற முடிந்துள்ளது. இதன்மூலம் அவர் மக்களுக்கு என்ன செய்தார் என்பது புலனாகின்றது. இவருடைய செயற்பாடுகள் மக்கள் சேவையை இல்லாது போனால் அடுத்த நாடாளுமன்ற தேர்தலில் அவர் நிலை கேள்விக்குறியாகி விடும்.
இதே நிலைமையே முஸ்லிம் காங்கிரஸுக்கும் ஏற்பட்டுள்ளது. அவர்களால் வடக்கில் ஒரேயொரு உறுப்பினரையே பெற முடிந்தது. இந்த நிலையில் வடக்கு மக்கள் தமது உரிமைப் போராட்டத்தில் வெற்றி கண்டுள்ளனர்." -என்றார். (ஒ-10)



மக்களை ஏமாற்றிப் பிழைப்பை நடத்தும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங் கிரஸ், அகில இலங்கை முஸ் லிம் காங் கிரஸ் போன்ற கட்சி களை மக்கள் நிரா கரித்துள்ளனர்.

# போர்க் கப்பல்கள் இலங்கைக்கு வழங்குவது தவறானது

## ஞானதேசிகன் தெரிவிப்பு

சென்னை, செப்.23
இலங்கைக்கு இன்றைய சூழ்நிலையில் இந்தியா போர்க் கப்பல்கள் வழங்குவது தவறான முடிவு என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது-
சமூக வலைத்தளங்களான டுவிட்டர், பேஸ்புக், யூடியூப் போன்றவற்றின் மூலம் பிரசாரம் செய்தால் அது எளிதில் மக்களை சென்றடையும். இளைஞர்களையும் கவரலாம். எனவே காங்கிரஸின் சாதனை மற்றும் திட்டங்களை சமூக வலைத் தளங்கள் மூலம் பிரச்சாரம் செய்ய காங்கிரஸ் மேலிடம் உத்த ரவிட்டுள்ளது.
அதற்காக தமிழ்நாட்டிலுள்ள காங்கிரஸ் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இன்று சென்னையிலும் அடுத்து கோவை, மதுரை, திருச்சியிலும் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.
தமிழக மீனவர் பிரச் சினைக்கு தீர்வு காண இரண்டு வழி முறைகள் கூறப்பட்டு உள்ளன.



அதில் ஒன்று, இராமேஸ்வரம் கடலை ஆழப்படுத்தி இந்துமகா சமுத்திரத்துக்குச் சென்று மீன்பிடிக்க வழி வகை செய்வது. மற்றொன்று இரு நாட்டு மீனவர் களும் பேச்சு நடத்தி தீர்வு காண்பது.
இலங்கைக்கு மத்திய அரசு இன்றைய சூழ்நிலையில் போர்க் கப்பலை வழங்குவது தவறான முடிவு. இதை மத்திய அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம் - என்றார். (வ)

# தமிழக மீனவர்கள் 20 பேர் கைது

இராமேஸ்வரம், செப்.23
கடலுக்குள் மீன்பிடித்துக் கொண்டிருந்த இராமேஸ்வரம் மீன வர்கள் 20 பேரை இலங்கை கடற்படையினர் மீண்டும் சிறை பிடித்துச் சென்றுள்ளனர்.
இலங்கை படையினர் ஏற்க னவே பிடித்துச் சென்ற மீன வர்களை விடுவிக்கக் கோரி, கடந்த 15 தினங்களாக இரா மேஸ்வரம் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வந் தனர்.
இந்த போராட்டத்தை நேற்று விலக்கிக் கொண்ட மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் 20 பேரை 4 படகுகளுடன் சிறைப் பிடித்து இலங்கை படையினர் மீண்டும் அட்டூழியத்தில் ஈடுபட்டனர். சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களிடம் மன்னார் கடற்படையினர் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (வ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணியின் பொய்யால் விமானம் தரையிறக்கம்

கொழும்பு.செப்.23
கட்டுநாயக்கவிலிருந்து பிரிட்டன் நோக்கிப் பயணித்த ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் பிரிட்டன் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டது. பயணி ஒருவரிடம் குண்டு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து விமானம் ஸ்டான்ஸ்டெட் விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது என்று ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையின் ஊடக மற்றும் பொது முகாமையாளர் தீபால் பெரேரா குறிப்பிட்டார்.



எனினும், அந்தப் பயணி பொய்யாக அச்சுறுத்தல் விடுத்திருந்தமை பின்னர் தெரிய வந்துள்ளது என்று அவர் தெரிவித்தார்.
இந்தச் சம்பவம் தொடர்பில் பயணிகள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். விமானப் பணியாளர்களுடனும் 267 பயணிகளுடனும், பயணித்த இந்த விமானத்தில் இருந்த அனைவரும் பாதுகாப்பாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என்று தீபால் பெரேரா மேலும் கூறினார். (ச)



இஸ்லாமிய பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் செயலமர்வு கல்முனையிலுள்ள அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாகவும் அதற்கான சட்ட வரைபுகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

## காப்புறுதி செயற்றிட்டம் ஒக்டோபரில் ஆரம்பம்

கொழும்பு, செப்.23
'பிள்ளைகளுக்கு நாம் ஆற்றவேண்டிய நற்கருமம் பாதுகாப்பே' என்ற தொணிப் பொருளில் கல்விச் சேவைகள் அமைச்சு நடைமுறைப்படுத்தும் 40 லட்சம் பாடசாலை மாணவர்களைக் காப்புறுதி செய்யும் செயற்றிட்டம் உலக சிறுவர்கள் தினமான எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.
இந்தத் திட்டம் இலங்கை காப்புறுதிக் கூட்டத்தாபனத்துடன் ஒருங்கிணைந்து ஆரம்பிக்கப்படும்.
இந்த செயற்றிட்டத்தின் கீழ் காப்புறுதி செய்யப்படும் பாடசாலை மாணவர்கள் 18 வயது வரையிலும் அந்தக் காப்புறுதிக்கு உரித்துடையவர்கள் என்று கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.
இந்தச் செயற்றிட்டத்துக்கு இத்தாலி, பிரிட்டன் ஆகிய நாடுகளில் வாழும் இலங்கை குடிமக்கள் அனுசரணை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர் என்று கல்விச் சேவைகள் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
காப்புறுதிச் செயற்றிட்டத்துக்குப் பங்களிப்பை வழங்குமாறு அனைத்துப் பாடசாலைப் பிள்ளைகளின் பெற்றோர்களிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## மாணவர் சீருடை துணிகளை இறக்குமதி செய்கின்றது அரசு

அடுத்த ஆண்டில் பாடசாலை மாணவர்களுக்கு தேவைப் படும் சீருடை துணிகளை இறக்குமதி செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.
2014 ஆம் ஆண்டு மாணவி களுக்கு 16, 40, 000 மீற்றர் வெள்ளைத் துணியும் ஆண்களுக்கு 2, 80,000 மீற்றர் வெள்ளை நிற காற்சட்டை துணியும் 2,20,000 மீற்றர் நீல நிறக் காற்சட்டைத் துணியும் தேவைப் படுகிறது என்று கல்விச் சேவைகள் அமைச்சு மதிப்பிட்டுள்ளது.
உள் நாட்டு உற்பத்தியாளர்களுக்குக் கைகொடுப்பதற்காக செம்மைப்படுத்தப்படாத துணித் தொகைகள் இறக்கு மதி செய்யப்பட்டு உள்நாட்டில் செம்மைப் படுத்தப்படவுள்ளது என்று கல்விச் சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரசினுடைய கூட்டங்களுக்கு போக்குவரத்துச் சபை பஸ்கள்

## போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.23
வடக்கு, வடமேல் மற்றும் மத்திய ஆகிய மாகாணங்களில் அரசின் கூட்டங்களுக்கு ஆதரவாளர்களை ஏற்றியிறக்குவதற்கு இலங்கை போக்குவரத்துச் சபையின் 350 பஸ்களுக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளன.
இவ்வாறு அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.
இவ்வாறு செயற்படுவதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சொத்து அல்ல என்று அகில இலங்கை போக்குவரத்து ஊழியர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.
அரசின் இந்த நடவடிக்கையால் சில பஸ்கள் நாளொன்றுக்கு 800 ரூபா என்ற தொகையையே வழங்குகின்றன. அதனால் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இரண்டு மூன்று மாதங்கள் கடந்தும் ஊழியர்கள் மாதாந்தச் சம்பளத்தைப் பெற முடியாத நிலை ஏற்படுவதற்கு அரசு தொடர்ந்தும் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு நட்டங்களை ஏற்படுத்துவதே காரணமாகும் என்று சங்கம் குறிப்பிட்டுள்ளது.

> இலங்கைப் போக்குவரத்துச் சபையானது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சொத்து அல்ல.

எனவே இலங்கைப் போக்கு வரத்துச் சபையின் பஸ்களை அரசின் கூட்டங்களுக்குப் பயன்படுத்தும்போது நிர்ணயிக்கப் பட்ட தொகைகளை வழங்கு வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சங்கம் வேண்டுகோள் விடுத்துள் ளது. (ச-22)

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சோமசுந்தரம் (காட்டர்)

(ஓய்வுபெற்ற தலைமைப் பாதுகாவலர்- புகையிரதநிலையம்)

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சோமசுந்தரம் நேற்று (22.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆவரங்கால் சந்தி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.
0777 336864
0777 570305

## மரண அறிவித்தல்

### நமசிவாயம் சுப்பிரமணியம்

காரைநகர் மொந்திப்புலத்தைப் பிறப்பிடமாகவும் செல்வா வீதி தொல்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சுப்பிரமணியம் நேற்று(22.09.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம்-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சிவமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற குமாரசாமி, செல்லம்மா, சின்னத்துரை, மகேசன் மற்றும் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தவராசா (லீலா ஸ்ரோர்ஸ்), கனகராசா, விமலாதேவி, சரஸ்வதி மற்றும் சிவபாக்கியம் செல்வராசா (பவித்திரா களஞ்சியம்), துரைராசா (சேது களஞ்சியம்), வரதராசா (கரன் ஸ்ரோர்ஸ்), யோகராசா (கஜமுகா ஸ்ரோர்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.09.2013) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அவரது மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

செல்வா வீதி, தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.
077 5122961 (சு.12130)

தகவல்:
பிள்ளைகள்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் சுயநலவாதிகளுக்கு இடமில்லை

### உயர்பீட உறுப்பினர் தெரிவிப்பு

மட்டக்களப்பு.செப்.23
இலங்கை முஸ்லிம்களுக் கென்று ஆரம்பிக்கப் பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் சுய நல வாதிகளுக்கும் கொள்ளையர்களுக்கும் இடமில்லை. அடி மைத்தனம் என்ற அச்சம் இல்லாமல் முஸ்லிம்கள் வாழ வேண்டும். அதற்காக குரல் கொடுப்பவர்கள் மாத்திரம் தான் இந்தக் கட்சியில் இருக்க முடியும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர் யு.எம்.வாஹிட் சேர தெரிவித்தார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:
முஸ்லிம் காங்கிரஸ் ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரைக்கும் முஸ்லிம்களுக்காக ஓங்கி ஒலித்து தைரியமாகவும் திடகாத் திரமாகவும் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்தக் கட்சி யாரையும் வலுக்கட்டாயமாக வெளியேற்ற வில்லை.
பதவிக்காகவும், அற்ப சொற்ப பணத்துக்காவும், கேவலமான சில சலுகைகளுக்காகவும், இன்னும் தன்னைத் தலைவன் என்று மக்கள் அழைக்க வேண் டும் என்ற நப்பாசைக்காகவும் சிலர் பிரிந்து சென்று செயல்பட்டுக் கொண்டு கட்சியை தூசிக்கின்றனர்.
மக்களுக்காகச் சிந்திக்கின்றவர் கள் ஒருபோதும் இக்கட்சியை விட்டு எங்கும் செல்லவில்லை.
அப்படி நல்ல திறமையானவர்களை இந்தக் கட்சி வெளியேற்ற வுமில்லை; வெளியேற்றவும் மாட்டாது.-என்றார். (ச)

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியதேசிகர் சிவசுப்பிரமணியம்



(ஓய்வுபெற்ற மதுவரித் திணைக்களம்)

கோப்பாய் தெற்கு இருபாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியதேசி கர் சிவசுப் பிரமணியம் நேற்று முன் தினம் (21.09.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09. 2013) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தேசிகர் இல்லம் (31976)
கற்பகப்பிள்ளையார் கோயிலடி, இருபாலை, கோப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### செல்லையா பத்மகாந்தன்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

கொடிகாமம் கச்சாய் வீதியைப் பிறப்பிடமாகவும் கணேஷ்வரம் அளவெட்டி கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் செல்லையா பத்மகாந்தன் நேற்று(22.09.2013) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா- வள்ளியம்மாள் தம்பதியரின் மூத்தமகனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், புனிதவதி யின்(ஓய்வு பெற்ற ஆசிரியை, தந்தை செல்வா ஆரம்பப் பாட சாலை, தெல்லிப்பழை) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பத்மாசினிஅம்மாள், பத்மநாதன், பத்மமகிபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(23.09.2013) நண் பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல் லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

கணேஷ்வரம்,
அளவெட்டி கிழக்கு,
அளவெட்டி. (31977)

தகவல்:
திருமதி புனிதவதி பத்மகாந்தன்
(மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைபாதையில் வியாபாரம் செய்தால் சட்ட நடவடிக்கை

## திருமலை நகரசபை எச்சரிக்கை

திருகோணமலை,செப்.23
திருகோணமலை பொதுச்சந்தையில் வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கும் வியாபாரிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட கடைகளில் வியாபாரம் செய்யாது நடைபாதையில் வியாபாரம் செய்வதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று நகரசபை அறிவித்துள்ளது.

திருகோணமலை நகரசபையானது பொதுச்சந்தையில் அமைந்துள்ள கடைகளை அங்கு ஏற்கனவே வியாபாரம் செய்த வியாபாரிகளுக்கு வாடகைக்கு வழங்கி இருந்தது. வியாபார நிலையங்களை வழங்கும் போது அவர்களுக்கு கடையுடன் அமைந்துள்ள முன்பகுதியில் இரண்டு அடி அளவிற்குள் தங்களது வியாபாரப் பொருள்களை பரப்பி வியாபாரம் செய்வதற்கு அனுமதி வழங்கி இருந்தது. ஆனால் பெரும்பாலான வியாபாரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடைகளை மூடி வைத்துவிட்டு பொது மக்கள் நடக்கும் வழிப்பாதைகளில் பொருள்களை பரப்பி வியாபாரம் செய்கின்றனர். அதனால் பொதுமக்கள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர்.

இந்த நடவடிக்கையை நிறுத்தி, தங்களது வியாபாரத் தளங்களில் வியாபாரங்களை மேற்கொள்ளுமாறு நகரசபை பல தடவைகள் வலியுறுத்தியும் வியாபாரிகள் கவனத்தில்கொள்ளவில்லை. இதன் அடிப்படையில் கடந்த 20 ஆம் திகதியுடன் இந்த நடைபாதை கடைகளை அப்புறப்படுத்துமாறும், தவறும் பட்சத்தில் சட்டநட வடிக்கை எடுக்கப்படும் என் றும் நகரசபை அறிவித்தி ருந்தது. வியாபாரத் தளங்க ளுக்கான வாடகை நிலுவை களை எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் செலுத்த வேண் டும் என்றும் நகரசபை கோரியுள் ளது.

எனினும் இன்று வரை வியாபாரிகள் நகரசபையின் அறிவித்தலை கவனத்தில் எடுக்காது தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இந்த நடைபாதை வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து பொதுமக்கள் இலகுவாக தமது சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்ள வழி செய்ய வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

> “பெரும்பாலான வியாபாரிகள் தங்களுக்கு வழங்கப்பட்ட கடைகளை மூடி வைத்துவிட்டு பொது மக்கள் நடக்கும் வழிப்பாதைகளில் பொருள்களை பரப்பி வியாபாரம் செய்கின்றனர்.

# வடக்குத் தேர்தல் குறித்து அமெரிக்காவின் கருத்து



"ஜனநாயகம் என்பது வெறுமனே தேர்தல்களோடு நின்றுவிடுவதில்லை. வடக்கில் உரிய சிவில் நிர்வாகத் தையும், நல்லிணக்க நடைமுறைப் படுத்துவதற்கு இன்னமும் நிறையச்செயலாற்ற வேண்டியுள்ளது" என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

"வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வட மாகாணசபைத் தேர் தல் தொடர் பில் இலங்கையைப் பாராட்டுகின்றோம்" என அமெரிக்கா அறிவித்துள்ளது.

நடைபெற்று முடிந்த வடமாகாண சபைத் தேர்தல் குறித்து கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூது வராலயம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்ப தாவது -

தேர்தல்கள் இடம்பெற்ற மூன்று மாகாணங்களிலும் அதிக எண்ணிக் கையிலான மக்கள் வாக்களிப்பில் பங்கேற்றமையானது ஜனநாயக நடைமுறைக்கு கிடைத்த வெற்றி யாகும்.

தேர்தல் வன்முறைகள் தொடர் பில் நாம் தொடர்ந்தும் கரிசனை கொண்டி ருக்கின்றோம். அதே வேளையில் வெவ்வேறு தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் வெளிப்படை யானதும் சுயாதீனமானதுமான விசாரணைகள் நடத்தப்பட்டு குற்ற மிழைத்தவர்கள் நீதியின் முன் விரைவில் நிறுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றோம்.

சீருடை அணிந்தவர்கள் இந்தச் சம்பவங்களில் சம்பந்தப்பட் டுள்ளனர் என வெளியான தகவல்கள் குறிப்பாக கவலையளிப்பதாகவுள்ளன.

போர் முடிவிற்கு கொண்டுவரப் பட்டு நான்கு ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் வட மாகாணத்தில் உரிய சிவில் நிர்வாகத்தை ஸ்தாபிப்பதற்கும் நல்லிணக்க நடைமுறையை முன்னெடுப்பதற்கும் வன்முறை மற்றும் அச்சு றுத்தல் இன்றிய நடைமுறையானது அவசியமானது.

இதற்கான ஆரம்பமாக இந்தத் தேர் தல்கள் அமைந்துள்ளது. ஜனநாயகம் என்பது வெறுமனே தேர்தல்களோடு நின்று விடுவதில்லை. அனைத்து சமூ கங்களையும் சேர்ந்த இலங்கையர்கள் தமக்கு உரித்துடைய சமாதானத்துட னும் கௌரவத்துடனும் வாழத்தக்க வகையில் இன்னும் அதிகமாகச் செய லாற்ற வேண்டியுள்ளது" எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

## ‘உதயனு’க்காக நின்றவர்கள் விரட்டியடிப்பு

வலி வடக்கு செப் 23
வட மாகாண சபைத்தோதல் முடிவுகளை அறிவதற்காக கடையில உதயன் பத்திரிகை வாங்குவதற்காக காத்திருந்த பொது மக்களை பொலிஸார் விரட்டிய சம்பவம் நேற்றுப் பிற்பகல் மல்லாகம் சந்தியில் இடம் பெற்றது.

வட மாகாண சபைத்தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் விருப்பு வாக்குகள் சம்பந்தமான விவரங்களை தாங்கிய உதயன் பத்திரிகை நேற்று மாலை வெளிவந்தது. அதனை வாங்குவதற்காக சுன்னாகம் கடை ஒன்றில் மக்கள் கூடியிருந்தனர். அப்போது வேறு சிலரால் கூட்டமைப்பின் வெற்றியை யொட்டி பட்டாசு கொளுத்தப்பட்டது. இதனையறிந்து அங்கு வந்த பொலிஸார் உதயன் வாங்க நின்றவர்களை விரட்டி அடித்துள்ளனர். (ங-86)

# கூட்டமைப்பின் வெற்றி நீதியமைச்சர் பாராட்டு

வடக்கு மாகாணத்தில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அமோக வெற்றி பெற்றதையிட்டு பாராட்டு தெரிவிப்பதோடு மூன்று மாகாணங்களிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி நிதித்துவத்தை நிலைநாட்டுவதற்கு வாக்களித்தவர்களுக்கு அந்தக்கட்சியின் தலைவரும் நீதியமைச்சருமான ரவூப் ஹக்கீம மனப்பூர்வமான நன்றி தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் உத்தியோக பூர்வமாக வெளிவந்த பின்னர் அமைச்சர் ஹக்கீம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அரசில் பொறுப்பு வாய்ந்த நீதியமைச்சர் பதவியை வகித்து வரும் எனது தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது மரச்சின்னத்தில் தேர்தலில் தனித்து போட்டியிடுவதற்கு வாய்ப்பளித்தன் ஊடாக, நாம் மூன்று மாகாண சபைகளிலும் வெற்றி பெற்று நாட்டில் ஜனநாயகம் நிலவுகின்றது என்பதை நிரூபித்ததற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மகிழ்ச்சியடைவார் என நம்புகின்றேன்.

வட மாகாண சபை தேர்தலில் வன்னி அரசியல் வாதியொருவரினாலும், அவரது அடிவருடிகளிகளினாலும் மேற்கொள்ளப்பட்ட அச்சுறுத்தல்களுக்கும், அடாவடித்தனங்களுக்கும் மத்தியில் எமது வாக்காளர்கள் தங்களது பெறுமதியான வாக்குகளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கு வழங்கியிருக்கின்றனர்.

அத்துடன் ஜனாதிபதி, தமிழ் மக்களின் சுயநிர்ணயத்திற்கும் உரிமைகளுக்கும் மதிப்பளித்து வடமாகாண சபை தேர்தலை நடாத்த நடவடிக்கை மேற்கொண்டதற்காக அவருக்கு நன்றி தெரிவிப்பதோடு, மூன்று மாகாணங்களிலும் இயன்றவரை தேர்தலை சுமூகமாக நடத்துவதற்கு உதவிய தேர்தல்கள் ஆணையாளர், பிரதி ஆணையாளர், தெரிவத்தாட்சி அதிகாரிகள், அரச ஊழியர்கள், பொலிசார் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன் - என்றுள்ளது. (ங)

# இலங்கையில் ஜனநாயகம் இன்னும் புதைகுழிக்குள்

## நவிப்பிள்ளை காட்டம்



கொழும்பு, செப். 23
“இலங்கையில் போர் முடிந்து நான்கு வருடங்களாகிய நிலையில் ஜனநாயகம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டுள்ளது" என ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை தெரிவித்தார்.

இலங்கைக்கான பயணம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்;
" இலங்கை பயணத்தின் போது ராஜபக்ஷ சகோதரர்களால் நான் மிகவும் அவ மதிப்புக்கு உள்ளானேன். குறிப்பாக மூன்று அமைச்சர் களால் அசௌகரியங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. இவ்வாறான செயற்பாடுகள் எனது இலங்கைப் பயணத்தினை திசை திருப்புவதற்காக மேற்கொள்ளப்பட்டது என்பதை நான் அறிவேன். இலங்கையில் சட்டங்கள் பின்பற்றப்படாமல் ஜனநாயகமற்ற நிலைமையே காணப் படுகின்றது." என்றார்.

ஐ.நாவின் உயர் அதிகாரி ஒருவர் இவ்வாறு பகிரங்கமாக கருத்து வெளியிட்டுள்ளமை இலங்கை குறித்து அதிருப்தி நிலையை தோற்றுவித்துள்ளது. (ங-10)

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி: மாகாண சபைக்கு தெரிவானோர்



கமலேந்திரன் (யாழ்.மாவட்டம்)



அங்கஜன் (யாழ்.மாவட்டம்)

தவநாதன் (கிளிநொச்சி)

# கூட்டமைப்பு பொறுப்புணர்ந்து மக்கள் சேவையாற்ற வேண்டும்

## பிரபா கணேசன் வேண்டுகோள்

யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு ஜனநாயக ரீதியான வெற்றியைப் பெற்றுக் கொண்ட தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு எனது வாழ்த்துக்கள். அதே நேரம் தமது பொறுப்புக்களை எப்படி நிறைவேற்ற வேண்டும் என அவர்கள் திட்டமிடுவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு உள்ளது - என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,
தமிழ் கூட்டமைப்பினர் முழுமையான முறையில் தமது அதிகாரத்தை பிரயோகித்து அரசின் அபிவிருத்திகளுடன் இணைந்து கொள்ள வேண்டும். அதேநேரம் அரசுக்கும் தெளிவான செய்தியை வடக்கு மக்கள் தெரிவித்துள்ளார்கள். அபிவிருத்தி மட்டும் என்பது எமக்கு தேவையானதல்ல. மாறாக நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வே எமது இன்றைய தேவை என்பதை தெளிவுபடுத்தியுள்ளார்கள். இதனை அரசு மனதில் கொண்டு நியாயமாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீரவை முன்வைக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் தமது நிலை உணர்ந்து வாக்களித்த மக்களுக்கான அடிப்படை வசதிகளை ஏற்படுத்த வேண்டும். வெறும் வாய்ப் பேச்சினால் கிடைக்கப்பெற்ற வாக்குகள் நிரந்தரமானவை அல்ல என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும்.- என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஈழத்

டும் என்று அது செயற் பட்டது. எனினும் இடையில் சிறிது காலம் இந்தப் பங்களிப்பில் இருந்து விலகி வெறும் பார்வையாளராக மட்டுமே இந்தியா இருந்து வந்தது. தற்போது போர் முடிவுக்கு வந்த பின்னர் இந்தியா தனது பங்களிப்பை ஆக்கபூர்வமான முறையில் வழங்கி வருவதை நான் உணர்கிறேன். உதாரணமாக 13ஆவது திருத்தத்தில் இலங்கை அரசு சில மாற்றங்களைச் செய்ய முற்பட்ட போது அதில் தலையிட்டு தடுத்து நிறுத்தியது இந்திய அரசு. அத்தோடு இந்தியாவின் கருத்துக்கு உலக நாடுகள் பெரும் மதிப்பை வழங்கி வருகின்றன. எனவே இந்தியாவின் ஒத்துழைப்பை முழுமையாகப் பெற்று இனப் பிரச்சினைக்கான தீர்வை நோக்கி ஒற்றுமையோடும் செயற்பட முடியும். - என்றார். (ங)

### முன்னர்

கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையில் பெறப்பட்ட வெற்றியிலும் பார்க்க மகத்தானது என்று அவர் மேலும் கூறினார்.

" வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் வெற்றியும் சிறப் பானது தான். எனினும் அது தொகுதி வாரியான தேர்தலின் கீழ் கிடைத்த வெற்றி. மாகாண சபைத் தேர்தலில் இப்போது கிடைத்திருக்கும் வெற்றி, விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்கீழ் பெற்ற வெற்றி. இவ்வாறு விகிதாசாரப் பிரதி நிதித்துவத்தின் கீழ் கிடைத்த வெற்றி என்பது நிச்சயம் 1977 இல் பெற்றுக்கொண்ட வெற்றியை விடவும் மேலா னது."

மக்களின் ஜனநாயகத் தீர்ப்பு மிகத் தெளிவாகவே உள்ளது. ஐக்கியமான பிளவு படாத நாட்டுக்குள் பாதுகாப்போடும் சுயமரியாதையோடும் கௌரவத்தோடும் போதிய சுயாட்சியைப் பெற்று தமது நியாயமான அரசியல் பொருளாதார சமூக, கலாசார அபிலாஷைகளை அடை[illegible] இந்த இலக்கை அடைவதற்கு நாம் அர்ப்பணிப்போடு செயற்படும் அதேவேளை, அரசும் தனது பங்களிப்பை முழுமையாக செய்ய வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். இந்தத் தேர்தலின் பெறுபேறுகள் அனைவரும் ஆரோக்கியமான திசையில் பயணிப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை தந்திருக்கிறது.

இந்தத் தேர்தலில் நாம் சந்தித்த பலவிதமான அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் வடமாகாண தமிழ் மக்கள் தெளிவாகவும் துணிவாகவும் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்தி இருக்கிறார்கள். இந்த ஜனநாயகத் தீர்ப்பு மதிக்கப்பட வேண்டும் என அனைவரையும் வற்புறுத்தி கேட்கிறோம்.

எமது மக்கள் முழுமையாக எம்மை ஆதரித்ததற்காக எங்கள் இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளை, அவர்கள் தமது அபிலாஷைகளை அடைவதற்கு எம்மால் முடிந்த அனைத்தையும் மேற்கொள்வோம்" என்றார் சம்பந் தன். (உ)

### சமஷ்டி

பற்றியோ அல்லது கூட்டமைப்பு வெளியிட்டிருந்த தேர்தல் விஞ்ஞாபனம் பற்றியோ அச்சமடையத் தேவையில்லை. ஏனெனில் ஒருபோதும் நாட்டை பிரிக்க நினைக்கவில்லை. சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. உண்மையில் சமஷ்டி என்பது மத்திய அரசும் மாநில அரசும் தங்களுக்கு இடையில் அதிகாரங்களைப்பகிர்ந்து இணைந்து செயற்படும் முறைதான். மத்திய அரசு மேலெழுந்த வாரியான ஆட்சி முறையைக் கவனிக்க மாநில அரசுகள் தங்களைத் தாங்களே கவனித்துக் கொள்ளும் முறைமைதான் சமஷ்டி. நான் சிங்கள மக்களுக்கு சொல்லும் செய்தி என்னவெனில் இந்த விடயம் தொடர்பில் அவர்கள் தமது அரசுக்கு தெளிவுபடுத்த-பாடமெடுக்க வேண்டும். இவ்வாறு அரசியல் வாதிகள் சமஷ்டியை புரிந்துகொள்ளும் வகையில் சிங்கள மக்கள் தெளிவுபடுத்துவார்களேயானால் எதிர்காலத்தில் இரு இனங்களும் இணைந்து வாழ்வதில் ஏதேனும் பிரச்சினை இருக் கும் என்று நான் கருதவில்லை - என்றார். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய மாகாணசபை தேர்தல் முடிவுகள்

## கண்டி மாவட்டம்

**கலகெதர**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | -19,072 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 8,931 |
| ஜனநாயக கட்சி | - 1,548 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 632 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 463 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 97 |

**ஹரிஸ்பத்துவ**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 52,924 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 34,401 |
| ஜனநாயக கட்சி | - 5,216 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2,386 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 1,308 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 242 |

பாத்த தும்பர

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 28,514 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 16,432 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 3,905 |
| ஜனநாயக கட்சி | - 2,855 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1,391 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 512 |
| மலையக மக்கள் முன்னணி | - 70 |

**உடுதும்பர**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 22,225 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 10,782 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 505 |
| ஜனநாயக கட்சி | - 321 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 41 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 28 |

**தெல்தெனிய**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 15,945 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 7,938 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 1,764 |
| ஜனநாயக கட்சி | - 1,632 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 425 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 181 |
| மலையக மக்கள் முன்னணி | - 48 |

**குண்டசாலை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 31,606 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13,136 |
| ஜனநாயக கட்சி | - 6,369 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 1,832 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 1,104 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 511 |

**ஹேவாகெட்ட**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 24,103 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 11,559 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 2,296 |
| ஜனநாயக கட்சி | - 1,408 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1,303 |
| மலையக மக்கள் முன்னணி | - 162 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 144 |

**செங்கடகல**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 23,270 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 16,762 |
| ஜனநாயக கட்சி | - 3,388 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 838 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 635 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 215 |
| மலையக மக்கள் முன்னணி | - 63 |

**மஹநுவர**

| | |
|---|---|
| ஐக்கிய தேசியக்கட்சி | - 10047 |
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 9156 |
| ஜனநாயக கட்சி | - 1741 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 498 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 293 |
| மலையக மக்கள் முன்னணி | - 234 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 221 |

**யட்டிநுவர**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 25,667 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13,973 |
| ஜனநாயக கட்சி | - 4,173 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 842 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 484 |
| ஜனசெத பெரமுன | - 438 |
| ஸ்ரீலங்கா மஹஜன பக்ஷய | - 311 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 94 |

**உடுநுவர**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 23,613 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 19,071 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2,448 |
| ஜனநாயக கட்சி | - 2,422 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 347 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 302 |

**கம்பளை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 34,310 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 21,578 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 3,221 |
| ஜனநாயக கட்சி | - 1,545 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 535 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 389 |
| மலையக மக்கள் முன்னணி | - 341 |

**நாவலப்பிட்டி**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 34,824 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13,358 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 3,490 |
| ஜனநாயக கட்சி | - 2,606 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 701 |
| மலையக மக்கள் முன்னணி | - 360 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 287 |

## மாத்தளை மாவட்டம்

**தம்புள்ளை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 48,505 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 19,144 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 1,539 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 1,235 |
| ஜனநாயக கட்சி | - 806 |
| ஜனசெத பெரமுன | - 123 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 107 |

**லக்கல**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 26,351 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 12,525 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 1,703 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 524 |
| ஜனநாயக கட்சி | - 259 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 44 |

**மாத்தளை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 23,138 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 15,025 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 3,580 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2,994 |
| ஜனநாயக கட்சி | - 1,231 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 814 |

**ரத்தோட்டை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 29,568 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 14,103 |
| இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் | - 5,040 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 2,351 |
| ஜனநாயக கட்சி | - 1,402 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 776 |

## நுவரெலியா மாவட்டம்

**நுவரெலியா மஸ்கெலியா**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 129,672 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 31,446 |
| மலைய மக்கள் முன்னணி | - 17,980 |
| ஜனநாயக கட்சி | - 1,585 |

**கொத்மலை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 33,520 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 9,794 |
| மலையக மக்கள் முன்னணி | - 2,891 |
| ஜனநாயக கட்சி | - 532 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 455 |
| ஈழவர் ஜனநாயக முன்னணி | - 154 |

**ஹங்குராங்கெத்த**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 24,276 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 13,200 |
| மலையக மக்கள் முன்னணி | - 568 |
| ஜனநாயக கட்சி | - 423 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 415 |
| ஈழவர் ஜனநாயக முன்னணி | - 90 |

**வலப்பனை**

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி | - 32,436 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 11,184 |
| மலையக மக்கள் முன்னணி | - 1,878 |
| ஜனநாயக கட்சி | - 472 |
| மக்கள் விடுதலை முன்னணி | - 231 |
| ஈழவர் ஜனநாயக முன்னணி | - 182 |

# வடமேல் மாகாண சபைத் தேர்தல்

## குருநாகல் மாவட்டம்

**கல்கமுவ**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 38,407
- ஐக்கிய தேசியக் கட்சி - 15,584
- மக்கள் விடுதலை முன்னணி - 1,672
- ஜனநாயக கட்சி - 954
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 733

**நிக்கவெரட்டிய**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 40,400
- ஐக்கிய தேசியக் கட்சி - 9,431
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,677
- ஜனநாயக கட்சி - 1,521
- மக்கள் விடுதலை முன்னணி - 1,194

**யாப்பகூவ**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 44,170
- ஐக்கிய தேசியக் கட்சி - 13,353
- ஜனநாயக கட்சி - 2,129
- மக்கள் விடுதலை முன்னணி - 1,959
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 653

**ஹிரியல**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 37,499
- ஐக்கிய தேசியக் கட்சி - 11,749
- ஜனநாயக கட்சி - 2,855
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,850
- மக்கள் விடுதலை முன்னணி - 827

**வாரியபொல**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 33,583
- ஐக்கிய தேசியக் கட்சி - 9,595
- ஜனநாயக கட்சி - 1,381
- மக்கள் விடுதலை முன்னணி - 932
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 295

**பண்டுவஸ்நுவர**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 40,185
- ஐக்கிய தேசியக் கட்சி - 4,667
- ஜனநாயக கட்சி - 1,181
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 915
- மக்கள் விடுதலை முன்னணி - 531

**பிங்கிரிய**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 34,551
- ஐக்கிய தேசியக் கட்சி - 14,255
- ஜனநாயக கட்சி - 2,219
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,460
- மக்கள் விடுதலை முன்னணி - 299

**கட்டுகம்பொல**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 36,703
- ஐக்கிய தேசியக் கட்சி - 11,976
- ஜனநாயக கட்சி - 4,363
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,060

**குளியாப்பிட்டி**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 43,732
- ஐக்கிய தேசியக் கட்சி - 11,171
- ஜனநாயக கட்சி - 3,251
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 2,360
- மக்கள் விடுதலை முன்னணி - 685

**தம்பதெனிய**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 39,242
- ஐக்கிய தேசியக் கட்சி - 11,769
- ஜனநாயக கட்சி - 3,569
- மக்கள் விடுதலை முன்னணி - 1,130
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 451

**பொல்காஹவெல**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 29,440
- ஐக்கிய தேசியக் கட்சி - 10,395
- ஜனநாயக கட்சி - 3,020
- மக்கள் விடுதலை முன்னணி - 907
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 601

**குருநாகல்**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 34,192
- ஐக்கிய தேசியக் கட்சி - 14,291
- ஜனநாயக கட்சி - 2,431
- மக்கள் விடுதலை முன்னணி - 1,601
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,076

**மாவத்தகம**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 32,723
- ஐக்கிய தேசியக் கட்சி - 14,250
- ஜனநாயக கட்சி - 2,488
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,516

**தொடங்கொஸ்லந்த**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 24,170
- ஐக்கிய தேசியக் கட்சி - 10,226
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 2,337
- ஜனநாயக கட்சி - 1,419
- மக்கள் விடுதலை முன்னணி - 1,310

## புத்தளம் மாவட்டம்

**புத்தளம்**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 28,725
- ஐக்கிய தேசியக் கட்சி - 21,526
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 7,905
- ஜனநாயக கட்சி - 586
- தேசிய ஒற்றுமை அமைப்பு - 473
- மக்கள் விடுதலை முன்னணி - 266

**ஆனமடு**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 41,759
- ஐக்கிய தேசியக் கட்சி - 12,547
- ஜனநாயக கட்சி - 1,031
- மக்கள் விடுதலை முன்னணி - 845
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 371

**நாத்தாண்டி**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 25,245
- ஐக்கிய தேசியக் கட்சி - 15,187
- ஜனநாயக கட்சி - 1,951
- ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - 1,462
- மக்கள் விடுதலை முன்னணி - 521

**வென்னப்புவ**
- ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி - 27,660
- ஐக்கிய தேசியக் கட்சி - 19,446
- ஜனநாயக கட்சி - 3,371
- மக்கள் விடுதலை முன்னணி - 481

## பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சி

யாழ்ப்பாணம், செப். 23

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெரு வெற்றி ஈட்டும் என்பதை அறிந்து கொண்ட மக்கள் இரவிரவாக பட்டாசு கொளுத்தி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

தமிழர் அரசு அமைக்கப்படப் போவதை உறுதிப்படுத்திக் கொண்ட பலரும் தமது வாழ்த்துக்களையும் பரிமாறிக் கொண்டனர். இளைஞர், யுவதிகள் முதல் வயோதிபர்கள் வரை இரவு நித்திரை விழித்து தேர்தல் பெறுபேறுகளைக் கேட்பதில் ஆர்வம் காட்டியதாகவும் அவதானிக்க முடிந்தது.

சாவகச்சேரி தொகுதி தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்ட பின்னர் வேட்பாளர் சயந்தனின் சொந்த ஊரான மீசாலை, புத்தூர் சந்தி பகுதிகளில் தொடர்ச்சியாக பட்டாசுகள் , வெடியோசைகள் கேட்ட வண்ணம் இருந்தன.

இதேவேளை நேற்று விஷமக் கும்பலால் விநியோகிக்கப்பட்ட போலி 'உதயன்' பத்திரிகையை அடையாளம் கண்டு, தூக்கி வீசியிருந்த வாசகர்கள் 'உதயன்' பத்திரிகையை வாங்கி வாசிப்பதற்கு முண்டியடித்தனர் என்று எமது பிரதேச செய்தியாளர்கள் பலரும் தொலைபேசியில் தகவல் தந்தனர். (ஒ-9-13-15-17-501)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டைமன்ஸை வீழ்த்தியது நெடியகாடு வி.க.

யாழ்ப்பாணம், செப். 23

ஜங்கரா விளையாட்டுக் கழகம், வடமராட்சி பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் 20/20 மென்பந்து சுற்றுப் போட்டித் தொடரில் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் நெடியகாடு விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

இதில் நெடிய காடு விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெடியகாடு விளையாட்டுக் கழக அணியினர் 15 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் சிறி 22 ஓட்டங்களையும் பிரதீப் 30 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் டைமன்ஸ் விளையாட்டுக்கழக அணி சார்பில் சதீஸ் 3 இலக்குகளையும் பிரதீபன், ரமேஸ் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

126 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியினர் 14 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

இதில் பிரதீபன் 26 ஓட்டங்களையும் சாகி 15 ஓட்டங்களையும் பாபு 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் நெடியகாடு விளையாட்டுக் கழக அணி சார்பில் றஞ்சித் 4 இலக்குகளையும் கிருபா, விஸ்வா ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

(23)

# கரம் காலிறுதியில் யாழ். மாவட்ட அணி

யாழ்ப்பாணம், செப். 23

இலங்கை கரம் சம்மேளனம் நடத்தும் தேசிய மட்ட கரம் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டத்துக்கு யாழ். மாவட்ட கரம் "பி" பிரிவு அணி முன்னேறியது. நேற்று ஞாயிற்றுக் கிழமை கொழும்பு கரம் சம்மேளன மண்டபத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யாழ். மாவட்ட கரம் "பி" பிரிவு அணியை எதிர்த்து சகோதர ரெட் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யாழ். மாவட்ட "பி" பிரிவு கரம் அணி 5:0என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று காலிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (ங-23)



# மின்னல் மனிதனின் முடிவில் மாற்றம்




ரியோ டி ஜெனீரோ ஒலிம்பிக் போட்டிக்குப் பின் தடகளத்தில் இருந்து ஓய்வு பெறும் தனது திட்டத்தை உசைன் போல்ட் மாற்றிக் கொண்டுள்ளார்.

உலகின் மின்னல் மனிதன் என்றழைக்கப்படும் ஜமைக்காவின் உசைன் போல்ட் கடந்த 2009இல் பெர்லினில் நடந்த 100 மீற்றர் 200 மீற்றர் ஓட்டங்களில் உலக சாதனை படைத்தார்.

தவிர, பீஜிங் (2008), லண்டன் (2012) ஆகிய இடங்களில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் 100, 200 மற்றும் 400 மீற்றர் பிரிவுகளில் தொடர்ந்து இரண்டு முறை தங்கம் வென்ற முதல் வீரர் என்ற பெருமை பெற்றார் உசைன்போல்ட்.

27 வயதான உசைன்போல்ட் ரியோ டி ஜெனீரோவில் 2016ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியுடன் ஓய்வு பெறப்போவதாகத் தெரிவித்திருந்தார்.

ஆனால், தற்போது ரசிகர்களின் விருப்பப்படி வரும் 2017 உலக தடகள சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு பின்னரே ஓய்வு பெற முடிவு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது குறித்து உசைன் போல்ட் கூறுகையில், 2016 ரியோ டி ஜெனீரோ ஒலிம்பிக்கிற்கு பின் ஓய்வு பெற திட்டமிட்டு இருந்தேன்.

ரசிகர்கள் இன்னும் சில நாள்கள் என்னை களத்தில் காண அதிகம் விரும்புகின்றனர்.

2017ல் நடக்கும் உலக தடகள சம்பியன்ஷிப் தொடர் வரை போட்டிகளில் பங்கேற்பது சாத்தியம் என்று என் பயிற்சியாளர் கூறிய பின், தொடர்ந்து போட்டிகளில் பங்கேற்கும் முடிவை எடுத்தேன்- என்றார்.

# மஹேலவுக்கு வந்த சோதனை

இலங்கையில் இருந்து புறப்பட்ட நிலையில் கிழக்கு லண்டனில் அவசரமாக தரையிறக்கப்பட்ட வானூர்தியில் இலங்கையின் கிரிக்கட் வீரர் மஹேல ஜெயவர்த்தனவும் பயணித்திருந்தார் என்று இப்போது தெரிய வந்துள்ளது.

குறித்த விமானத்தில் இருந்த பயணிகள் இருவர் மீது ஏற்பட்ட சந்தேகம் காரணமாக வானூர்தி திடீரென தரையிறக்கப்பட்டது.

இந்தநிலையில், நாளை 24 ஆம் திகதி லண்டனில் நடைபெறவிருக்கின்ற முன்னாள் டெஸ்ட் கிரிக்கட் தலைவர்களின் ஒன்று கூடலுக்காக மஹேல ஜயவர்த்தன குறித்த விமானத்தில் பயணத்திருந்தார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.சில மணி நேரத் தாமதங்களுக்கு பின்னர் அந்த விமானம் மீண்டும் புறப்பட்டது.

இதேவேளை, முன்னாள் கிரிக்கட் டெஸ்ட் தலைவர்களின் ஒன்று கூடல் நிகழ்வில் பங்கேற்பதற்காக இலங்கையில் இருந்து அர்ஜுன ரணதுங்க, சனத் ஜெயசூரிய மற்றும் குமார் சங்கக்கார ஆகியோரும் லண்டன் செல்லவுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# முதல் ஆட்டத்திலேயே மும்பை கவிழ்ந்தது

சம்பியன்ஸ் லீக் 20/20 தொடரின் முதலாவது ஆட்டத்தில் நடப்பு ஐ.பி.எல் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் அணியை ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 7இலக்குகளால் வீழ்த்தியது.

ஜெய்ப்பூரில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 20 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது.

ஆரம்பத்தில் இலக்குகளை இழந்த அந்தஅணி, 8.1 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து 43 ஓட்டங்களுடன் தடுமாறியது.

அதன் பின்னர் ரோகித் சர்மா, கெரான் பொலார்ட் இருவரும் சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கி மும்பை இந்தியன்ஸ் அணிக்கு கௌரவமானஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக ரோகித் சர்மா 37 பந்துகளில் 44 ஓட்டங்களையும், கெரான் பொலார்ட் 36 பந்துகளில் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக விக்ரம்ஜீத் மலிக் 24 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும், ஷேன் வொட்சன், ஸ்ருவேர்ட் பின்னி இருவரும் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

143 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றியீட்டியது.

5 ஓட்டங்களுக்கே முதலாவது இலக்கை இழந்த ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி, அதன் பின்னர் 2ஆவது இலக்குக்காக 74 ஓட்டங்களைப் பகிர்ந்தது.

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் மத்திய வரிசை வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வெற்றியைப் பெற்றுக் கொடுத்தனர்.

துடுப்பாட்டத்தில் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி சார்பாக சஞ்சு சம்சொன் 47 பந்துகளில் 54 ஓட்டங்களையும், அஜின்கியா ரஹானே 31 பந்துகளில் 33 ஓட்டங்களையும், ஸ்ருவேர்ட் பின்னி 14 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 27 ஓட்டங்களையும், ஷேன் வொட்சன் 22 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் மும்பை இந்தியன்ஸ் அணி சார்பாக நேதன் கோர்ட்டர் நீல், றிஷி தவான், கெரான் பொலார்ட் ஆகியோர் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.

ஆட்டநாயகனாக ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் விக்ரம் ஜீத் மலிக் தெரிவானார்.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/l எழுதியோர், உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மற்றும் தொழில்தேடுவோர் இணைந்துகொள்ள முடியும்
ஆங்கிலத்தில் ஓரெழுத்து தெரியாதவர்கள் கூட எமது இப் பயிற்சியில் இணைந்து பயிற்சிபெற முடியும்.
பயிற்சி நெறி ஆரம்பம் 25.09.2013 புதன்கிழமை காலை 09.00
10 வருட ஆராய்ச்சியின் மூலம் உருவாக்கப்பட்ட எமது பயிற்சியில் இணைவதன் மூலம் 3 மாதங்களில் தமிழ்போல ஆங்கிலம் பேசமுடியாதிருப்பின் முழுப் பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம் எம்மால் வழங்கப்படும்.
சர்வதேசத்தால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய சான்றிதழுடன் கூடிய கற்கைநெறி.
SAAMSON
Easy Way English
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்ப்பாணம்
077 621 4567

ALLIANCE FRANÇAISE DE JAFFNA
Learn French The French Way
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
France, Canada வுக்கு திருமணம் முடித்து செல்வோர், மாணவர்கள் மற்றும் French கற்கவிரும்பும் யாவரும் (மன்னார், வன்னி மற்றும் வவுனியாவைச் சேர்ந்தவர்களும்) படிக்கிறார்கள். France இல் தொடர்ந்து French கற்பதற்கும் Embassy விடயங்களுக்கும் எமது *Certificate* அவசியமாகும். ஏனெனில் உலகில் French கற்பிப்பதற்கு France அரசாங்கம் அங்கீகரிக்கும் ஒரே நிறுவனம் "AF" மட்டுமே. யாழில் 1976 இல் இருந்து...



- An international language, the language of culture
- A language for education, a language for job market
- A language that is fun to learn

> Just say "*Yes, I can... speak French*"

Fwpg;G: jw;NghJ A/L vLj;j khzth;fSf;F tpNrl mDkjpfs;...
புதிய வகுப்புகளுக்கு உடன் பதிவு செய்யவும் (சனி, ஞாயிறு)
61, Kachcheri-Nallur Road, Jaffna T.P. 021 222 8093
(கச்சேரியை அடுத்து வரும் சந்தியில் அமைந்துள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

2014 தரம் 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது.
☞ வெற்றிச்சிகரம் (10 மாதிரி வினாத்தாள்கள்)
விடைகளோடு விலை ரூ. 200
ஆக்கம் : திருமலை S.கணேசலிங்கம்
☞ வெற்றிக்கு வழிகாட்டி தரம் 4
(12 மாதிரி வினாத்தாள்கள்) விடைகளோடு விலை ரூ. 240
ஆக்கம் : M. சுகந்தன் - யாழ்ற்ரன் கல்லூரி
☞ வெற்றிக்கு வழிகாட்டி தரம் 3
(12 மாதிரி வினாத்தாள்கள்) விடைகளோடு விலை ரூ. 240
ஆக்கம் : திருமதி. இராஜேஸ்வரி - யாழ்ப்பாணம்
☞ புலமைச்சங்கமம்
எல்லா புத்தகசாலைகளிலும் கிடைக்கும்
வெளியீடு : யுனிலங்காஸ் பப்ளிக்கேஷன் 077 6258778

3 தரம்! விலை!!
இப்பொழுது அதி உயர் தரத்திலான டிஜிற்றல் பிறிண்ட் பணர்களை மூன்று விலைகளில் உங்களின் தேவைகளிற்கேற்ப பெற்றுக்கொள்ளுங்கள்.
☆ தொகையான வேலைகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படுகின்றன... ☆
மற்றும் உயர்தர ஓவ்செற் பிறிண்டிங்
- புத்தகங்கள்
- லேபிள்கள்
- துண்டுப் பிரசுரங்கள்
- போஸ்டர்கள்
- அழைப்பிதழ்கள்



ANDRA
DIGITAL PRINTING
379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (உதயன் பணிமனைக்கு அருகில்)
Tel : 0212228929, 0217200000 Mob : 0776622981, 0777481696

FALC FRENCH LANGUAGE CENTRE
CENTRE FOR FRENCH
FRENCH CLASSES
France, Canada, Swiss, Belgium செல்வோர், ஆர்வமுள்ளோர் French கற்று Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட International Certificates இனை பெறலாம்.
ஐரோப்பிய French (DELF) கடந்த Examஇல் வடக்கில் எம் மாணவர்கள் மட்டுமே சித்தி.
ஆசிரியர் : Mr. V. Jegan (Teaching Training in France - 2007) இது வரைக்கும் 726 க்கும் மேற்பட்டோர் எம்மிடம் French கற்றுச் சென்றுள்ளனர்.
உடன் பதியுங்கள்....
No. 23, Palaly Road, ஆரியகுளம், Jaffna.
No. 181, Main Street, Nelliady, Jaffna.
0779 789 456
புதிய பிரிவுகள் விரைவில்...

NEW SCIENCE ACADEMY
Vathiry, Karaveddy.
A/L Day Class
ஆரம்பம்: 23.09.2013 3.30 p.m
இரசாயனவியல்
K. சிவத்திரன் (Part - I), S. தங்கராஜா (Part - II)
பௌதிகவியல்
J. சந்திரப்பிரகாசம் (SP), S. சோதிலிங்கம்
இணைந்த கணிதம்
K. அருளானந்தம், P. விமலநாதன்
உயிரியல்: T. கங்காதரன்
நிர்வாகம்.
(C/12127)(10,6,3)

## யுவராஜ் சிங் மீண்டும் வருவார் – கங்குலி நம்பிக்கை

இந்திய அணியில் மீண்டும் இடம்பெறுவதற்கு யுவராஜ் சிங்குக்குத் தகுதி உள்ளது என்று இந்திய அணியின் முன்னாள் அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் இங்கிலாந்துக்கெதிரான ஒரு நாள் போட்டியுடன் யுவராஜ் சிங் அணியில் இருந்து நீக்கப்பட்டார். அதன் பின் பிரான்ஸ் சென்று தீவிரபயிற்சி மேற்கொண்டு, உடற்தகுதி பெற்றார் யுவராஜ் சிங்.

இந்த நிலையில் மேற்கிந்திய தீவுகள் ஏ அணிக்கெதிரான இந்திய ஏ அணியை வழி நடத்தினார் யுவராஜ். இதில், 1:2 என்று தொடரை இழந்தாலும் யுவராஜ்சிங் இந்த மூன்று போட்டிகளிலும் ஒரு சதம், ஒரு அரை சதம் உட்பட மொத்தம் 224 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார்.

இதனிடையே, இந்தியா வரும் ஆஸ்திரேலிய அணி ஒரு 20/20 மற்றும் 7 ஒருநாள் (ஒக்ரோபர் 10-நவம்பர் 2) போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்கான இந்திய அணித் தேர்வு, வரும் 30ஆம் திகதி நடக்கிறது. இதில், யுவராஜ் சிங் இடம் பெறலாம் எனத் தெரிகிறது.

இது குறித்து கங்குலி கூறுகையில், யுவராஜ் சிங் முன்பு போல முழு வேகத்தில் துடுப்பாட்ட திறனை வெளிப்படுத்தியதை பார்த்தது மகிழ்ச்சியாக இருந்தது என்று கூறினார்.

AFTER AL! CIMA_UK,DIITEC@MCS
1.பரீட்சை பெறுபேறுவரையான காலத்தை பயனுள்ள கற்கைநெறிக்கு!
DIITEC(MSoffice, Web disinging, Hardware,Networking, English)
6 சான்றிதழ்கள்(NVQ level 3, University of Cambrigde,ICDL, MTA, University of colombo)
2.உயர்ந்த தொழில்வாய்ப்பிற்கு CIMA -UK
(3 மாதம், UK பதிவுக்கட்டணம் 16000 ரூபா புலமைப்பரிசில்
3.கணினிப்பொறியிலாளராகி வெளிநாடுகளில் உயர் தொழில்வாய்ப்பைப்பெற்றுக்கொள்ள
MCSE_CCNA(இலங்கை அரசின் ICTA புலமைப்பரிசில்கள்)
புலமைப்பரிசிலிற்கு <NAME> <Course> என type செய்து 772 395 895க்கு sms செய்யவும்.
மேலதிக விபரங்கள் யாழ் பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் உள்ள MCS வளாகத்தில்.

MemoryCard தவறவிடப்பட்டது
கிருபா வீடியோ உரிமையாளரின் புகைப்படங்கள் பல அடங்கிய MemoryCard வேலுப்பிள்ளை வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலைப் பகுதியில் தொலைந்து விட்டது. இதைக் கண்டெடுத்துத் தருபவர்களுக்கு சன் மானம் வழங்கப்படும்.
கிருபா வீடியோ
தொடர்பு: 077 303 9652

தேவை
அலுவலக உதவியாளர் : (பியோன்) (ஆண்/பெண்)
8ஆம் தரம் சித்தியடைந்திருத்தல் வேண்டும் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
வயது : 20 - 36 வரை மட்டுமே.
யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தவர்கள் மாத்திரம் நேரில் வரவும்.
ஞாயிறு ஓய்வு நாளாகும். தினமும் பிற்பகல் 6.30 மணிக்கு கடமை நிறைவுபெறும்.
நேர்முகத் தேர்வு 24.09.2013 பிற்பகல் 5.30 இற்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

A/L CHEMISTRY
சு. சுரேஸ்குமார் ஆசிரியரின் சேதன இரசாயன மாற்றீடும், 3000 M.C.Q புத்தகமும், விளக்கமான விடைகளுடன் இன்று வெளிவந்து விட்டது. நாட்டின் அனைத்து பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கின்றது.
(31974)(10,6,3)
T.P: 077 555 9028

மிகக்குறைந்த விமானக் கட்டணங்கள்
மாதாந்த கொடுப்பனவு முறை

| | |
|---|---|
| கொழும்பு-சென்னை | 1470/=Rtn |
| கொழும்பு-திருச்சி | 1870/=Rtn |
| கொழும்பு-சிங்கப்பூர் | 3050/=Rtn |
| கொழும்பு-மலேசியா | 3350/=Rtn |
| கொழும்பு-மதுரை- | 1640/=Rtn |
| கொழும்பு-லண்டன் | 4550/=Rtn |
| கொழும்பு-பிரான்ஸ் | 9380/=Rtn |
| கொழும்பு-டோகா | 2850/=own |
| கொழும்பு-சுவிஸ் | 8900/=Rtn |



HNB Special Offer for Credit Card holders!
NATION POPULAR TRAVELS & TOURS
www.nationtravels.com
#128,Brown Road,Jaffna 0214920920

கணனி, முகாமைத்துவ, ஆங்கில கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவு ஆரம்பம்
25.09.2013, 28.09.2013 – காலை 10.00மணி
மேலதிக விபரங்களுக்கு: 021 4922 741
IIS INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

A/L இன் பின்னர்... கணினி டிப்ளோமா கற்கை நெறிகள்

| | |
|---|---|
| Diploma in Information Technology | DiTec |
| Diploma in Office Automation | DOA |
| Diploma in Pc Applications | DPCA |
| Adv. Dip. in Hardware & Networking | ADHN |
| Dip. in Video Production & Multimedia | DVPM |
| Dip.in Web Designing & Development | DWD |
| Dip. in Computerized Accounting | DCA |

Tally, JAVA, Internet&E-mail
DMI COMPUTER EDUCATION



75% OFF நேரடிக் கட்டணக் கழிவைப் பெற்று குறைந்த கட்டணத்தில் இணையுங்கள்
☑ அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்.
☑ சர்வதேச அங்கீகாரம் பெற்ற (ISO-9001:2008) CERTIFIED சான்றிதழ்கள்
☑ இலகு தவணைக்கட்டண வசதிகள். ☑ இங்கிலாந்து, இந்திய பாடநூல்கள்.
முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்விக்கு
புதிய பிரிவுகள் ஆரம்பம்.
பிரிவு III - 25/ 9 /2013 9.30 am
பிரிவு IV - 28/ 9 /2013 9.30 am
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கன்னாதிட்டி வீதி, (சுயன்ஸ் ஹோல் அருகாமை) Tel. : 021-22[illegible]403
நெல்லியடி M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel. : 021-226 2470
சாவகச்சேரி No.174, கண்டி வீதி, (HNB வங்கி அருகில்) Tel. : 021-227 0775
சுன்னாகம் No.130, K.K.S. வீதி, (NSB வங்கி அருகில்) Tel. : 021-224 1970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.09.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி
## (23.09.2013)

திதி: சதுர்த்தசி



மண்ணில் 31 . 10 . 1953

விண்ணில் 03 . 10 . 2012

**அமரர் மாணிக்கம் பூபாலசிங்கம்**

(ஓய்வுநிலை முகாமைத்துவ உதவியாளர்)
தேசிய வீட்மைப்பு அபிவிருத்தி அதிகார சபை
யாழ்ப்பாணம்

இல்லறமே நல்லறமாய்
வாழ்வாங்கு வாழ்ந்து
கைலாயம் எய்திவிட்ட- எம்
கருணைக்கடலே
ஓராண்டு கழிந்தாலும்
ஓயவில்லை எம் கண்ணீர்
நீரற்ற குளத்து மீன்போல்
இன்றும் நாம்
நீரின்றி வாடுகிறோம்.
நின் ஆத்மா சாந்தியுற
நிமலனடி வேண்டுகிறோம்
ஓம்...சாந்தி சாந்தி சாந்தி

மணல்பகுதி,
ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

மனைவி(கமலாதேவி)
மகள்(கனிதா)

(31923)(7.6.3)







ஒரு வீட்டின் மிக முக்கியமான பகுதிகளில் ஒன்று அதன் கூரை என்பதால் நாம் எமது புதிய வீட்டினைக் கட்டும்போது கூரைக்கான மிகச் சரியான மூலப்பொருளைத் தேர்ந்தெடுப்பது அத்தியாவசியமாகும். எமது விநியோகஸ்தரும் தச்சுப் பணியாளரும் 'ராம்கோ' கூரை மற்றும் சீலிங் தகடுகளை தெரிவு செய்யுமாறு எமக்கு ஆலோசனைகளை வழங்கியதையிட்டு, நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். எஸ்.எல்.எஸ் (SLS) மற்றும் ஐ.எஸ்.ஓ (ISO) சான்றிதழுடன் கூடிய உயர் தரத்திலான 'ராம்கோ' கூரைத் தகடு உற்பத்திகள் எமது வீட்டை இனியதோர் இல்லமாக மாற்றியுள்ளன.

"சரியானதையே தேர்ந்தெடுங்கள், ஆனந்தமாக வாழுங்கள்"

Sri Ramco Lanka (Private) Limited
441, SG Arcade, 1st Floor, Sri Sangaraja Mawatha, Colombo 10. Sri Lanka.
Tel. +94(0) 11 2471143 - 44, +94(0) 11 4619949 - 59 Fax +94(0) 11 4619979.

Ramco

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
23/09/2013

# பிரமிப்பூட்டும் உடல் ஓவியக் கலை

கல்யாண வீடுகளில் எம்மவர்கள் இரவு முழுவதும் விழித்திருந்து கைகளில் போடும் மருதாணி ஓவியங்கள், இப்போது மேற்கு நாடுகளில் பிரபல்யமாகி அத்துறையில் ஏராளமானோர் கலக்கி வருகின்றனர்.

உடல் ஓவியம் பழங்காலத்தில் மண் அல்லது தாவரங்களின் சாறுகளினால் உண் டாக்கப்பட்டது. அது பல்வேறு முன்னேற் றங்களைத் தாண்டி இன்றைக்கு பச்சை குத்துவது, டாட்டூ போடுவது, தற்கா லிக ஓவி யம், நிரந்தர ஓவியம் என பல்வேறு வடிவங் களை எடுத்திருக்கிறது. சுவாரஸ்யமான விடயம் என்ன தெரியுமா ? நாம் கற்காலம் தொட்டே பயன்படுத்தி வரும் மரு தாணி கடந்த இருபது ஆண்டுகளாக மேலை நாடுகளில் மிகப் பிரசித்தம் !

இந்த உடல் ஓவியங்களுக்கென்று உலக அளவில் போட்டிகளும் நடக்கின்றன. ஆஸ் திரியாவில் நடக்கும் உலக உடல் ஓவிய விழா மிகப் பிரபலம். 1998ஆம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட இந்த ஓவிய விழா வழக்கமாக ஜுலை மாதம் கொண்டாடப்படும். உலகெங்கும் உள்ள மக்கள் உடலில் ஓவியங்கள் வரைந்து கொண்டு வியப்பூட்டு வார்கள். இதில் உலகப் புகழ் ஓவியர்கள் முதல், கத்துக்குட்டிகள் வரை பலரும் கலந்து கொள்வார்கள்.

மனித உடல் ஓவியத்தால் உருவம் மாறி பிரமிப்பூட்டும். உலக அளவில் பல்வேறு கலைஞர்கள் இந்தத் துறையில் தங்கள் முத்திரையைப் பதித்திருக்கிறார்கள். நியூசி லாந்திலுள்ள ஜோனேகர், பிரான்ஸிலுள்ள வெஸ் கிலேன் போன்ற வர்களெல்லாம் இந்த கலையில் வரலாற்றுப் புகழ் பெற்றவர்கள். இப்போது அந்தக் கலையில் பிரபலமாக விளங்கிக் கொண்டிருப்பவர் ஜெஸின்மார்வெடல் எனும் பெண்மணி. "மற்றவர்களை விட வித்தியாசமாய் ஓவியம் வரைய ஆசைப் படுகிறேன்" என்கிறார் இவர். பறவை யாக, இயற்கைக் காட்சி களாக, நவீன ஓவி யங்க ளாக, ஒளிவீசும் படங்களாக இவருடைய கைவண்ணத் தால் உடல்கள் உருமாறு வதை உலகமே வியப்பு டன் பார்க்கிறது. இணை யத்திலும், உடல் ஓவியக் கலை உலகத்திலும் பிரமிப் புடன் உச்சரிக்கப்படும் பெய ராகி இருக்கிறார் ஜெஸின் மார்வேடெல்.







# துபாயை வசீகரிக்கும் தங்கத் தேநீர்

தங்கம் கலந்த தேநீர் முதல் முதலாக துபாயில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்தியா, சீனா மற்றும் மேற்கத்திய நாடு சிலவற்றில் இவ்வாறான தங்கத் தேநீர் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

தங்கம் கலந்த தேநீர் அருந்து வது உடல் நலத்துக்குச் சிறந்தது என்ற நம்பிக்கை காரண மாக இவ்வாறான தேநீருக்குக் கடும் கிராக்கி உள்ளது.

தற்போது இந்த தேநீர் துபாயிலும் பிரபல் யமாகத் தொடங்கியுள்ளது. அங்குள்ள 'மெக்கா ஆர்ட் கபே' என்ற நட்சத்திர விடுதி தங்கத் தேநீரை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் தேநீர் 22 கரட் தங்கம் கலந்து தயாரிக்கப்படுகின்றதாம்.

அந்த நட்சத்திர விடுதியின் நிறுவுநர் இதுகுறித்துக் கூறுகை யில்,

"இந்தத் தேநீர் உடல் நலத்துக்கு நன்மை யானதா என்பதுபற்றி நான் ஆராய வில்லை. இவ்வாறான ஒரு தேநீரை இங்கிலாந்து சென்றிருந்த போது அருந்தினேன். அதன் சுவை நன்றாக இருந்தது. அதை எனது விடுதியில் அறி முகப்படுத்துவது என்று அப்போதே தீர்மானித்தேன்." என்று தெரிவித்தார்.

தங்கத் தேநீர் தயாரிப்பு படி முறைகள் குறித்த விளக்கிய அவர், "இலங்கையில் இருந்து தேயிலை இறக்குமதி செய்யப் பட்டு ஜேர்மனிக்கு அனுப்பப் படுகிறது. அங்கு அவை 22 கரட் தங்கக் கட்டிகாகக் தயாரிக் கப்படுகிறது. பின்னர் மொராக்கோ அனுப்பப்பட்டு தேநீர் சுவை அளிக்கப் படுகிறது.

இந்த தேநீர் அரபு நாட்டினர், மேற்கத்தியர் கள் என அனைத்து தரப்பின ரிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது. இது உடல் நலத்துக்கும் நல்லது" என்று கூறுகின் றார்.

# அதிக விலைக்கு ஏலம் போனது ஹுசேனின் படைப்பு

புகழ்பெற்ற ஓவியர் ஹுசேன் வரைந்த போபால் ஓவியம் லண்டனில் அதிக விலைக்கு ஏலம் போனது. லண்டனின் புகழ்பெற்ற கலைஞர்களின் ஓவியங்கள் ஏலம் விடப்பட்டன. அதில் பிரபல ஓவியர் எம்.எப்.ஹுசைன், 1984ஆம் ஆண்டு இந்தியாவின் மத்திய பிரதேச மாநிலம் போபாலில் நடந்த விஷவாயு சம்பவத்தை மையமாக வைத்து வரைந்த ஓவியம் அதிக விலைக்கு ஏலம் போயுள்ளது. அந்த ஓவியம் 3 இலட்சம் பவுண்ஸுக்கு விற்பனையாகியுள்ளது. இது தவிர ஹைடர் ராஸா, பிரான்சிஸ் நியூட்டன் சூசா ஆகிய கலைஞர்களின் படைப்புகளும் ஏலத்தில் விடப்பட்டன.



# புகைப்பழக்கத்தை விட்டால் நிம்மதியாகத் தூங்கலாம்



புகைப்பிடிக்கும் பழக்கத்தை விட்டால் நிம்மதியாகத் தூங்கலாம் என்று ஆய்வில் தகவல் வெளியாகி யுள்ளது.

புகைபிடிப்பதால் பல்வேறு நோய்களும், அவற்றின் மூலம் உயிரிழப்பும் ஏற்படுகிறது.

புகைபிடிப்பதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

இந்த வகையில், புளோரிடா பல்கலையில் நடத்தப்பட்ட ஓர் ஆய்வில் புகைப்பழக்கத்துக்கும், தூக்கத்துக்கும் தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது.

ஒவ்வொரு சிகரட்டும் 1.2 நிமிட தூக்கத்தைக் கெடுப்பதாக ஆய்வில் கூறப்பட்டுள்ளது.

புகை பிடிப்போரில் 11.9 சதவிகிதம் பேர் சரியான தூக்கம் இல்லாமல் அவதிப்படு வதாகவும், 10.6 சதவீதமானோர் நள்ளிரவில் எழுவதாகவும் ஆய்வு முடிவுகள் தெரி விக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org